பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 11 மார்ச் 2017 | விதி : 39



ஆயிரம் ஆண்டுகளின்
பின் வந்த
அநிருத்தப் பிரம்மராயன்



ஈழத்தமிழரை
இதயத்தால்
நெருங்கியவன்



குருதியில் குளித்த
குமாரபுரம்



ஏன் சுட்டவங்கள்
எங்கட பிள்ளையளை




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயந்தன்

தொடர்கதை

39

# ஆறாவடு



புலிகள் வீட்டிற்குள் புகுந்தபோது அவர்களது கைகளில் துப்பாக்கிகள் எதனையும் கொண்டு வரவில்லை. வெளிச்சம் பரவிய கொஞ்ச நேரத்தில் இரண்டு சைக்கிள்களில் ஜீன்ஸ், சேட்டில் மிகச் சாதாரணமாக வந்திருந்தார்கள். அம்மா கதவைத்திறந்த பிறகு, அவர்கள் மிக ஆறுதலாக உள்ளே வந்தார்கள். "ஆரப்பு நீங்கள், என்ன வேணும்?" என்று அம்மா கேட்டாள்.

"மகனைக் கூப்பிடுங்கோ"

சாவுக்கு இரண்டு சோடி கால்கள் முளைத்து வாயிற்படியில் நிற்பதை இவன் கண்டான். என்ன நடக்கப் போகிறது என்பது ஓரளவுக்குத் தெரிந்து விட்டது. இப்படித்தான் முன்பொரு நாள் தேவபாலுவின் வீட்டின் வாசலிலும் சாவு முறைத்தபடி நின்றது. தலையினுள் என்னவெல்லாமோ மின்னுவதைப் போன்று தோன்றி மறைந்தன. பின் விறாந்தைக் கதவுகளைத் திறந்து பாய்ந்தால் வேலுமாமா வீடு வரும். அதையும் தாண்டினால் தெருவில் ஏறி வயற்காணிக்குள் இறங்கலாம். நீளத்திற்கும் ஓடினால் ஊரைத் தாண்டி விடவும் முடியும். பிறகு...

இவன் வெளியே வந்தான்.

"தம்பி, யாரோ உன்னைத் தேடித்தான் போல..." என்றபடி அம்மா இவனருகில் வந்தாள். அவர்களும் வந்தார்கள். பிஸ்டல்கள் இடுப்பில் செருகப்பட்டு சேட்டால் மறைக்கப்பட்டிருக்கலாம் என்று இவன் நினைத்துக் கொண்டான். சாவுக்கும் இவனுக்கும் இரண்டொரு நிமிட இடைவெளிகள் இருக்கக்கூடுமெனத் தோன்றிய போது கைகள் தன்பாட்டுக்கு உயர்ந்தன. அப்பொழுது விபரீதம் ஏதோ நடக்கப்போவதை அம்மா உணர்ந்தாள்.

"நாங்கள் இயக்கத்தில் இருந்து வாறம்"

என்று அவர்கள் அறிவித்தபோது அம்மா அவர்களுக்கும் இவனுக்குமிடையில் நின்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறத் தொடங்கினாள்.

"அப்பு ராசாக்கள், உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறன். இவன் எதையும் விரும்பிச் செய்யேல்லை.



காலமும் நேரமும் அவனை இப்படி அலைக்கழிக்குது. தயவுசெய்து அவனை விட்டுட்டுப் போங்கோ..." இவனைத் தன் பின்னால் தள்ளி மறைத்துக் கொண்டாள்.

"ஒரு விசாரணை இருக்குது. அவரை எங்களோடை அனுப்பி வையுங்கோ" அவர்கள் அம்மாவிற்குப் புறத்தே நின்ற இவனது கையைப் பிடித்தார்கள். உடல் நடுங்கத் தொடங்கியபோது வார்த்தைகள் அதுபாட்டுக்கு வந்தன.

"உங்களுக்குத் தெரியாத ஒன்றில்லை. ஈ.பி.என்னை பைஃபோர்சாகத்தான் பிடித்தது. அவ சொன்னதைத்தான் நான் செய்தன்"

"அது எங்களுக்குத் தெரியும்" என்றார்கள் வந்தவர்கள். "கொஞ்சப் பேரை அடையாளம் காட்ட வேணும்"

இவன் தலையாட்டிகளை நினைத்தான். புலிகளிடமிருந்து சரணடைந்த அல்லது பிடிபட்ட இளைஞர்களை இந்திய இராணுவம் தலயாட்டிகளாக நியமித்திருந்தது. வீதிச் சோதனைகளில் தலையை மறைத்துவர்கள் தயாராக நின்றார்கள். "கண்டிப்பாக ஒரு புலியத்தன்னும் காட்டிக் கொடுக்க வேண்டும்" என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கக் கூடும். வரிசையில் காத்து நிற்கிற சனங்கள் ஒவ்வொருவராக தலையாட்டிக்கு முன்னால் நின்றார்கள். தலையாட்டி 'ஓம்' என்று மேலும் கீழுமாகத் தலையாட்டினால், நிற்பவர் புலி, இல்லையென்று இடதும் வலதுமாக ஆட்டினால் தப்பித்தார், அவர் பொதுமகன். இப்படியொரு நுட்பமான அறிவியல் முறையை இந்திய இராணுவம் கடைசிவரை பயன்படுத்தியது. காலையிலிருந்து ஒரு புலியைத் தன்னும் பிடிக்காவிட்டால் தலையாட்டிகளுக்கு கலக்கம் பிடிக்கத் தொடங்கிவிடும். ஒப்புக்கு யாரையாவது பார்த்து ஓம் என்று ஆட்ட வேண்டியிருந்தது.

"புலிகளுக்கும் தலையாட்டிகளுக்கான தேவை இருக்கிறது" என இவன் நம்பினான்.

தலையைத் தொங்கப் போட்டபடி நடந்து வந்து சைக்கிளில் ஏறினான். ஒழுங்கையைத் தாண்டும் வரையில் அம்மாவின் ஒப்பாரி கேட்டுக்கொண்டிருந்தது.

போகிற வழியில் புலிகள் சந்திரனையும் கைது செய்தார்கள். இவனை இன்னமும் உயிரோடு பார்த்த பிறகு சந்திரனுக்குப் பயம் தணிந்திருந்தது. ஆளுக்கொடு சைக்கிளில் இவர்கள் ஏற்றப்பட்டார்கள். அப்பொழுது "கோயில் ஐயாவோடையோ அல்லது அதிபரோடையோ இன்றைக்கு வந்து சரண்டராகத்தான் இருந்தனாங்கள்" என்று சந்திரன் சொன்னான்.

நகரின் இரண்டாம் குறுக்குத்தெருவில் மதிற்சுவர்களை மேலும் உயர்த்தி தகரங்களால் வேலியிடப்பட்டிருந்த காணியில் அந்தப் பெரியவீடு இருந்தது. சென்றவாரம் வரைக்கும் இந்தியப் படையினரின் பிரதான தளமாக அது இயங்கியிருந்தது. முன்னே வீதியில் இன்னமும் அகற்றப் படாத மண்மூட்டைக் கூடுகள் வெறிச் சோடிக்கிடந்தன.

இவர்கள் நுழைந்தபோது அங்கு ஏற்கனவே கோயில் ஐயர்கள், பள்ளிக்கூட அதிபர்கள், சேர்ச் பாதிரிகள் சரணடைந்திருந்தார்கள். பருத்த உடம்பினையுடைய புலிகளிலொருவன் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். "நீங்கள் ஊரில சனங்களிட்டை மதிப்பும் மரியாதையும் உள்ள ஆட்கள், நீங்களே இப்படி இந்தியன் ஆமிதான் திறம் எண்டு கதைச்சால் என்ன நடக்கும் எண்டு யோசியுங்கோ.. சனம் என்ன நினைக்கும், அட அதிபரே இப்பிடிச் சொன்னபடியா எண்டுதானே கதைக்கும். என்ன சொல்லுறியள்"

"நீர் சொல்லுறது மெத்தச் சரி தம்பி, இப்ப பாரும், நீர் எப்பிடித் தன்மையா கதைக்கிறீர்... ஆனால் அவங்கள் எங்கை கதைச்சவங்கள், துவக்குத் தானே கதைக்கும் எண்டவங்கள்..." வெற்றிலைச் சிவப்பில் வாயும், சற்றுப் பெருத்த கொட்டைப் பாக்கு அளவில் குடுமியும் உள்ள ஐயர் சொல்லிக்கொண்டிருந்தபோது இவனும் சந்திரனும் அவர்களைக் கடந்து உள்ளே போனார்கள்.

முற்றத்தில் தொடங்கி உள் அறைகள் வரை துரோகிகளால் நிரம்பி வழிந்தது. தெரிந்த முகங்களைக் காண்கின்ற போதெல்லாம் இவன் தலையைக் குனிந்து கொண்டான். வெளித்தரையில் இவர்கள் இருத்தி வைக்கப்பட்டார்கள். "இதில இருங்கோ, அண்ணை வருவார்.."

இவனும் சந்திரனும் உட்கார்ந்தார்கள்.

இவனது கூட்டாளிகளில் தேவபாலுவைத் தவிர்த்து மற்றையவர்கள் ஏற்கனவே அழைத்து வரப்பட்டிருந்தனர். உள்ளே "சொல்லடா நாயே", "சாக விருப்பமோ?", "எங்களுக்கு எல்லாம் தெரியும்" முதலான வார்த்தைகள் கடூரமாக ஒலித்தவண்ணம் இருந்தன. ஒன்றிரண்டு தூசண வார்த்தைகளையும் கேட்டனர். சந்திரன் காதுக்குள் கிசுகிசுத்தான். "உனக்கு ஞாபகம் இருக்குதா, அரியாலைச் சுடலைக்குள்ளை எங்களைச் சுடக் கொண்டுபோக முதலும் இப்படித்தான் வரிசையில் இருட்டும் வரைக்கும் இருத்தி வைத்திருந்தார்கள். இப்ப இருட்டிக்கொண்டு வருகுது"

நிலம் இருண்ட பிறகு வீட்டின் கோடியில் ஜெனரேட்டர் இரையத் தொடங்கியது. நிறையப் பேரை எச்சரிக்கையின் பின்னர் திருப்பியனுப்பியிருந்தார்கள். இவர்கள் மீதான விசாரணையை கட்டையும் கொஞ்சம் தொக்கையுமாக புலிவீரன் இப்படித் தொடங்கினான்.

"நாங்கள் விசாரிச்சு புதுசா ஒன்றையும் உங்களிடம் இருந்து புடுங்கப் போறதில்லை. "ரி என் ஏ" க்கு போன ஆட்கள் எப்பிடிப் போனவையென்று எங்களுக்குத் தெரியும். துவக்கைக் காட்டி வா என்றால் போகத் தானே வேணுமென்ன" கொஞ்சம் தோழமையோடு அவன் பேசுவதாகத் தோன்றிற்று. இவர்களது மூச்சுக்கள் சீராகின.

"ஆனா துவக்கு கையில கிடைச்ச உடன கொஞ்சப் பேர் ஆட்டம் போடத் தொடங்கி விடுவார்கள். அந்த ஆட்டக்காரர்தான் எங்களிடமிருந்து தப்ப முடியாது" என்று அவன் சிரித்தான் பிறகு "நீங்கள் எல்லாம் ஒரே செட்டா? எத்தினை பேர்" என்று கேட்டான்.

"ஏழுபேர், அதில தேவபாலு என்றவர் செத்திட்டார்"

"எங்க நடந்த சண்டையில?"

"சண்டையில இல்லை. வீட்டை பிள்ளையின்ரை பிறந்த நாளுக்குப் போய் நிற்கும்போது இயக்கம் சுட்டது" இவனுக்கு முதலில நீங்கள் சுட்டீர்கள் என்றுதான் வார்த்தைகள் வரப்பார்த்தன. கவனமாகத் தவிர்த்து இயக்கம் சுட்டது என்றான்.

விசாரணையாளன் "ம்...." என்றொரு சொல்லை மட்டும் உதிர்த்துவிட்டு "உங்கடை இடத்திலதானே வெற்றி நிண்டவர். அவர் வீர மரணம் தெரியுமோ" என்று கேட்டான். வெற்றி ஒரு சண்டையில் செத்திருந்த தாக இவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்.

அன்றைய நாளில் முகாமில் இந்திய சிப்பாய்கள் மகிழ்ச்சியை மது அருந்திப் பகிர்ந்துகொண்டார்கள். வெற்றி ஒரு தனி ஆளாக இரண்டு இரண்டரை வருடங்கள் அவர்களுக்குத் தண்ணி காட்டியிருந்தான். வெற்றி என்ற பெயரைத் தவிர எவரும் அவனை அறிந்திருக்கவில்லை.

வீதி ரோந்தில் திடீரென்று பின்னால் போகிற சிப்பாய் கிரேனைட் குண்டு வெடித்து செத்துப்போவான். சனங்களைப் பிடித்து உதைத்து விசாரித்தால் வெற்றிதான் எறிந்துவிட்டு ஓடினான் என்பார்கள். எங்கேனும் சந்திகளில் தலையாட்டியொருவன் தலையில் இரத்தம் வழியக் கிடப்பான். ஊரையே ரவுண்டஅப் செய்து விசாரித்தால் வெற்றிதான் சைக்கிளில் ஏற்றிவந்து சுட்டது என்பார்கள்.

வெற்றிக்கு மட்டும் தனியே குறிவைத்து இந்திய இராணுவம் எத்தனையோ ஒபரேஷன்களை நடத்திவிட்டது. ஒன்றிலும் அவன் அகப்படவில்லை. சுழித்துத் தப்பியோடியிருந்தான். "வெற்றியென்றால் யாரென்றே தெரியாது ஐயா" என்று அப்பாவிகளாகச் சொன்னவர்கள், பனைமரக்கூடல்களிலும் மாந்தோப்புகளிலும் அவனுக்கு களவாகச் சாப்பாடு கொடுத்தார்கள். "அடுத்த முறை வெற்றியைக் காணும்போது முதல் வேலையாய் ஆமிக்கு அறிவிக்கின்றோம்" என்று கற்பூரம் அணைக்காத குறையாக சத்தியம் செய்தவர்கள், அவனது ஒற்றைத் துப்பாக்கியையும் ஒன்றிரண்டு கிரனைட்டுக்களையும் பாதுகாத்துக்கொடுத்தனர். மக்கள் என்ற கடலில் மீனைப் போல அவன் இருந்தான்.

வெற்றிக்குக் கிடைத்திருந்த ஒரு தகவலையடுத்து அந்தச் சண்டை ஆரம்பித்தது. அவன் இந்தியச் சிப்பாய்களோடு மினக்கெட்டதைவிட அதிகமாக அவர்களோடு சேர்ந்து இயங்கிய தமிழ் இளைஞர்களோடு மினக்கெட்டான். அப்படித்தான் அப்பொழுதும் நடந்தது. வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த அவர்களில் நால்வரை வெற்றி வீதி வளைவொன்றில் எதிர் கொண்டான்.

அவனது துப்பாக்கி கொஞ்சம் சன்னங்களை கக்கிய பிறகு வந்தவர்களில் ஒருவன் மட்டும் மதில் பாய்ந்து குதித்தான். மற்றவர்களிலிருந்து இன்னமும் இரத்தம் வடிந்தோடிக்கொண்டிருந்தது. மதிலுக்கு உள்ளே எவருடையதோ வீடு இருந்தது. வெற்றி வீட்டுக்கேற்றை தள்ளித் திறந்து கொண்டு நுழைந்தான். வீட்டில் இருந்தவர்கள் விறைத்துப்போய் நின்றார்கள். பத்துப் பன்னிரண்டு வயதுகளில் தெரிந்த சிறுவன் ஒருவன் தண்ணீர்த் தொட்டியைக் காட்டினான். வெற்றி துவக்கைப் பொஷிசனில் வைத்தபடி தொட்டிக்கு முன்னாள் வந்தான். பின் புறம் சருகுகள் மிதிபடும் சத்தம் கேட்டது.

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 1000 ஆண்டுகளின் பின்வந்த அநிருத்தப் பிரம்மராயன்







"தேச விடுதலை நோக்கிய போராட்டத்தில் சர்வதேச தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இராஜதந்திரி அன்ரன் பாலசிங்கமே. யுத்தத்தை விடவும் அபாயமான சமாதான காலத்தை புலிகள் வெற்றி கொள்ள காரணமாக அமைந்தவர் அன்ரன் பாலசிங்கமே. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது புலிகளின் எல்லைகளை வரையறை செய்வதில் அரசாங்கம் செய்த சூழ்ச்சிகளை இலகுவாக முறியடித்த சாணக்கியராக அன்ரன் பாலசிங்கம் விளங்கினார்

■ **தமிழரசன்**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கடல் கடந்து நாடுகள் பல கண்டு - வென்று - புலிக்கொடி பறக்கவிட்டு ஆட்சி செய்த சக்கரவர்த்தி இராஜராஜ சோழன். அவனின் மகாமந்திரியாக இருந்து - இராஜராஜனை செல்நெறி தவற விடாமலும் - இராஜீக விடயங்களை சிறப்பாகக் கையாண்டும் - நிர்வாகத்தை திடப்படுத்தியும் ஆட்சியின் நீட்சிக்கு வழிவகுத்தவர் அநிருத்தப் பிரம்மராயர்.

மொழி ஆளுமை, தீர்க்க தரிசனப் பார்வை, அரசியல் குறித்த ஆழமான பார்வை, உலகின் போக்கை விளங்கி எடுத்துரைக்கும் திறன், பல் மொழி வித்துவம், சொல்ல வேண்டிய விடயத்தை கூறி அதைத் தட்டாமல் செய்ய வைக்கும் கலை, மனிதர்களை பார்த்தவுடன் எடை போடும் திறன் என்பன அவருக்கு கைவந்த கலை. இதனால்தான் தமிழர்களின் மிகச் சிறந்த இராஜதந்திரியாக அவர் விளங்கினார் எனக் கூறப்படுகின்றது.

அவரின் பின்வந்த பல நூற்றாண்டுகளில் அவ்வாறான இராஜதந்திரி ஒருவர் தமிழர் மத்தியில் தோன்றியிருக்கவில்லை. ஆனால் அத்தகைய இராஜதந்திரியின் அம்சமாக பல நூற்றாண்டுகளின் பின் பிறந்தவர்தான் அன்ரன் பாலசிங்கம். ஈழத்தில் தோன்றிய மிகப்பெரும் இராஜதந்திரி. யுத்த களத்தில் எதிரியுடன் மோதுவதை விட அரசியல் களத்தில் மோதுவதுதான் சவாலானது. அதை விட சவால் நிறைந்த இடம் பேச்சு மேசைதான். அரசியல் களத்தையும் - பேச்சு மேசையையும் வெற்றிகரமாகப் புலிகள் கையாளக் காரணமாக அமைந்தவர் பாலசிங்கமே.

## இளமை வாழ்வு

"பாலா அண்ணை" என விடுதலைப் புலிகளாலும் தமிழ் மக்களாலும் அழைக்கப்பட்டு உலகம் முழுவதும் அறியப்பட்ட அவரின் முழுப்பெயர் அன்ரன் பாலசிங்கம் ஸ்ரனிஸ்லாஸ் என்பதே. 1938 மார்ச் 4 ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்தார். இவரின் தாயார் யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியை சேர்ந்த கிறிஸ்தவர். தந்தையார் மட்டக்களப்பு மண்டூரைச் சேர்ந்த இந்து மதத்தவர். மட்டக்களப்பு வைத்தியசாலையில் பணியாற்றியபோது பல தடைகளை தாண்டி காதல் திருமணம் செய்தவர்கள்.

இவர்களின் மண வாழ்வு சில வருடங்களே நீடித்தது. சிறு குழந்தையாக இருந்தபோதே தந்தையை இழந்தார் பாலசிங்கம். தந்தையை இழந்தபின்னர் அவரின் தாயார் யாழ்ப்பாணம் - வடமராட்சி - கரவெட்டியில் குடியேறினார். மருத்துவத் தாதியான அவர் அம்பன் கிளினிக்கில் பணியாற்றி மகனை வளர்த்தார். ஏ.பி.ஸ்ரனிஸ்லாஸ் என இளம் வயதில் அறியப்பட்ட பாலசிங்கம் திரு இருதயக் கல் லூரியிலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் (தற்போது நெல்லியடி மத்திய கல்லூரி) கல்வி பயின்றார்.

கரவெட்டி - நெல்லியடி பிரதேசங்கள் அன்றைய நாள்களில் கம்யூனிச சித்தாந்திகளின் கோட்டையாக இருந்தது. இதனால் ஸ்ரனிஸ்லாஸும் இடதுசாரி தத்துவத்தில் ஊறித் திளைத்தார். அன்றைய நாளில் கம்யூனிச தலைவராக அறியப்பட்ட பொன். கந்தையாவுடன் உறவையும் பேணியிருந்தார். அடிப்படையில் கத்தோலிக்க மதத்தவராக வளர்க்கப்பட்ட ஏ.பி.ஸ்ரனிஸ்லாஸ் ஆன்மீக - தத்துவவாதியாகவும் இருந்தார். ஆனால் அவர் ஒருபோதும் தன்னுள் மதவாதம் உட்புக அனுமதிக்கவில்லை.

தத்துவ விசாரத்தில் ஈடுபட்ட அவர் புத்தரின் போதனைகளால் ஈர்க்கப்பட்டார். மதத்தை தவிர்த்த ஆன்மீகப் பாதையைத் தெரிவு செய்த அவர் பின்னாளில் மத ரீதியில் தன்னை அடையாளப்படுத்திய ஸ்ரனிஸ்லாஸ் என்ற பெயரைத் தவிர்த்து முதல் பெயர்களான அன்ரன் பாலசிங்கம் அல்லது பாலசிங்கம் என்ற பெயர்களையே பயன்படுத்தத் தொடங்கினார்.

## பத்திரிகை வாழ்க்கை

சிரித்திரன் சுந்தர் என அறியப்பட்ட சிவஞானசுந்தரத்தின் கார்ட்டூன், கருத்தியல்களால் ஈர்க்கப்பட்டு பத்திரிகையாளராக மாறினார். "வீரகேசரி" நாளிதழில் உதவி ஆசிரியராக இணைந்த அன்ரன் பாலசிங்கத்தின் ஆங்கிலப் புலமையால் வெளிநாட்டு செய்திகள், வெளிநாட்டு விவகாரம் சார்ந்த விடயங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். கிராண்ட்பாஸில் குடியிருந்த பாலசிங்கம் இந்நாள்களில் உளவியல், தத்துவம் சார்ந்த நூல்களைத் தேடித் தேடிப் படித்தார். நூல்களை ஆழ்ந்து படிப்பதிலேயே பெரும் பொழுதைப் போக்கியதால் தன் தோற்றத்திலும் ஆடைகளிலும் அவர் கவனம் செலுத்தவில்லை.

இந்தப் போக்குடன் பத்திரிகையாளர் பணியைத் தொடர்ந்த அவரைத் தேடி வந்தது பிரிட்டிஷ் தூதரக மொழிபெயர்ப்பாளர் பதவி. இந்நாளில்தான் தன் தோற்றத்திலும் ஆடைகளிலும் அவர் தீவிர கவனம் செலுத்தினார். உயர் பதவி, எளிதில் கவரும் தோற்றம், எப்போதும் நேர்த்தியான ஆடையுடன் என மயக்கும் மனிதராக வலம் வந்தார். பெற்றோரைப் போலவே மதம் மாறி பேர்ள் இராசரட்ணம் என்பவரை காதல் திருமணம் செய்தார். ஆனால் அவரின் வாழ்விலும் மகிழ்ச்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. பேர்ள் நோயில் விழுந்தார். பிரிட்டிஷ் அதிகாரிகளின் துணையால் மனைவியை அழைத்துக் கொண்டு லண்டன் சென்றார் பாலசிங்கம்.

லண்டனில் மார்க்சிஸ உளவியலில் எம்.ஏ. படிப்பை தொடர்ந்தவர். கலாநிதி பட்டத்துக்கான ஆய்வில் ஈடுபட்டார். அத்தருணத்தில் மனைவி உயிரிழந்தார். இக்காலத்தில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிராக இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தி புரட்சி செய்ய ஆரம்பித்தனர். தீர்க்கமான அரசியல் பார்வையுடைய பாலசிங்கமும் இளைஞர்களின் புரட்சியை அமைதியாகப் பார்க்க ஆரம்பித்தார். இந்தத் தருணத்தில்தான் அவரின் மாணவியும் மருத்துவத் தாதியுமான அவுஸ்திரேலிய ஆங்கிலேயரான அடேல் ஆனை காதல் திருமணம் செய்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையதர வரிசையிலிருந்து...

## தலைதெறிக்க ஓடிய மைத்திரி

01

வடக்கில் போராட்ட நெடி உச்சமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரி பால எதிர்ப்பு தாளாமல் தப்பி ஓடியிருக்கிறார்.

மக்கள் குறைகேள் அலுவலகத்தை திறந்து வைப்பதற்காக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வந்தவரை போராட்டங்களே வரவேற்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய போராட்டங்களைப் பார்த்தவர் "எனக்கு இத்தனை எதிர்ப்புகளா?" என்று கொஞ்சம் திணறித்தான் போனார்.

போராட்டத்தின்போது வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸூக்கும் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தின் போது பொலிஸ் அதிகாரி பயன்படுத்திய கெட்ட வார்த்தைகள் கேட்டவர்களை முகஞ்சுழிக்கச் வைத்தன. கூடவே போராட்டக்காரர்களையும் வசை பாட அவர் தவறவில்லை.

வந்த ஜனாதிபதியும் "போராட்டங்களை நெடுக நடத்தினால் அதற்கு மதிப்பில்லாமல் போய்விடும்" என்று கூறிவிட்டு பின்வாசலால் தப்பிச் சென்று பலாலி முகாமில் இராணுவத்துக்கு நன்றி செலுத்தும் உரை நடத்தி விட்டு சென்று விட்டார்.

இந்தப் விடயங்களை எல்லாம் முகப்புத்தகப் புரட்சியாளர்கள் தங்கள் பதிவுகளில் போட்டு முன் தள்ளிவிட்டனர்.



## பட்டையைக் கிளப்பிய மாணவர்களின் பேச்சு



02

கடந்த வார தொடக்கத்தில் சமூகவலைத் தளங்களை அமர்க்களப்படுத்தியது யாழ். இந்து மாணவர்கள் இருவரின் பேச்சுத்தான்.

கொழும்பு, யாழ். இந்துக் கல்லூரிகளிடையே நடந்த சொல்லாடுகளம் போட்டி அண்மையில் இடம்பெற்றது. "இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய அரசியல் ஆளுமையை இன்றைய தமிழ்த் தலைமைகள் கொண்டுள்ளனவா? இல்லையா?" என்ற தலைப்பில் கொழும்பில் நடந்த இந்தப் போட்டியில் விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.

"ஆளுமை, இல்லை" என்ற தலைப்பில் வாதிட்ட யாழ். இந்து மாணவர்கள் தமிழ்த் தலைமைகளின் ஆளுமையற்ற செயல்களை மேடையில் ஆதாரங்களுடன் பட்டியலிட்டு ஆக்ரோஷமாகப் பேசி பாராட்டுக்களைப் பெற்றனர். அந்த உரை தான் சமூகவலைதளங்களை ஆட்சி செய்தது. இலட்சம் பார்வையாளர்களை தொட்ட அந்த வீடியோ ஆயிரக்கணக்கானோரின் விருப்பை பெற்றதோடு, பகிர்வுகூட ஆயிரத்தைத் தாண்டியது.

எனினும் யாழில் நடந்த போராட்டங்கள் ஏராளமான முகப்புத்தகப் போராளிகளையும் உணர்வாளர்களையும் தூண்டியதால் பதிவுகள் அதிகரித்து மாணவர்களின் பேச்சு அது சார்ந்த பதிவுகள் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டு விட்டது. ஆனாலும் அதிக பார்வையாளர்கள், பகிர்வில் இதன் சாதனையை வேறு எந்தப் பதிவும் முறியடிக்கவில்லை என்றே கூறலாம்.

## பெரும் போர்கள் எழுச்சி

03




யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளிடையே நடக்கும் பெருந் துடுப்பாட்டப் போட்டிகள் கடந்த வாரம் சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்தன.

யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளிடையே 111 ஆவது ஆண்டாக நடக்கும் வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டம், யாழ். இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளிடையே நடக்கும் இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டிகள் சார் விடயங்களே அதிகம் பேசப்பட்டன.

நான்கு கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆதவரவாளர்கள் தங்கள் முகப் புத்தகத்தின் புரொபைல் படங்களை தங்கள் பாடசாலைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் மாற்றிக் கொண்டனர். போட்டி விடயங்கள் தொடர்பாகவும் கடந்த கால வரலாறுகள் குறித்தும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியமை குறிப்பிடத்தக்கது.




ஒருநாள், டிவிகாரன் போன் பண்ணி "ஸேர் சொல்லாடல் எண்டுற நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணத்திலே இருந்து பாடசாலை பெடியள் வாறாங்க நீங்க விருந்தினரா வந்து சிறப்பிக்கணும்" எண்டு கேட்டாங்க.

நானும் பள்ளிக்கூடத்து பச்சிளம் பாலகர்கள் தானே எண்டு நம்பி போனேன்ம்மா. அங்க கொஞ்ச பெடியள் அம்மா, சொன்னா நம்பமாட்ட, மீசை கூட முளைக்கல இன்னும். என்னைய பார்த்து கேள்வி கேட்க தொடங்கினாங்க.

நானும் வழமைபோல அட நம்ம யாழ்ப்பாணத்து முட்டாள் சனம்தானே எண்டு நினைச்சிட்டே என்னோட வழமையான பாணியிலே மென்வலு பேச வெளிக்கிட்டன்.

ஆனா அந்த பயலுகள் கேட்ட கேள்வியெல்லம் செம கேள்விகளம்மா." விசாரிச்சு பார்த்தா அவங்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் எண்டு சொன்னாங்கம்மா.

நான் போனப்போ முதல்ல கொஞ்ச பெடியள்தான் இருந்தாங்கம்மா.



கேள்வியால் என்னை சாகடிச்சிட்டு இருக்கும் போதே அதுல குந்தி இருந்த ஒரு பொடியன் போன் பண்ணி மச்சான் இங்க சுமந்திரன் அல்லக்கை மாட்டி இருக்கு ப்ரீ-யா இருந்தா வாடா எண்டு சொன்னான்.

அதுக்கப்புறம் இன்னும் கொஞ்ச பொடியள் அவங்களால எவ்வளவு முடியுமோ அவ்வளவு கேட்டாங்கம்மா. அதில ஒருத்தன் மட்டும் நாலைஞ்சு பேப்பர்ல நான் முதல்ல சொன்ன எல்லாத்தையும் எழுதிட்டு வந்து கன்னத்தில அடிக்குற போல கேட்டானம்மா.

அவன் கேட்டது கூட வலிக்கலம்மா அவன் பேசும் போது பொடியள் சங்கு சவ்வு கிழியுற அளவுக்கு கை தட்டினாங்கம்மா. அதுதான் தாங்க முடியல. எல்லாம் அந்த டி.வி காரனை சொல்லணும்.இனிமேல் படிச்ச பொடியள் வந்தா என்னைய கூப்பிடாத சம்பந்தன் ஐயாவை கூப்பிடு எண்டு சொல்லணும். சரி சரி நீ போய் மாமனுக்கு சுடுதண்ணி வை.

Kisha Sivaloganathan

## இந்தவார மீம்ஸ் (Meme)




## சுவரில் கொய்தவை

Duvarakan

#பிழையழகு :-
இடதுவலது செருப்புகளை காலமாற்றி அணியும் குழந்தைகள்.

Pirunthapan Ponrasa

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக பாலஸ்தீனச் சிறுவர்கள் கல் எறிந்தார்கள். எங்கள் தேசத்திலும் இன்று இந்தச் சிறார்களின் வெற்றுக் கைகள் உயர்கின்றன.

அந்தக் கைகளுக்குள் பேனாவைக் கொடுப்பதா கற்களைக் கொடுப்பதா என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும்.

இணையவாசிகளுக்கு https://www.facebook.com/puthuvithaieditorial/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# இதுதான் விதியோ...?

நீண்ட நாட்களுக்குப் பின்னர் பாக்குநீரிணைக் கடற்பரப்பு ஒரு மனித உயிரைச் சுவைத்திருக்கிறது. தமிழக மீனவ இளைஞரொருவர் இலங்கைக் கடற்படையின் சுடுகலன்களுக்கு இரையாகி, குண்டடிபட்டு, நடுக்கடலிலேயே உயிரிழந்திருக்கிறார். தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்துவதோ, தமிழக மீனவர்கள் இறப்பதோ இதுவொன்றும் முதற்தடவையல்ல.

புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான போரின் போது 1990 க்கு பின்னர், கடலில் புலிகளின் கையே மேலோங்கி இருந்தது. கடலில் புலிகளின் படகுகளைக் கண்டாலே கடற்படையினருக்கு அடிவயிறு கலங்கும். ஏனெனில் மற்றெந்தக் கடற்படையிடமும் இல்லாதவொரு ஆயுதம் கடற்புலிகளிடம் இருந்தது. வெடிசுமக்கும் படகுகளோடு அலையும் கடற்கரும்புலிகளே அந்த ஆயுதம். அதனால் தமது படகுகள் தவிர்ந்த ஏனைய படகுகளைக் கண்டால் பறந்தோடும் பழக்கம் கடற்படைக்கு இருந்தது.

தமிழர் பிரதேசத்தில் நிலவிய பொருளாதாரத் தடை, போர்ச் சூழல் என்பன காரணமாக சிறிய வள்ளங்கள், கட்டுமரங்கள் என்பவற்றிலேயே வடக்கு பகுதி மீனவர்கள் தொழிலுக்குச் சென்றார்கள். இதனால், எது கடற்புலிகளின் படகு? எது மீனவர் படகு? என இனம்கண்டு கொண்டும் கடற்புலிகளிடம் வாங்கிய அடிகளுக்குப் பழி தீர்க்க தன் குரோதத்தை தமிழ் மீனவர்களிடம் கடற்படை காட்டும். இருப்பினும் தமிழக மீனவர்களின் படகுகள் அளவில் பெரியவனவாகவும், வேகம் கூடியவையாகவும் கடற்புலிகளின் படகுகளை ஒத்த வடிவில் இருப்பதாலும் அவற்றின் பக்கம் இலங்கைக் கடற்படையினர் எட்டியும் பார்ப்பதில்லை. புலிகளும் தமக்கான ஆயுதங்கள், மருந்துகள், உணவுகள் என்பவற்றை இந்தியாவில் இருந்து தருவிக்க, தமிழக மீனவர்களையே பயன்படுத்தியதால், அவர்களும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கரைக்கு வந்து மீன்களைப் பிடிப்பதற்கு தடை போடவில்லை.

ஆனால், போர் முடிந்த பின்னர், எல்லாமே தலைகீழானது. போர்க் காலத்தில் எப்படி இலங்கைக் கரைக்கு வந்து மீன்களை அள்ளிச் சென்றார்களோ, அதேபோல போர் முடிந்த பின்னரும் இலங்கைக் கரைகளை நோக்கி தமிழக மீனவர்கள் படையெடுத்தார்கள். இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை இந்த அத்துமீறல் ஆட்டம் காணச்செய்தது. அத்தோடு, இலங்கையின் இறையாண்மைக்கு விடுக்கப்படும் சவாலாகவும் இந்த அத்துமீறலை கடற்படை கருதியது.

விளைவு? இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூடுகள் அதிகரித்தன. அத்துமீறும் பெருந்தொகையான மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அப்படி இருந்தும் இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் நிற்கவில்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பல மட்டப் பேச்சுக்களும் இடம்பெற்றன, இடம்பெற்றும் வருகின்றன.

இந்த நிலையில் வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழிலுக்காகக் கடல் மடியில் தவழ்ந்த ஒரு இளைஞனைக் கொல்வதென்பது சரியாகாது. வழமைபோல கைது செய்திருக்கலாம். அல்லது எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து கலைத்திருக்கலாம். அதையெல்லாம் விடுத்து அவர்களைக் கொல்வதென்பது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்று.

இந்தச் சம்பவத்தில் இலங்கைக் கடற்படையின் பக்கமே முழுத் தவறும் இருந்தாலும், இந்திய அரசும் மீனவ இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பொறுப்புக் கூறத்தான் வேண்டும். ஏனெனில் ஒரு வல்லரசு தன் நாட்டு மீனவர்கள் எல்லை மீறுவதைக் கண்காணிக்கவும், அயல்நாட்டு கடற்படையிடம் இருந்து பாதுகாக்கவும் தவறுவது தான் இந்தத் துயரங்களுக்கு மூல காரணம். இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டது ஒரு தமிழன் என்பதால் இலங்கையோ, இந்தியாவோ பெரிதாக அலட்டிக் கொள்ளப் போவதில்லை. இனியும் படகுகள் வரத்தான் போகின்றன. வேட்டுக்களை துப்பாக்கிகள் தீர்க்கத்தான் போகின்றன. இது தான் தமிழினத்தின் விதி..!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




வர்சி

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது, தமிழ் மக்களின் வாழ்விடங்களில் பெரும்பாலான பகுதிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் தமது முகாம்களையும், சோதனைச் சாவடிகளையும், பாதுகாப்பு வலயங்களையும் அமைத்த படையினர், அந்த மண்ணுக்குச் சொந்தமான மக்களை அங்கிருந்து விரட்டினர். ஆக்கிரமிப்பாளர்கள் போர் முடிவுற்ற பின்னரும் கூட அந்த இடங்களை விட்டு அகலாதிருக்க, மக்களோ அகதிகளாக நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்க வேண்டியிருந்தது. எனினும் இலங்கை மீது சர்வதேசத்தின் பிடி இறுகத் தொடங்க, கட்டம் கட்டமாகக் காணிகளை விட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. அப்படியிருந்தும் பல பகுதிகளில் உள்ள மக்களின் காணிகளை காலாதிகாலத்துக்கும் தங்களின் பிடியிலேயே வைத்திருக்கவும் படைத்தரப்பு எண்ணியிருந்தது. ஆனால் எவ்வளவு காலத்துக்குத் தான் மக்களும் பொறுமையாக இருப்பார்கள். நில மீட்பு போராட்டங்களில் மக்கள் காட்டிய ஓர்மம், படைத்தரப்பை நிலைகுலையச் செய்து விட்டது. அதனால் வேறுவழியின்றி தமது இருப்பைச் சுருக்கிக் கொண்டு மக்களின் காணிகளில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. ஆனாலும் அப்படி விடுவிக்கப்பட்ட காணிகளில் தன் வன்மத்தையும் கடைசி நேரத்தில் காட்டி விட்டே படையினர் அகன்று சென்றுள்ளனர்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வலிவடக்குக் காணிகளில் இருந்த மக்களின் [illegible] வீடுகள் இடித்து [illegible]ள்ளன.

1990 ஆம் ஆண்டு, இப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், அப்பகுதியில் சொல்லிக் கொள்ளும்படியான எந்தவொரு பெரும் சமரும் நடைபெறவில்லை. அவ்வப்போது சில ஊடுருவித்தாக்குதல்கள் நிகழ்ந்த போதும், அவை படைமுகாம்களுக்கும், விமான ஓடுபாதைக்கும் அண்டிய பகுதிகளிலேயே இடம் பெற்றிருந்தன. அத்தோடு, புலிகளின் ஆட்டிலறி எறிகணைகள் கூடப் பலாலி ஓடுபாதைக்கு அண்மித்த பகுதியை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருந்தது. எனவே பலாலி விமான ஓடுபாதையையும், அதனை அண்டியிருந்த படைத்தளங்களையும் தவிர ஏனைய பகுதிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், போர் தொடாத பகுதிகளாகவே இருந்துள்ளன. எனவே தங்கள் வீடுகள் புல், பூண்டுகள் மண்டிப் பழுதடைந்த நிலையில் இருக்கும் எனவும், அவற்றை சுத்தம் செய்தால் பழையபடி வீடுகளையும் கட்டடங்களையும் பொலிவாக்கி விடலாமெனவும் மக்கள் எண்ணியிருந்தனர். இன்னும் சில வீடுகளை இராணுவ அதிகாரிகள் தமது உத்தியோகபூர்வ இருப்பிடங்களாக அழகுபடுத்தியும் வைத்திருந்தனர்.

அந்த வீடுகளை அப்படியே தங்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரலா மெனவும் மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் கடைசியில் அவர்களுக்கு மிஞ்சியது ஏமாற்றமே. எல்லா வீடுகளும் அடியோடு இடித்து, தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. படையதிகாரிகள் பயன்படுத்திய, கடைசி வரை நல்ல நிலையில் இருந்த வீடுகள் கூட நிர்மூலமாக்கப்பட்டிருந்தன.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் குளித்த குமாரபுரம்



மரீசா டி சில்வா

“என்னைச் சுடுங்கள் ஆனால், தயவு செய்து எனது பிள்ளைகளை கொல்ல வேண்டாம்”, என்று கந்தப்போடி கமலா தேவி கிளிவெட்டி, குமாரபுரத்திலுள்ள தமது வீட்டுக்கு வெளியில் வைத்து இலங்கை இராணுவத்தால் தாம் சுட்டுக் கொல்லப்படுவதற்கு சற்று முன்னதாக அவரது தலைக்கு மேலாக இரு கைகளையும் கூப்பி கெஞ்சியிருந்தார்.

58 ஆவது மற்றும் தெஹிவத்த முகாம்கள் மற்றும் கிளிவெட்டி சோதனைச் சாவடியைச் சேர்ந்த இராணுவத்தினரால் தமிழ் கிராமத்தவர்கள் 26 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட குமாரபுரம் படுகொலையின் 21 ஆம் ஆண்டு நினைவு தினம் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. 6 பெண்களும், 5 ஆண்களும் மற்றும் 13 சிறுவர்களும் (18 வயதிற்கும் குறைந்தவர்கள்) இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு கர்ப்பிணித் தாயும், 15 வயது சிறுமியொருவரும் அடங்குகின்றனர். கொல்லப்படுவதற்கு முன்னதாக அந்த சிறுமி இராணுவ குழுவொன்றினால் கூட்டாக பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேலும் 26 கிராம வாசிகளும் இந்த சம்பவத்தில் கடுமையாக காயமடைந்தனர்.

குமாரபுரத்திலுள்ள தங்களது வீடுகளை துப்பாக்கி சூட்டு சத்தங்கள் நெருங்கி வருவதை கிராமவாசிகள் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி கேட்கும் போது நேரமானது மாலை சுமார் 5 மணியாக இருந்திருக்கும். ஆரம்பத்தில் நாம் பயப்படவில்லை. ஏனெனில், “துப்பாக்கிச் சூட்டு சத்தங்களைக் கேட்டால் பயப்பட வேண்டாம்” என்றும் பறவைகளை நோக்கி அவர்கள் சுடுவார்கள் என்றும் சில தினங்களுக்கு முன்னதாக இராணுவத்தினருடன் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர்கள் எம்மிடம் தெரிவித்திருந்தனர். எனவே, இயல்பாக இருக்குமாறும் எங்களுக்கு எந்தத் தீங்கும் வராது என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்” என்று கந்தப்போடி பிரபாராணி (36 வயது) தெரிவித்தார். துப்பாக்கிச்சூட்டு சத்தங்கள் நெருங்கி வர ஆரம்பித்ததும் அவரது தாயார் அவரை வீட்டுக்குள் ஓடுமாறு சத்தமிட்டுள்ளார். அந்த வீட்டினுள் ஏனைய கிராமவாசிகளும் அடைக்கலம் புகுந்திருந்தனர். வீட்டு சுவரின் வெடிப்பொன்றின் ஊடாக அவர்கள் எட்டிப் பார்த்தபோது சீருடையில் இருந்த பெரும் இராணுவ அணியொன்று அவர்களது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டனர். வெளியில் வருமாறு அவர்களது வீட்டுக்கு வெளியில் இருந்து இராணுவத்தினர் கத்தியதும், தமது பிள்ளைகளின் உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக பிரபாராணியின் தாயார், வீட்டை விட்டு வெளியில் ஓடினார். இராணுவத்தினர் அவரது தாயாரை கொன்ற தன் பின்னர் வீட்டை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியதில் வீட்டினுள் இருந்த பெரும்பாலானோர் காயமடைந்தனர். இதில் ஒரு வயதேயான குழந்தையொன்றும் அடங்கும்.

“எனது கணவர் அப்போதுதான் வேலை முடித்து வீட்டுக்கு வந்திருந்தார். நான் அவருக்கு தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன். அப்போது, அருகிலுள்ள முகாமைச் சேர்ந்த கோப்ரல் கபில எனும் நன்கறிந்த இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரும் அவருடன் வந்திருந்த இன்னுமொருவரும் எமது வீட்டின் வெளிப்புறத்தில் இருந்து எனது கணவரை அழைத்தனர். எனது கணவர் தச்சு வேலை செய்பவர் என்பதால் அவரிடம் தளபாடங்களை பழுது பார்த்துக் கொள்வதற்கோ அல்லது புதிய தளபாடங்களை செய்துகொள்வதற்கோ கபில அடிக்கடி வருவார். அந்த வகையில், அவரை எமக்கு நன்கு தெரியும்” என்று தங்கவேல் மருதாயி (71 வயது) தெரிவித்தார். அவர் வெளியில் சென்று தமது கணவரை எதற்காக அழைக்கிறீர்கள் என்று அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் அவரை நோக்கி கத்தி விட்டு வீட்டின் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். அச்சந்தர்ப்பத்தில் வீட்டினுள் இருந்த அவரது கணவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததுடன், வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த போது 15 நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

தங்கவேல் மருதாயியின் வீட்டில் மறைந்திருந்த ஏனைய பலரும் இந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அதே நேரம், தந்தையொருவரும் 10 வயது பிள்ளையொன்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று அவர் நினைவுகூர்ந்தார்.

நாட்கூலித் தொழிலாளியான அரசரட்ணம் நாகராசா வேலையை முடித்து வீடு திரும்பியிருந்ததுடன், 58 ஆவது மைல் கல்லுக்கு அருகில் குளிக்கச் சென்றிருந்த போது, அவரது கிராமத்தின் பக்கமாகவிருந்து துப்பாக்கிச் சூட்டு சத்தங்களை கேட்டார். அதனையடுத்து உடனடியாக அவர் வீட்டுக்கு ஓடிச் சென்று பார்த்தபோது அவரது வீடு ஏனைய கிராமவாசிகளால் நிரம்பியிருந்ததைக் கண்டார். சுமார் 18 கிராமவாசிகள் அவரது வீட்டில் அடைக்கலம் புகுந்திருப்பதாக பின்னர் அவருக்கு தெரிவிக்கப்பட்டது. “மழை போன்று சோவென துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறுவதை நாம் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆகையால், வீட்டில் இருந்து வெளியில் வருவதற்கு நாம் மிகவும் அஞ்சினோம். எமது வீட்டை நோக்கி 4 இராணுவத்தினர் வருவதை சுவரிலிருந்த வெடிப் பொன்றின் ஊடாக நாம் கண்டோம். எமது வீட்டை அடைந்ததும்,“பர தெமழு, எலியட்ட வரெங்!” (... தமிழனே, வெளியே வா!) என்று வீட்டுக்கு வெளியில் இருந்து அவர்கள் கத்தினர். யாரும் வெளியில் செல்லாததை அடுத்து தகரங்களினால் அமைக்கப்பட்டிருந்த வீட்டின் சுவர் பகுதி மீது இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். “துப்பாக்கி குண்டொன்று எனது இடக்கண்ணினூடாக சென்று மறுபுறமாக வெளியில் வந்தது. எனது அயலவர்கள் என்னை அருகிலிருந்த மருத்துவ நிலையத்திற்கு கொண்டுசெல்ல முயற்சித்தனர். எனினும், செல்லும் இடைவழியில் நாம் மீண்டும் துப்பாக்கிச் சூட்டு சத்தங்களை கேட்டதை அடுத்து அருகிலிருந்த இன்னுமொரு வீட்டுக்குள் ஓடிச் சென்று நுழைந்துகொண்டோம். எனது மனைவியும் மகனும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்ததை நான் அங்கு கேட்கக் கூடியதாக இருந்தது. எனினும், அந்த நேரத்தில் நான் உணர்வற்ற நிலையில் இருந்தமையால் அவர்கள் என்னிடம் என்ன சொல்கிறார்கள் என்பதை என்னால் முழுமையாக உணர்ந்துக்கொள்ள முடிந்திருக்கவில்லை” என்ற அவர் பழைய சம்பவங்களை நினைவுக்கு கொண்டுவர முயற்சித்தார்.

“சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களை நான் கேட்டேன். எனினும், துப்பாக்கிச் சூட்டு சத்தங்களை நாம் அடிக்கடி கேட்பதுண்டு என்பதனால் நான் அதை அந்த நேரத்தில் அவ்வளவாக கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. துப்பாக்கிச் சூட்டு சத்தம் அருகில் நெருங்கி வருவதைப் போன்று தெரிந்ததும், அருகில் இருந்த வீடொன்றுக்கு நான் ஓடினேன். அந்த வீட்டின் அருகில் வந்த இராணுவத்தினர் எம்மை வெளியில் வருமாறு கத்தினர். எம்மில் எவரும் அதை செய்யாததை அடுத்து வீட்டின் கதவை உதைத்துத் திறந்த அவர்கள் எம்மை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். அதில் பெண்ணொருவர் கொல்லப்பட்டார். எனது கணவரின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கி சூடு பட்டதுடன், இன்னுமொருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளானார். அதையடுத்து எம்மை சோதித்து பார்க்க அவர்கள் மீண்டும் வந்தனர். நாம் அனைவரும் நிலத்தில் அசைவற்று படுத்து கிடந்தோம். ஆகவே, நாமும் உயிரிழந்துவிட்டோம் என்றும் அவர்கள் நினைத்திருக்க வேண்டும்” என்று நடராசா தவமணி (50 வயது) அவரது பயங்கரமான அனுபவத்தை விபரித்தார்.

தவமணியின் சகோதரர் வீதிக்கருகில் கடையொன்றை நடத்திவந்தார். அந்த கடையில் இருந்த மக்களை ஓடுமாறு கூறியதை அடுத்து, தவமணியின் சகோதரர் அவரது பிள்ளைகளுடன் தவமணியின் வீட்டுக்கு ஓடினார். “தரையில் கிடந்த எனது கணவரின் வயிற்றுப் பகுதியில் இருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. தம்மை வைத்தியசாலைக்கு கொண்டுசென்று காப்பாற்றுமாறு அவர் எனது சகோதரரிடம் மன்றாடினார். எனினும், வெளியில் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தமையால் எனது சகோதரரால் கணவரை கொண்டுசெல்ல முடிந்திருக்கவில்லை. 2 மணித்தியாலங்களின் பின்னர் எனது கணவர் இறந்துவிட்டார்” என்று அவர் தமது அனுபவத்தை நினைவுகூர்ந்தார்.

அருமைத்துரை புவேந்தினி (96 ஆம் ஆண்டில் அவருக்கு வெறும் 3 வயது மட்டுமே) மற்றும் அவரது சகோதரி பிரியா (அப்போது 7 வயது) ஆகிய இருவரும் தங்களது கர்ப்பிணித் தாய் எப்படிக் கொல்லப்பட்டார் என்ற பேரதிர்ச்சிமிக்க கதையை பகிர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படையினர் அவர்களது வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தியபோது அவர்களது தாயார், புவேந்தினியை தமது கைகளில் ஏந்தியவாறு எழுந்தார். "எங்களது அம்மா அந்த நேரத்தில் 9 மாத கர்ப்பிணியாக இருந்தார். அவரின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி அவர் கொல்லப்பட்டார். அம்மாவின் கைகளில் இருந்த எனது சகோதரியின் இரு கால் விரல்களும் பாதத்தின் ஒரு பகுதியும் சிதறிவிட்டன. நாம் ஒளிந்திருந்த அறையில் 7 கிராம வாசிகள் கொல்லப்பட்டனர். கர்ப்பிணியாக இருந்த எமது அம்மா, அவரது சகோதரி, அக்கம்பக்கத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகள் மற்றும் அவர்களது தாயார் மற்றும் இன்னுமொரு சிறுவன் ஆகியோர் இந்த சம்பவத்தில் கொல்லப் பட்டனர். எனது சகோதரியும், சகோதரனும் நானும் மட்டுமே உயிர்தப்பினோம். எனினும், இந்த துப்பாக்கிச் சூடானது எமது சகோதரியின் பாதத்தையும் எனது சகோதரரின் காலையும் நிரந்தரமாக முடமாக்கியிருந்தது. எனது சகோதரரின் காலானது முழங்கால் பகுதியில் இருந்து கீழாக எலும்பு வழியே பிளவடைந்திருந்தது" என்று பிரியா ஆத்திரத்துடன் தெரிவித்தார். "நான் இருதய பைபாஸ் அறுவைச் சிகிச்சை யொன்றை செய்துகொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், நாம் உயிர்வாழ்வதற்கு போது மான பணமே பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் கிடைக்கிறது. ஆகவே, எம்மால் எப்படி சத்திர சிகிச்சை யொன்றுக்கான செலவை தாங்கிக்கொள்ள முடியும்?" என்றும் பிரியா நம்பிக்கையின்றி கேள்வி எழுப்பினார்.

எவ்வாறிருப்பினும்,கோப்ரல் குமார எனும் இராணுவ வீரர் பற்றி மட்டும் கிராம வாசிகள் பலரும் நல்ல விதமாக பேசினர். குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான 8 பேரில் அவரும் ஒருவராக இருக்கிறார். எனினும், கிராமவாசிகள் பலரது உயிர்களையும் காப்பாற்றுவதற்கு அவர் உதவியதாக கிராம வாசிகள் தெரிவித்தனர்.

உதாரணமாக, கோப்ரல் கபில (இன்னு மொரு இராணுவ வீரர்) பெண்ணொரு வரை கொலை செய்வதற்கு பட்டாக்கத்தி யொன்றை வெளியில் எடுத்த போது குமார அவரை பிடித்து பின்னால் இழுத்துள்ளார். அதன் விளைவாக அவரது பட்டாக்கத்தி சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த கண்ணாடி யொன்றில்பட்டு அது உடைந்தது. அச்சந்தர்ப் பத்தில் சுவரில் இருந்த துளையொன்றின் ஊடாக பாய்ந்த துப்பாக்கி குண்டொன்று பட்டதில் 11 வயது சிறுமியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அத்துடன், 15 வயது சிறுமியொருவர் இராணுவ குழுவொன்றினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை தாம் பார்த்திருந்ததையும் நீதிமன்றத்தில் வைத்து குமார, கிராமவாசிகளிடம் தெரிவித்துள்ளார். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொண்டிருந்த நேரத்தில் அந்த சிறுமி அரி தாகவே உயிருடன் இருந்திருந்ததாகவும் ஆகையால் அந்த சிறுமியை அவ்வாறான தொரு நிலையில் பார்க்க தாங்க முடியாமை யினால் அச் சிறுமியை தாம் சுட்டுக் கொன்று விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். மறுநாள் காலை சிறுமியின் உடலை கிராமவாசிகள் சடலமாக மீட்டிருந்தனர்.

தங்களது திகில் கதையை பற்றிய துணுக்குகள் ஒவ்வொன்றையும் கூறிக் கொண்டு எம்மை சுற்றியிருந்த கிராமவாசி கள் வட்டத்தில் கண்ணையா ராமஜெயம் என்ற வயதானவர் மௌனமாக காத்துக் கொண்டிருந்தார். அனைவரும் உரையாடல் களை முடித்துக் கொண்டு தங்களது கதிரை களையும் எடுத்துக்கொண்டு வீடுகளுக்கு திரும்பியதன் பின்னர் அவர் என்னை மெதுவாக நெருங்கி, "அன்றைய தினம் நான் வேலைக்காக கிராமத்துக்கு வெளியில் சென்றிருந்தேன். நான் வீட்டுக்கு திரும்பிய போது இங்கு பெரும் குழப்பங்கள் ஏற்பட்டி ருந்தன. எனது சகோதரரின் இடத்தில் இருந்து எனது மகன் அதுவரை வீடு திரும்பியிருக்கவில்லை. ஆகவே, நான் அவரை தேடிச்சென்றேன். நான் எனது சகோதரரின் வீட்டுக்குச் சென்ற பார்த்த போது எனது மகனும் சகோதரரும் நிலத்தில் இறந்து கிடந்ததை கண்டேன். அவர்கள் இருவருமே கொல்லப்பட்டிருந்தனர். எனது மகனுக்கு வெறும் 11 வயதுதான் ஆகியிருந் தது. அவரது பெயர் கமலேஸ்வரன். தயவு செய்து எனது மகனின் பெயரை எழுதிக் கொள்ளுங்கள். அவரது பெயர் கமலேஸ் வரன்" என்று தெரிவித்தார்.

சிவில் சமூக மற்றும் உள்ளூர் குழுக்களின் உதவி தாக்குதலை அடுத்து குமாரபுரத்தில் இருந்து தப்பிச்சென்ற 126 கிராமவாசிக ளுக்கு இளைஞர் இந்து அமைப்பு (The Young Men's Hindu Association) திருகோணமலையிலுள்ள நவரட்ணம் மண்டபத்தில் உணவும் அடைக் கலமும் வழங்கியது.

கிராமவாசிகளை அவர்களது வீடுகளுக்கு திரும்பி வரச்செய்வதற்காக இளைஞர் இந்து அமைப்பின் உறுப்பினர்கள் இராணு வத்தின் கடுமையான கண் காணிப்புக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். எனினும் அதைப் பற்றியெல்லாம் பொருட் படுத்தாமல், தங்களது கிராமத்துக்கு திரும்பிச் செல்வது பாதுகாப்பானது என்று கிராம வாசிகள் உணரும் வரை இளைஞர் இந்து அமைப்பு அவர்களுக்கு அடைக் காலம் வழங்கியது. ஏனைய உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளும் கூட அவர்களுக்கு இருந்த பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நீதிமன்ற விசாரணைகளுக்கான போக்குவரத்து மற்றும் சம்பந்தப்பட்ட செலவுகளை வழங்குதல் மற்றும் தசாப்தங் களுக்கும் மேலாக வாதிடும் நடவடிக்கை களை தக்கவைத்தமை உட்பட கிராமவாசி களின் நீண்டகால போராட்டத்தில் அவர்க ளுக்கு உதவி செய்திருந்தன. மேலும், நீதி மன்ற அழைப்பாணைகளை எதிர்கொள்ளும் வகையில் குடும்பங்களுக்கு சூழல் அமை விப்பதிலும் நீதிமன்ற விசாரணைகள் சம்பந்தமான உபகரணங்கள் மற்றும் செல வுகள் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைப்ப திலும் உள்ளூர் சிவில் சமூகக் குழுக்கள் உதவிபுரிந்தன. மனித உரிமைகள் அபிவி ருத்திக்கான நிலையம் (The Centre for Human Rights Development) கடந்த பல வருடங்களாக கிராமவாசிகளுக்கு சட்ட உதவிகளை வழங்கியிருந்தது.

## இருபது வருட கால போராட்டம்: நீதிமன்ற வழக்கு விபரங்களும் மேம்படுத்தலும்

500 இற்கும் அதிகமான படையினரின் 3 நாட்கள் நீண்ட அடையாள அணிவகுப்பு தொடங்கி, குற்றஞ்சாட்டப்பட்டவர் முதல் சில விசாரணைகளுக்குள்ளேயே பிணையில் விடுவிக்கப்பட்டமை, பொருட் சாட்சியங்கள் தீயில் அழிந்து போய்விட்டதாக கூறப்பட்டமை, சகலரும் சிங்களவர்களைக் கொண்ட ஜூரி சபை அமைக்கப்பட்டமை மற்றும் சிங்களவர் களை பெரும்பான்மையாகக் கொண்ட நகரமான அநுராதபுரத்திற்கு இந்த வழக்கு மாற்றப்பட்டமை வரை, 20 வருடங்களாக நீண்டுள்ள குமாரபுரம் படுகொலைகள் வழக்கானது அதன் காலம் முழுவதும் பல்வேறு சவால்கள் நிறைந்ததாக காணப்பட்டது.

58 ஆவது மைல்கல்லுக்கும் சேருநுவர விற்கும் இடையிலான வீதியானது மாலை 5 மணியில் இருந்து மறுநாள் வரை இராணு வத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது.

கிராமத்திற்குள் நுழையவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ யாருக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. "மாலை 5 மணியிலிருந்து மறுநாள் அதிகாலை 5 மணி வரை எமக்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது" என்று கிராமவாசிகள் பலரும் தெரிவித்தனர்.

மறுநாள் (12) காலை மூதூர் பொலிஸார் வருகை தந்து அனைத்து சடலங்களையும் காயமடைந்தோரையும் பார்வையிட்டனர். அதன் பின்னர், காலை 8 மணியளவில் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்ததுடன், காயமடைந்த அனைவரையும் பஸ்ஸொன்றின் மூலம் சேருநுவர வைத்தி யாசாலைக்கு கொண்டு சென்று அங்கிருந்து திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் அனைத்தையும் உழவு இயந்திரத்திலும் கவச வாகனமொன்றிலும் ஏற்றிய இராணுவத்தினர், அவற்றை மூதூர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னரும் இராணுவத்தால் வழங்கப்பட்ட பஸ்ஸொன்றின் மூலம் மூதூர் வைத்திய சாலைக்கு பின்தொடர்ந்து சென்றனர்.

அருகிலுள்ள முகாம்கள் மற்றும் சோத னைச் சாவடிகளைச் சேர்ந்த படையினர் பலரும் கிராமவாசிகளுக்கு பரிச்சயமான வர்களாகவே இருந்தனர். ஏனெனில், முகாம்களை சுத்தம் செய்ய உதவுவதற்கும் இராணுவத்தினருக்கு விறகுகளை வெட்டு வதற்கும் அவர்கள் வாராந்தம் செல்வது வழக்கம். "ஒவ்வொரு வரும் மற்றையவரின் பெயரை கூறி அழைத்துக் கொள்வதை நாம் பார்த்தும் கேட்டும் இருக்கிறோம். அதன்மூலம் நாமும் அவர்களில் சிலரது பெயரை தெரிந்து கொண்டோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

படையினர் கடந்து செல்லும் போது கிராம வாசிகளிடம் சோளம் மற்றும் மரவள்ளிக் கிழங்குகளை கேட்பார்கள். "நாம் அவர்கள் மீது அச்சம் கொண்டிருந்த மையால் அவர்களுக்கு எது தேவையென் றாலும் நாம் அதை வழங்குவோம்" என்று கிராமவாசிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் இடம்பெற்று 3 நாட்களின் பின்னர், குற்றமிழைத்தவர்களை அடையா ளம் காட்டுவதற்கு மூதூர் நீதிமன்றத்திற்கு வருமாறு கிராமவாசிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தொப்பி அணிந்த சுமார் 500 இராணு வத்தினர் கிராமவாசிகள் முன்னிலையில் அணிவகுத்து நிறுத்தப்பட்டனர். 3 நாட்க ளாக இந்த அணிவகுப்பு நீண்டது. குற்றமி ழைத்தவர்கள் அதில் பெரிய குழு முழுவதும் தனித்தனியாக பரவியிருந்தனர். எனினும், அணி வகுப்பின் போது அவர்களது தொப்பி களைக் கழற்ற வேண்டும் என்று கிராம வாசிகள் கோரிக்கை விடுத்தனர். அதன் பின்னர், 58 ஆவது மற்றும் தெஹிவத்த முகாம்கள் மற்றும் கிளிவெட்டி சோதனைச் சாவடி ஆகியவற்றைச் சேர்ந்த 8 படையினரை கிராமவாசிகள் அடையாளம் காணக் கூடிய தாக இருந்தது. "நான் இராணுவ வீரர் ஒருவரை நோக்கிச் சென்று அவரதுகையை திடீரென பற்றிப் பிடித்து எனது அம்மாவை கொன்றவர் என்று அடையாளம் காட்டி னேன். அந்த இராணுவ வீரரை நான் கையால் பற்றிப்பிடித்த காரணத்திற்காக விசாரணைகள் முடியும் வரை என்னை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். அவர்கள் எமது குடும்பத்தினரையும் நண்பர்களையும் கொன்றனர். அதற்கு தண்டனை எதுவும் கிடையாதா?" என்று பிரபாராணி ஆத் திரத்துடன் கேள்வி எழுப்பினார்.

"கடந்த 20 வருடங்களாக மூதூர், திருகோணமலை மற்றும் அநுராதபுரத்தி லுள்ள நீதிமன்றங்களுக்கு 25 இற்கும் மேற்பட்ட தடவைகள் நான் சென்றிருக் கிறேன்" என்று தவமணி தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாட்சியமளிக்க 108 கிராமவாசிகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந் தது. எனினும், 27 பேர் பற்றி மட்டுமே இருப்பிடம் காணப்பட்டிருந்ததுடன், அதைச் செய்யவும் முடிந்திருந்தது. சம்பந் தப்பட்ட 8 படையினர் மீதும் குற்றச் சாட் டுக்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த வழக்கின் முதல் சில விசாரணை களுக்குள்ளேயே அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீதான குற்றப்பதிவுகளை அடுத்து அந்தப் படையினர் அனைவரும் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொலையுண்டோரில் சிலர்...


சுப்பையா சேதுராசா


தங்கவேல் கலாதேவி


அருமைத்துரை தனலெட்சுமி


செல்லத்துரை பாக்கியராசா


வடிவேல் நடராசா


கனகராசா சுவதிராசா


சிவக்கொழுந்து சின்னத்துரை


விநாயகமூர்த்தி சுதாகரன்


கந்தப்போடி கமலாதேவி


ராசேந்திரம் கருணாகரன்


அழகுராசா பரமேஸ்வரி


பாக்கியராசா வசந்தினி


ஆனந்தன் அன்னம்மா


அருமைத்துரை வள்ளிப்பிள்ளை


ராமஜெயம் கமலேஸ்வரன்

இந்த வழக்கு கவனிக்கத்தக்க ஒன்றாகும். ஏனெனில், சட்ட மா அதிபர் இந்த முன்னாள் இராணுவ வீரர்கள் ஒவ்வொருவருக்கு எதிராகவும் தனித் தனியாக 101 குற்றப்பதிவுகளை அநுராத புரம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அநுராதபுரம் மேல் நீதி மன்றத்தின் வரலாற்றில் குற்றவியல் வழக் கொன்றில் எந்தவொரு பிரதிவாதிக்கும் எதிராகவும் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பதிவுகளின் மிக நீண்ட பட்டியலாக அதுவே அமைந்திருந்தது.இந்த வழக்கில் 121 சாட்சியாளர்கள் இருந்தனர்.

இந்த படுகொலைகள் இடம்பெற்று 20 ஆண்டுகளின் பின்னர் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி, எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் (பிணையில் இருந்த போது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தின் முழு சிங்கள ஜூரர் குழாமொன்றினால் விடுதலை செய்யப்பட்ட துடன், அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கவும் பட்டனர்.

எனினும், இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்றை செய்யுமாறு சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுக்குமாறும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது ட்ரயல்-அட்-பார் குழாமொன்றின் முன்னிலையில் மீள் விசாரணை நடத்துமாறும் பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு விரிவான நட்டஈட்டுத் திட்டமொன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட் டோரின் குடும்பங்கள் இந்த விடுதலை யின் பின்னர் ஜனாதிபதியிடம் வேண்டு கோள் விடுத்தன.

அதன் பின்னர், 6 முன்னாள் இராணுவ வீரர்களையும் விடுதலை செய்தும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்தும் அநுராதபுரம் மேல் நீதிமன்ற ஜூரர் குழாம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன் முறையீடொன்றை செய்தார்.

“பிரதிவாதிகள் அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக காணப்படுவதற்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களை அனைத்து குற்றச் சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து விடுதலை செய்யும் அநுராதபுரம் மேல் நீதிமன்ற ஜூரர் குழாமின் தீர்ப்பானது, பாதிக்கப்பட்டோருக்கு முற்றிலும் அநீதி யிழைப்பதாக அமைந்துள்ளது” என்று மேன் முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“கடந்த 20 வருடங்களில் 3 ஜனாதிபதிகள் பதவிக்கு வந்து சென்றுவிட்டனர். குற்றம் புரிந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். ஆனால், நாம் நீதிக்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நல்லாட்சி அரசாங்கமும் கூட எமக்கு எதையும் செய்யவில்லை. எமக்கு என்ன நடந்தது என்னவென்பதை கூட அவர்கள் அறிவார்களா என்று எமக்கு சந்தேகமாக இருக்கிறது. கொல்லப்பட்ட எமது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நீதியும் அவர்களது குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடும் எமக்கு வேண்டும்” என்று குடும்ப அங்கத்தவர்கள் பிடிவாதமாக தெரிவித்தனர்.

### கொல்லப்பட்டோரின் பெயர்கள்

1. சுப்பையா சேதுராசா
2. அழகுராசா பரமேஸ்வரி
3. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
4. கிட்ணன் கோவிந்தன்
5. அருணாசலம் தங்கவேல்
6. செல்லத்துரை பாக்கியராசா
7. வடிவேல் நடராசா
8. ராசேந்திரம் கருணாகரன்
9. சண்முகநாதன் நிதந்தன்
10. ராமஜெயம் கமலேஸ்வரன்
11. கந்தப்போடி கமலாதேவி
12. சிவக்கொழுந்து சின்னத்துரை
13. சிவபாக்கியம் நிசாந்தன்
14. பாக்கியராசா வசந்தினி
15. அமிர்தலிங்கம் ரஜினிகாந்தி
16. தங்கவேல் கலாதேவி
17. ஸ்டீபன் பத்மினி
18. சுந்தரலிங்கம் பிரபாகரன்
19. சுந்தரலிங்கம் சுபாஜினி
20. கனகராசா சுவதிராசா
21. சுப்ரமணியம் பாக்கியம்
22. விநாயகமூர்த்தி சுதாகரன்
23. ஆனந்தன் அன்னம்மா
24. விஜயகாந்த் லெட்சுமி
25. அருமைத்துரை தனலெட்சுமி (குடும்பத்தை காணவில்லை என்பதால் அறியப்படாதவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
தனலாபம். துணிகரம். வாகனச் சேர்க்கை. நடைக் கஷ்டம். பயம்.

**ரிஷபம்**
புதிய முயற்சி. லாபம். பொருள் சேர்க்கை. தெய்வ தரிசனம்.

**மிதுனம்**
பெரியோர் உறவு. வேலைப் பளு. பயமின்மை. கல்வி விருத்தி.

**கடகம்**
பணி முடக்கம். போகமிகுதி. காரிய சித்தி. பயிர் பலிதம்.

**சிம்மம்**
மன நிறைவு. தெய்வ சிந்தனை. வேலைப் பளு. முரண்பாடு.

**கன்னி**
நினைத்த காரிய சித்தி. பிறதேச சஞ்சாரம். நண்பரால் உதவி.

**துலாம்**
பயனற்ற முயற்சி. பொறுமை. துணை நலக் கேடு. செலவு.

**விருச்சிகம்**
தாக மிகுதி. புதிய உறவு. முரண்பாடு. சீரக்கேடு. எதிர்ப்பு.

**தனுசு**
காரியக்கேடு. துணை நலம். வேலையாட்கள் சகாயம். புதிய முயற்சி. தேடல்.

**மகரம்**
உறவு விருத்தி. தனிமை. யோகம். சிந்தனை விருத்தி. மனைச் சிறப்பு.

**கும்பம்**
தொழில் முன்னேற்றம். தானிய விருத்தி. தோல்வி நிலை.

**மீனம்**
சோகம். வீரிய விருத்தி. தனலாபம். மக்களால் கவலை. பயமின்மை.



முறிப்பு தமிழ் வித்தியாலயத்தில் முல்லை வலய ஊழியர் நலனோம்பு குழுமத்தினர் கடந்த 03 ஆம் திகதி வழங்கி வைத்த பாடசாலை உபகரணங்களுடன் மாணவர்கள்.



## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (2014 - 2016)



ஒளிப்படங்கள் - வடலியூரான்



"வன்முறையற்ற வாழ்வைக் கொண்டாடு வோம்" என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சி.



பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப் பட்ட யாழ் பல்கலைக் கழக மாணவர்களான சுலக்சன், கஜன் ஆகியோரின் ஞாபகார்த்த இரத்ததான நிகழ்வு 07/03/2017 அன்று செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலையில் இடம்பெற்றது.







அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கை பொகவந்தலைவையைச் சேர்ந்த கவிஞர் ப.கனகேஸ்வரன்(கேஜி) எழுதிய கள்ளச்சி, றப்பர் பாலுஞ் சாலிகள், விளம்பரம் ஒட்டாதீர், விரல் சூப்பி ஆகிய நான்கு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இலங்கை யாழ்ப் பாணம், கைதடி சாந்தி முதியோர் இல்லத்தில் இடம் பெற்றது.




ஈழத்தின் புகழ் பெற்ற பாடகர் எஸ். ஜி. சாந்தனின் நினைவு கூர்தல் கடந்த 03 ஆம் திகதி கனடாவில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.




## எதிரிக்கும் மரியாதை செய்

மொகலாய சக்கரவர்த்தி ஔரங்க சீப், சத்ரபதி சிவாஜியை நண்பனாக அழைத்து ஏமாற்றிச் சிறையிலிட்டார்.

ஆனால் வீர சிவாஜியோ சிறையில் இருந்து தப்பித்து தனது நாட்டுக்குச் சென்று விட்டார்.

அவர் தனது தாய் ஜீஜாபாயைச் சந்தித்து ஆசி பெற்றபோது, "மகனே நீ ஒரு தவறு செய்து விட்டாய்" என்றார்.

"என்ன? தவறு அம்மா" என்று சிவாஜி பணிவாகக் கேட்டார்.

"மகனே மொகலாய சக்கரவர்த்திகளைச் சந்திப்பவர்கள் முன்புறமாக் குனிந்து இடது கையை பின்புறம் வைத்து மூன்று தடவைகள் சலாம் செய்து வணக்கம் செலுத்த வேண்டும். அதை நீ செய்யத் தவறிவிட்டாயே" என்றார்.

சிவாஜியும் தன் தவறை உணர்ந்து, "எதிரியாக இருந்தாலும் நட்பு முறையில் சந்திக்கும் போது அவர்களுக்கு உரிய மரியாதையை நாம் செலுத்த வேண்டும்" என்ற பண்பைக் கற்றுக்கொண்டார்.



ம.டிஷாளினி
தரம் - 08
மிருசுவில் றோ.க.த.க



## கருத்தில் கவனம் தேவை

ஒருவன், ஒருநாள் தன் வீட்டுப் பரணைச் சுத்தப்படுத்தினான். அப்போது அவன் இதுவரை கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது மிகப் பழைய புத்தகம். பக்கங்களில் மஞ்சள் படிந்திருந்தது. பக்கங்களைத் திருப்புகையில் அதிக கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

"அந்தப் புத்தகம் மந்திர மாயங்கள் பற்றியது" எனப் புடிக்கும்போது தெரிந்து கொண்டான். ஆனால் ஒரு பந்தியில் உள்ள கருத்தை அறிய எத்தனையோ தடவைகள் படிக்க வேண்டியிருந்தது.

அவன் வாசித்து விளங்கிய பகுதி "கருங் கடற்கரையில் சூடான கறுப்பு கூழாங்கல் ஒன்றுள்ளது. அதனால் எந்தப் பொருளைத் தொட்டாலும் அது தங்கமாகி விடும்" என்பதே.

இதற்குப் பிறகு, அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடற் கரை நோக்கி உடனே புறப்பட்டான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங் கற்கள் கிடந்தன. ஒரு கல்லை எடுத்துப் பார்த்தான். அது குளிர்ந்தது. புத்தகத்தில் குறிப்பிட்ட கல் சூடாக இருக்கும் என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வரவே, உடனே அந்தக் கல்லை கடலில் எறிந்தான். அன்று முழுவதும் தேடினான். அவனுக்கு மந்திரக் கல் கிடைக்கவில்லை.

தினமும் கடற்கரைக்கு வரும் அவன் காலையிலிருந்து மாலை வரை ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடிக் கொண்டிருந்தான்.

பல மாதங்களும், வருடங்களும் கடந்தன. அவனுக்குக் அந்தக் கல் கிடைக்கவில்லை. ஆனால் அவனும் விடுவதாக இல்லை. ஒவ்வொரு கல்லாகப் பார்த்து, கடலுக்குள் எறியும் பணியைத் தொடர்ந்தான். இந்தச் செயல் அவனுக்கு அனிச்சையாகி விட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில்பட்டது.

அதைக் கையில் எடுத்தான். அது வெது வெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்போதும் போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான். செய்யும் செயல்களில் எப்போதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமை யாவதைத் தவிர்க்க வேண்டும்.

## குட்டீஸ் பரிசுப் போதி - 35

★ இஸ்ரேலில் பயன்படுத்தப்படும் நாணயத்தின் பெயர் என்ன?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்போதி - 35

முடிவுத்திகதி : 17.03.2017

### குட்டீஸ் பரிசுப் போதி - 33 முடிவுகள்

விடை: 1978 ஆம் ஆண்டு

★ இ.விதுசன்
220, பதுளை வீதி,
பண்டாரவளை.

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம். (தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

## பொது அறிவு

இ. அனுற் றெஜின்சிகா
தரம் - 08
மிருசுவில் றோ.க.த.க

★ இரண்டு தேசியக் கொடிகளைக் கொண்ட நாடு எது?
ஆப்கானிஸ்தான்

★ அதிகாலை அமைதி நாடு என்றழைக்கப்படுவது எது?
கொரியா

★ மனிதர்களைப் போன்று சிரிக்கும் பறவை எது?
கூக்கபுரா

★ உலோகங்களின் அரசன் என அழைக்கப்படுவது எது?
தங்கம்

★ இராணுவச் சீருடையை முதன் முதலில் உருவாக்கியவர் யார்?
நெப்போலியன்

★ சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் ஆகும்?
15 ஆண்டுகள்

★ இந்தியாவின் தேசிய மரம் எது?
ஆலமரம்

★ அதிக ஆண்டுகள் வாழும் பறவை எது?
நெருப்புக் கோழி

★ அதிக செல்களால் உருவான உறுப்பு எது?
மூளை

★ [illegible] தயாரிக்கப் பயன்படும் உலோகம் எது?
நிக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் சுட்டவங்கள் எங்கட பிள்ளையளை..?

சந்திப்பும் படங்களும்: அ.றொக்சன்

“என்ர பிள்ளை விடுதலைப்புலியும் இல்லை. கஞ்சா கடத்தவும் இல்லை. வாள், கத்தி கொண்டு ஆரையும் வெட்டவும் போகேல்லை. பொம்புளையக் கடத்திக் கொண்டும் போகேலை. பின்ன என்னத்துக்கு பொலிஸ் சுட்டாங்கள்? எனக்கு அத அவை சொல்லியே ஆகோணும். பட்டதாரி ஆக்கிப்பாக்க வேணும் எண்டு ஆசைப்பட்டன். ஆனா இப்பிடி பாடையில படுக்க வைச்சுட்டாங்களே படுபாவிகள். இவங்கள் நல்லாவே இருக்கமாட்டாங்கள். நாசமாத்தான் போவாங்கள்” அப்படி அதிகாரத்தின் நள்ளிரவு வெறியாட்டத்தில் மகனைப் பறிகொடுத்த தாயின் கதறல் நான்கரை மாதங்களாக இன்னும் ஓயாமல் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான சுலக்ஷனும், கஜனும் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு நான்கரை மாதங்கள் (140 நாட்கள்) உருண்டோடிவிட்டன. இதுவரையிலும் அவர்களுக்கான நீதி மறுக்கப்பட்டதாவேயுள்ளது. நேர்மையான விசாரணைகளும் நடந்ததாகத் தெரியவில்லை. காலத்தின் ஓட்டத்தில் நாமெல்லாவற்றையும் மறந்து போகும் தறுவாயில், இப்போது சிறைக்குள் இருக்கும் பொலிஸார் பதவியுயர்வுகளோடு விடுவிக்கப்பட்டுவிடவும் கூடும். இலங்கையின் கடந்தகால நீதி நிலைநாட்டுதல்கள் இப்படியாக கசப்பான படிப்பினைகளைத்தான் தமிழர்களுக்கு தந்திருக்கின்றன.

“போனவங்கள் போனவங்கள்தான். திரும்பி வரவேயில்லை”



## அவனில்லாத பிறந்ததினம்

மார்ச் 8 ஆம் திகதி சுலக்ஷனின் பிறந்த தினம். இந்த வருடம் அவனில்லாமலேயே பிறந்ததினம் கடந்திருப்பதை எப்படி குடுப்பத்தால் ஏற்றுக்கொள்ள முடியும். போன வருடம் சுலக்ஷன் வீட்டில் அவனது பல்கலைத் தோழர்களுடன் பிறந்தநாளைக் கொண்டாடியதை மட்டும்தான் குடும்பத்தாரல் மீட்டிப்பார்க்க முடியும்.

மகனின் நினைவுத் துயரை சுமந்து கொண்டிருக்கும் சுலக்ஷனின் தாயாரான சாந்தி தன் மனதில் அழுத்திக் கொண்டிருக்கும் எண்ணங்களை கண்ணீரோடு இங்கு பதிவு செய்கிறார்.

“போன வருசம் பிறந்தநாளில எல்லா ரோடையும் நிண்டு போட்டோ எடுத்தான், இந்த வருசம் அவனே போட்டோ ஆகிட்டான்” என்று அவன் அம்மா சொல்லும் போது அந்த வலி எவராலும் எதிர்கொள்ள முடியாதது. “என்ர பிள்ளையை ஏன் சுட்டாங்கள்?” என்ற அந்த ஒற்றைக் கேள்விக்கு பதிலை எதிர்பார்த்தபடி காத்திருக்கிறார் சுலக்ஷனின் தயாார். “போன வருசம் அவன்ர பிறந்தநாளிலே அவனுக்கு டெங்குக் காய்ச்சல். அதனால அவன் கொஸ்பிட்டல்ல இருந்தவன். கொஸ்பிட்டலால வீட்ட வந்தாப்பிறகு, அவனோட படிக்கிற கம்பஸ் பெடியன்கள் வீட்ட வந்து சுலக்ஷனுக்கு பிறந்த நாள் கொண்டாடினாங்கள். இந்த முறை” என்று குலுங்கி அழுவதைத் தவிர அந்தத் தாயால் வேறென்ன செய்ய முடியும்?

## மூத்தவனும் இல்லை இளையவனும் இல்லை

எனக்கு சுலக்ஷனோட சேர்த்து ஐந்து பிள்ளைகள். ஒரு பொம்பிளைப் பிள்ளையும் நாலு பெடியன்களும். நாங்கள் 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னிக்குப் போனாங்கள். 2002 ஆம் ஆண்டு பாதை திறந்தாப்பிறகுதான் வந்தனாங்கள். மூத்த மகன் வன்னியில இருந்தவர். 2006 ஆம் ஆண்டு பிரச்சினை தொடங்கிய பிறகு திரும்ப நாங்கள் வன்னிக்குப் போனாங்கள். நாங்கள் அங்க போக மூத்தமகன் இங்க வந்திட்டார். இங்க வந்து பெரியப்பாவோட இருந்தவன் பக்கத்தில உள்ள சேர்ச்சில பெடியங்களோடு கதைச்சுக் கொண்டிருக்கும்போது இராணுவம் சுற்றி வளைத்து இயக்கம் எண்டு பிடிச்சுக்கொண்டு போட்டினம். திரும்ப வன்னியால நாங்க வந்தபின்பு எங்கட மூத்தவனைப் பற்றி ஆமியிட்ட கேக்கப் பயமா இருந்தது.

நாங்கள் கேக்கப்போக மற்றப் பிள்ளைகளையும் பிடிச்சுக் கொண்டு போயிடுவாங்களோ எண்ட பயத்திலேயே இருந்திட்டம்.





இப்ப எனக்கு மூத்த பிள்ளையும் இல்லை. ரெண்டாவது பிள்ளையும் இல்லை மீண்டும் அழுகை.

என்ர கணவர் முந்தி சீவல் தொழில்தான் செய்தவர். மரத்தில இருந்து விழுந்து ஏலாம இருந்தவர். பிறகு தொழிலை விட்டுட்டார். அதுக்குப் பிறகு மாடு வளர்த்தம். வயலில புல்லுப் புடுங்கித்தான் பிள்ளைகளை வளர்த்து சீவியத்தையும் பாத்தனாங்கள். இப்ப என்ர மகள் வெளிநாட்டில இருக்கிறா. இப்ப வந்திட்டு போனவா. சுலக்ஷன்ர நினைவா இருந்த பொருட்கள் எல்லாத்தையும் கொண்டு போயிட்டா. அவாதான் இப்ப உதவி செய்கிறா மற்றும்படி வருமானம் இல்லை. சுலக்ஷன் இருந்தா எங்களை நல்லாக்கியிருப்பான்

## போனவங்கள் வரவேயில்லை

அண்டைக்கு சுலக்ஷனும் கஜனும் இன்னொரு சிநேதனும் வந்தாங்கள். சுலக்ஷன் குளிச்சுப்போட்டுவர, மூண்டு பேரும் சாப்பிட்டாங்கள். பிறகு இரவு 9.30 மணிக்கு நாளைக்கு கட்டாயம் கம்பஸில ரியுட் வைக்க வேணும். அதால் இரவு ரூமுக்கு போய் எழுத வேணும் எண்டு வெளிக்கிட்டினம். அப்ப சுலக்ஷன்ட அப்பா “இரவு நேரத்தில வெளியில போக வேண்டாம் இங்க இருந்து எழுதுங்கோ” எண்டு சொன்னார். அதுக்கு “இல்லையப்பா, ரியுட் எல்லாரும் சேர்ந்துதான் எழுத வேணும். 2 மணித்தியாலத்தில நாங்கள் திரும்பி வருவம்” எண்டு தகப்பனிட்ட சொல்லியிருக்கிறான்.

பிறகு சுலக்ஷன் தன்ர தம்பிய கூப்பிட்டு “அப்பாக்கு 2 மணித்தியாலத்தில வருவன் எண்டனான். ஆனால் பிந்தித்தான் வருவம். அப்பா கதவு திறக்கமாட்டார். நீதான் கதவு திறக்க வேணும்” எண்டு சொல்லிப்போட்டுப் போட்டார் சைக்கிளில போனவங்கள். அவன்ர தம்பியும் “அண்ணா வருவான் வருவான்” எண்டு நித்திரை கொள்ளாமல் இருந்திட்டு பிறகு 12 மணி போல போய் நித்திரை கொண்டுட்டான். போனவங்கள் போனவங்கள்தான் திரும்பி வரவேயில்லை

## விடியத்தான் உண்மை தெரியும்

“விடியப்புறம் 2 மணிக்கு டயனாத் எண்ட கம்பஸ் பெடியனிட்ட இருந்து ரெலிபோன் வந்தது. அம்மா சுலக்ஷனும் கஜனும் அட்சிடன்ட் ஆகிட்டாங்கள். சுலக்ஷனுக்கு சின்னக் காயம்தான். கஜனுக்குத்தான் கழுத்தில காயம். ரெண்டு பேரும் நல்லாயிருகிறாங்கள். நீங்கள் யோசிக்க வேண்டாம் எண்டு சொல்லவே, எனக்கு பயம் வந்திட்டு. இவருக்கும் சொல்ல முடியாது. சொன்னாப் பேசப் போறார் எண்டும் பயம். எனக்கு என்ன செய்யிற தெண்டு தெரியேலை.

பிறகு ஒரு மாதிரி இவருக்குச் சொல்லி இவரும் நானும் சேர்ந்து ஓட்டோ ஒண்டு பிடிச்சுக் கொண்டு பெரியாஸ்ப்பத்திரிக்குப் போனம்.

அங்க போனா கம்பஸ் பெடியங்கள் எல்லாரும் நிண்டினம். எனக்கு அதைப் பாத்தவுடனே தலை சுத்தத் தொடங்கிட்டுது. “என்ர பிள்ளைக்கு என்ன நடந்துது?” எண்டு டயனாத்திட்ட கேட்டு, நிலத்தில விழுந்து அழுது புரளத் தொடங்கிட்டன். அவன் என்னைச் சமாதானப்படுத்தினான். டொக்டர் ஒருத்தரும் வந்து “அவங்கள் நல்லா இருக்கிறாங்கள்” எண்டு சொல்லி, எங்களை வீட்டை போகச்சொல்லிச்சினம். நாங்கள் வீட்ட போட்டு விடியப்பறம் 5 மணிக்குத்தான் திரும்ப வந்தம். வந்தப்பிறகுதான் உண்மை தெரிஞ்சது

## கஜனும் என்ர பிள்ளைதான்

கஜன் சுலக்ஷனுக்கு நண்பன் மட்டுமில்ல, எனக்கும் அவன் மகன்தான். நான் அவனைப் பெறாதது மட்டும்தான். எங்களோட அவன் 3 வருஷம் இருந்தவன். வீட்டு முத்தத்தில ஒரு இலை கிடக்க விடமாட்டான்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவின் பாடல்களுக்கு எவ்வளவு ரசிகர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி தெரியவேண்டியதில்லை.

1996-ம் ஆண்டு வெளிவந்த 'அரவிந்தன்' படம் மூலம் அடியெடுத்து வைத்த அவர் தற்போது 20 ஆண்டுகள் கடந்துள்ளார். அதற்காக ரசிகர்கள் மற்றும் திரைப் பிரபலங்கள் பலரும் அவருக்கு வாழ்த்துக்கள் கூறி வருகின்றனர்.



விஜய் நடித்த பைரவா படம் வசூலில் பெரும் சாதனை படைத்ததாக கூறப்பட்டது, 4 நாட்களில் ரூ 100 கோடி வரை வசூல் செய்ததாக கூறினார்கள்.

அப்போதெல்லாம் அமைதியாக இருந்த விநியோகஸ்தர்கள் பல நாட்கள் கழித்து சமீபத்தில் இப்படம் ஓடவில்லை, வசூல் இல்லை நஷ்ட ஈடு வேண்டும் என ஒரு சிலர் கேட்கின்றனர்.

ஆனால், படக்குழு இதை மறுத்து வருகின்றது, படத்திற்கு நல்ல வசூல் வந்துள்ளது என கூறுகின்றது, மேலும், இன்று பைரவா 50வது நாளை கடக்கின்றது.

வசூல் மழையில் பைரவா என்று தான் 50வது நாள் விளம்பரமே கொடுத்துள்ளனர். இதன் மூலம் படம் நஷ்டம் என்று கூறிவந்த விநியோகஸ்தர்களுக்கு படக்குழு பதிலடி தந்துள்ளது.





வெற்றிகள் இருந்தால் மகிழ்ச்சி வந்துவிடும் என்று அர்த்தம் அல்ல என்று சமந்தா தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கவுதம் மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்த 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்தில் கௌரவ தோற்றத்தில் நடித்து அறிமுகமானவர் சமந்தா. அதே படம் தெலுங்கில் 'ஏ மாயா சேஸாவே' என்ற பெயரில் தயாரானது. அதில் நாக சைதன்யாவுக்கு நாயகியாக அறிமுகமானார்.

2010-ம் ஆண்டு பெ ப்ரவரி 26 ஆம் திகதி இப்படம் வெளியானது. நாயகியாக அறிமுகமாகி 7 ஆண்டுகள் ஆனதையொட்டி சமந்தா தனது ட்விட்டர் பக்கத்தில், "7 வருடங்கள் முடிந்துவிட்டன. நான் இப்போதும் பேசும் மனநிலையில் இருக்கிறேன். குடிசையிலிருந்து கோபுரம் சென்றவர்களின் கதை போல என் கதையிலும் எனக்கான கடின உழைப்பு, பாதுகாப்பின்மை, தோல்வி, நிராகரிப்பு, வலி, சோகம், வெற்றி, புகழ் மற்றும் செல்வம் ஆகியவை இருந்திருக்கின்றன. ஆனால் நான் வெற்றி பெற்றதால் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று அர்த்தம் அல்ல. மகிழ்ச்சி அவ்வளவு எளிதானதும் அல்ல.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இவ்வளவு நாட்கள் நான் கற்றது என்னவென்றால், இந்த செல்வம், இந்த வெற்றிகள் இருந்தால் மகிழ்ச்சி வந்துவிடும் என்று அர்த்தம் அல்ல. சினிமா எனக்குத் தந்த மிகப்பெரிய ஆசிர்வாதமே அது என் வாழ்க்கைக்கு அறிமுகம் செய்துவைத்துள்ள மக்கள்தான். அவர்கள் எனது முழு இயல்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். அது உங்களின் அன்பைப் பெற்றுத்தந்துள்ளது. அது, மோசமான சமயங்களில் நான் கெட்டியாக பிடித்துக் கொள்ளும் அன்பு. சந்தோஷமான சமயங்களில் நன்றியுடன், அன்புடனும் பிடித்துக் கொள்ளும் அன்பு. மிக்க நன்றி. உங்கள் அனைவர் மீதும் வாழ்நாள் முழுவதும் நானும் திரும்ப அன்பு செலுத்திக்கொண்டிருப்பேன்" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

தனுஷ் தமிழ் சினிமா தாண்டி தற்போது பொலிவுட் வரை கலக்கி கொண்டிருக்கின்றார். இந்நிலையில் "தனுஷ் எங்கள் மகன்" என ஒரு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

அதை தொடர்ந்து தனுஷ் மதுரை நீதிமன்றத்தில் நேரிலேயே ஆஜ வழக்கிற்கு ஒரு முற்று புள்ளி கிடைக்கும் என பலரும் எதிர்ப்பார்த்தன

ஆனால், கோர்ட் இந்த வழக்கை 20 ஆம் திகதிக்கு தள்ளி வைத்துள்ளது, இதற்கிடையில் தனுஷிற்கு டீ.என்.ஏ சோதனை செய்ய வேண்டும் என்று மீண்டும் அந்த தம்பதியினர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இதனால், தனுஷிற்கு மேலும் தலைவலி அதிகரித்துள்ளது.



"ரஜினி - ரஞ்சித் படத்தில் நடிக்கவிருப்பது குறித்து சில நாட்களில் தெரியும்" என்று வித்யாபாலன் தெரிவித்துள்ளார்.

பொலிவுட் நடிகை வித்யா பாலன், ரஞ்சித் - ரஜினி இணையும் அடுத்த படத்தில் நாயகியாக நடிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் இது பற்றி அவரிடம் கேட்ட போது, அதற்கு சரியாகப் பதிலளிக்காமல் சென்றதால் இந்த யூகங்கள் ஆரம்பித்துள்ளன.

கபாலி படத்துக்குப் பிறகு, ரஜினி - ரஞ்சித் மீண்டும் இணையும் படத்தில் வித்யா பாலன் கதாநாயகியாக இருக்கலாம் என எதிர்பார்ப்பு நிலவி வந்தது. தற்போது ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மும்பையில் புத்தக வெளியீட்டு விழா ஒன்றுக்கு நடிகை வித்யாபாலன் வந்தார். அவரிடம் இது குறித்து கேட்டபோது, "இன்னும் சில நாட்களில் தெரியும்" என்று மட்டும் பதில் கூறினார்.

ஒருவேளை வித்யா பாலன் இதில் நடித்தால் தமிழில் அவரது முதல் படமாக இது இருக்கும். தற்போது 'பேகம் ஜான்' என்ற தனது அடுத்த ஹிந்திப் படத்தின் வெளியீட்டுக்காக வித்யா பாலன் காத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பி.வாசு இயக்கத்தில் லாரன்ஸ் நடிப்பில் உருவாகியுள்ள 'சிவலிங்கா', ஏப்ரல் 14 ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

பி.வாசு இயக்கத்தில் லாரன்ஸ், ரித்திகா சிங், வடிவேலு உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவான படம் 'சிவலிங்கா'. இது கன்னடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற 'சிவலிங்கா' படத்தின் தமிழ் ரீமேக்காகும்.

இப்படத்தின் இறுதிகட்ட பணிகள் முடிந்து, சரியான வெளியீட்டுத் திகதிக்காக காத்திருந்தார்கள். பெப்ரவரி 17 ஆம் திகதி வெளியாகும் என அறிவித்தார்கள். ஆனால், அதே நாளில் லாரன்ஸ் நடிப்பில் உருவாகியுள்ள 'மொட்ட சிவா கெட்ட சிவா' படமும் வெளியாவதாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து லாரன்ஸ் வேண்டுகோளுங்கு இணங்க வெளியீட்டை ஒத்திவைத்தார்கள். ஆனால், தயாரிப்பாளர்களின் பிரச்சினையில் பெப்ரவரி 17 ஆம் திகதி 'மொட்ட சிவா கெட்ட சிவா' வெளியாகவில்லை.

இந்நிலையில், ஏப்ரல் 14 ஆம் திகதி 'சிவலிங்கா' வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



'குட்டிப்புலி' கூட்டணியான சசிகுமார் - முத்தையா இருவரும், மீண்டும் ஒரு படத்தில் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளார்கள். சசிகுமார், லட்சுமிமேனன், சரண்யா பொன்வண்ணன் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவான படம் 'குட்டிப்புலி'. வசூல் ரீதியில் இப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றது. முத்தையா இப்படத்தின் மூலமாக தான் இயக்குநராக அறிமுகமானார்.

'மருது' படத்தைத் தொடர்ந்து சூர்யாவுக்கு கதை ஒன்றை தயார் செய்து வருவதாகவும், ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் அப்படத்தை தயாரிக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. தற்போது அப்படம் கைவிடப்பட்டுள்ளது.

சூர்யாவுக்காக தயார் செய்த கதையை சசிகுமாரை வைத்து இயக்க முடிவு செய்துள்ளார் முத்தையா. தற்போது முதற்கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கவும் படக்குழு திட்டமிட்டுள்ளது.

'கொடி வீரன்' என தலைப்பிடப்பட்டுள்ள இப்படத்துக்கு நாயகி, இதர நடிகர் - நடிகைகள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது.





ஷங்கர் என்றாலே பிரமாண்டம் தானே, அவர் படத்தில் ஒரு ஈ-யை காட்டினால் கூட பிரமாண்டமாக தான் காட்டுவார். அப்படியிருக்க 350 கோடி ரூபாவில் 2.0 படத்தை எடுத்து வருகிறார்.

ஆனால், இப்படத்தின் பட்ஜெட் எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகரித்துவிட்டதாம், சுமார் 400 கோடி ரூபா வரை இப்படத்தின் பட்ஜெட் எகிறியுள்ளது.

மேலும், விளம்பரத்திற்கு என சேர்த்து பட்ஜெட் 450 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது, இந்திய சினிமா இல்லை. ஆசியாவிலேயே அதிக தொகையில் எடுக்கப்படுகின்ற படமாக இந்த 2.0 இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



கி
ரு தம்பதியினர்
ஆஜரானார், இந்த
தனர்.



இங்கிலாந்து - இந்தியா' கலாசார சந்திப்பு நிகழ்வில், இங்கிலாந்து ராணியை சந்தித்த நிகழ்வு குறித்து கமல் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

'சபாஷ் நாயுடு' படப்பிடிப்பு தொடங்குவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறார் கமல். இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற 'இங்கிலாந்து - இந்தியா' கலாசார சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் கமல் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் இங்கிலாந்து ராணியை சந்தித்துள்ளார். இச்சந்திப்பு குறித்து தன்னுடைய அதிகாரபூர்வ ஃபேஸ்புக் பக்கத்தில், "ராணி ஆரோக்கியமாக காணப்பட்டார். அவரது இந்திய பயணத்தை ஆசையாக நினைவுகூர்ந்தார்.

எடின்பர்க்கின் டியூக்கும் நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருந்தார். அங்கு அதிக மக்கள் இருந்ததால் எங்கள் உரையாடல் சிறியதாகவே இருந்தது.ராணியின் இந்திய பயணத்தின் போது எனது படப்பிடிப்பு தளத்துக்கு வந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

அவர் வாழ்க்கையிலேயே அவர் பார்த்த முதல் படப்பிடிப்பு தளம் அதுவாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார் கமல்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கமல் தொடங்கிய 'மருதநாயகம்' படப்பிடிப்பை இங்கிலாந்து ராணி தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலா இயக்கத்தில் ஜோதிகா - ஜி.வி.பிரகாஷ் இணையும் 'நாச்சியார்' பெர்ஸ்ட் லுக் போஸ்டரை சூர்யா வெளியிட்டுள்ளார்.

பாலா இயக்கத்தில் உருவாகவுள்ள புதிய படத்தில் ஜோதிகா நடிப்பது உறுதியானது. இப்படத்தை ஈயான் ஸ்டுடியோஸ் மற்றும் பி ஸ்டூடியோஸ் இணைந்து தயாரிக்கவுள்ளன. இளையராஜா இசையமைக்கவுள்ளார்.

இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஜி.வி.பிரகாஷ் ஒப்பந்தம் செய்யப்பட்டார். மார்ச் மாதம் முதல் இதன் படப்பிடிப்பு தொடங்கப்பட உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# உன்னை நீயே அறிவாய்!




### பெரும் மற்றும் தொழில்நுட்ப வாணிபம்

இவற்றில் கிடைக்கும் இலாபத்தை வைத்து வரிசைப்படுத்தினால், முதலில் மதிப்புக் கூட்டும் பொருட்கள் வரும். இரண்டாவது வாங்கி விற்பனை செய்தல், மூன்றாவதாக மூலப்பொருளாக விற்பனை செய்தல் இறுதியாகத்தான் பிரபல நிறுவனத்தின் பொருட்களை விற்றல் வரும்.

எமது தொழிலின் நடைமுறைகளைப் பொறுத்து, அதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெரும் வாணிபம், தொழில்நுட்ப வாணிபம். மூலதனம் போட்டு, இடம்பிடித்து பொருட்கள் வாங்கி வைத்து, வாடிக்கையாளர்களை நம்முடைய இடத்துக்கு வரவழைத்தோ அல்லது அவர்களுக்கு விநியோகம் செய்வதன் மூலமோ செய்யப்படும் தொழில் பெரும் வாணிபம். கணனியும் இணையமும், மென்பொருள் துறையில் நிபுணத்துவம் கொண்டவர்களையும் மட்டுமே வைத்து செய்யும் வாணிபங்கள் ஈ - வர்த்தகம், கைபேசி வர்த்தகம் ஆகும். இதற்கு லாஜிஸ்டிக்ஸ் மிக முக்கியம். பெரும் வாணிபம் என்பது மக்கள் தேடி வரும் இடம். தொழில்நுட்ப வாணிபம் நாம் தான் மக்களிடம் போக வேண்டும். முகப் புத்தகம், வட்ஸ்அப் போன்றவற்றை வைத்து இப்போது நிறைய பேர் வாணிபம் செய்து வருகிறார்கள்.

### தனியாகவா அல்லது கூட்டாகவா?

அடுத்து எமது தொழிலைத் தனியாகச் செய்யப் போகிறோமா?, அல்லது கூட்டாக சேர்ந்து செய்யப் போகிறோமா? என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். தனியாகச் செய்வதாக இருந்தால், கையில் தொழில் செய்வதற்கான திட்டமும், மூலதனமும் இருந்தால் போதும். இதன் உரிமையாளர் சோல் புரோப்பரேட்டர் எனப்படுவார். தொழில் தொடங்க சொந்தப் பணம் இல்லாத பட்சத்தில் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

கூட்டுத்தொழிலில் இரண்டு வகை உண்டு. ஒன்று, பிரைவேட் லிமிடெட், இரண்டாவது கூட்டுத்தொழில். இதில் கூட்டுத் தொழில் எனும்போது, நாம் குடும்பத்தினரோடு சேர்ந்து செய்யலாம் அல்லது ஏற்கெனவே அந்தத் தொழில் பற்றிய அறிவுகொண்டவருடன் சேர்ந்து செய்யலாம் அல்லது ஆர்வமுள்ள நண்பர்களுடன் சேர்ந்து செய்யலாம். இவற்றில் கவனமாக இருக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. யார் முதலீடு செய்யப் போகிறார்?, யார் உழைப்பை முதலீடு செய்யப் போகிறார்? யாருக்கு எவ்வளவு பங்கு? என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒவ்வொருவருடைய பொறுப்பு, மற்றும் வேலை என்ன? பணம் தருவது, பெறுவது தொடர்பாக யார் கையெழுத்து போடப் போகிறீர்கள். ஒருவர் மட்டுமா, கூட்டுச் சேர்ந்த இருவரும் கையெழுத்திட வேண்டுமா? என்பதை "பார்ட்னர் ஷிப்" என்னும் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

தனிநபராகத் தொழில் செய்யப்போவதாக இருந்தால், கம்பெனிப் பெயரை உறுதிசெய்ய வேண்டும். பின்னர் தொழில் செய்யும் இடத்துக்கான வாடகை ஒப்பந்தம், சொந்த இடம் என்றால் கடைசியாகக் கட்டிய சொத்து வரி ஆவணம் என்பவற்றுடன் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் தேவை. தொழிலைப் பதிவு செய்ய, நிறுவனத்தின் பெயர், இலட்சினை, முகவரி என்பவற்றுடன் உறுதிப்படுத்தும் ஆவணங்களும் தேவை. நீங்கள் செய்யும் தொழில், உற்பத்தியா?, வர்த்தகமா?, சேவையா? என்பதைப் பொறுத்து, விற்பனை மற்றும் சேவை வரி பதிவுசெய்ய வேண்டும்.

நீங்கள் உங்கள் தொழிலை சர்வதேச அளவில் செய்ய விரும்பினால், அதனை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மூலம் தாராளமாகச் செய்யலாம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கு அரசின் அனுமதி பெறவேண்டும்.

ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும், உள்நாட்டில் தொழில் செய்வதாக இருந்தாலும் நீங்கள் தொழில் தொடங்கும் முன் கவனமாக இருக்கவேண்டிய முக்கியமான ஏழு விடயங்கள் உள்ளன. அவை.

1. **கொள்முதல்** (Procurement)
2. **சந்தை** (Market)
3. **பொருளின் காலாவதி ஆகும் காலம் மற்றும் சலுகை** (Expiry and Offer)
4. **சீசன்** (Season)
5. **பொருளின் பயன்பாடு** (Usage)
6. **முதலீடு** (Investment)
7. **விலை நிர்ணயம்** (Costing).

இந்த ஏழு விஷயங்களும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட வேண்டியவை. அடுத்தடுத்து வரும் வாரங்களில் இந்த விடயங்கள் ஒவ்வொன்றையும் விளக்கமாகப் பார்ப்போம். என்றாலும் இப்போதைக்கு இந்த ஏழு விடயங்கள் பற்றி சுருக்கமாகப் பார்க்கலாம்.

### கொள்முதல்

எந்தவொரு விடயத்திலும் தொடக்கம் சரியாக இருக்க வேண்டும் என்பார்கள். அது தொழிலுக்கு நன்றாகவே பொருந்தும். நீங்கள், உங்களுடைய தொழிலுக்குத் தேவையான பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் பிறவிடயங்களை முதலீடு செய்து, வாங்க வேண்டி இருக்கிறது. இவற்றில் மிகக் கவனமாக செயல்படுவதன் மூலம் நஷ்டத்தைத் தவிர்த்து, இலாபம் பார்க்க முடியும்.

தொழிலின் தொடக்கத்தில் நீங்கள் அடையும் இலாபம் சிறிய அளவில் இருந்தாலும் கூட, அது உங்களை உற்சாகமாகச் செயல்பட வைக்கும். இதனால் முடிந்தவரை நமக்கு தேவையான பொருளை நேரடியாக உற்பத்தியாளரிடம் இருந்து வாங்குவதற்குப் பார்க்க வேண்டும். இல்லையெனில், குறைந்தபட்சம் இரண்டாம் நபரிடம் வாங்க வேண்டும். அடுத்தடுத்து கை மாறிய பிறகு ஒரு பொருளை வாங்கினால் அதன் மூலம் பெரிய அளவில் இலாபம் பார்க்க முடியாது. சிலர் "நன்றாகத்தான் வியாபாரம் செய்தேன். நஷ்டம் அடைந்து விட்டேன்" என்பார்கள். காரணம், பொருளைக் கொள்முதல் செய்யும் போது, அதை எந்த இடத்தில் வாங்குகிறோம், என்ன விலைக்கு வாங்குகிறோம் என்பதைக் கவனிக்கத் தவறி இருக்கலாம்.

### சந்தை

அடுத்து நாம் விற்க நினைக்கும் பொருளுக்கான சந்தை எது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தொழில் செய்யக் கூடிய இடம்தான் நம் பொருளுக்கான சந்தை. அதாவது, நம் பொருளை எந்த இடத்தில் விற்கப்போகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

புறக்கோட்டை 4 ஆம் குறுக்கில் நகைக் கடை வைத்தால் விற்பனை ஆகுமா? அதைப் போல எந்த இடத்தில்? எந்தப் பொருளை? விற்க வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும். அதற்கு சந்தையை நன்றாக ஆய்வு செய்ய வேண்டும்.

நம்முடைய பொருளின் வாடிக்கையாளர்கள் யார்? அவர்களை நாம் எப்படி சென்றடைவது? நம்மிடமிருந்து அவர்கள் எப்படிப்பட்ட சேவைகளை எதிர்பார்க்கிறார்கள்? என்கிற கேள்விகளைக் கேட்டு தெளிவான பதிலை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

### பொருள் காலாவதி ஆகும் காலம் மற்றும் சலுகை

நாம் கொள்முதல் செய்யும் பொருள் எப்போதும் அதிகபட்ச காலாவதி திகதியைக் கொண்டதாக இருக்க வேண்டும். சீக்கிரத்தில் காலாவதியாகும் பொருட்களை வாங்கி, அந்த காலகெடுவுக்குள் விற்க முடியாமல் போனால், நஷ்டம் அதிகமாகும். நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து வாங்கும் போது இந்தப் பிரச்சினை இருக்காது.

மேலும், பொருளை கொள்முதல் செய்யும் போது, கொள்முதல் செய்யும் அளவைப் பொறுத்து, ஏதேனும் சலுகை இருக்கிறதா? என்பதைக் கேட்டு பார்க்க வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில், நம் தொழில் தேவையைப் பொறுத்து, அதற்கேற்ப சலுகையைப் பயன்படுத்திக் கொள்முதல் செய்து, இலாபம் பார்க்கலாம். சலுகை விலையில் பொருளை அதிகமாகக் கொள்முதல் செய்யும்போது அந்தப் பொருளின் காலாவதி ஆகும் காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### சீசன்

வாணிபத்தில் 'சீசன்' எனப்படும் பருவ காலம் என்ற ஒரு முக்கிய விடயம் உள்ளது. அதாவது, "எல்லா சீசனுக்கும் விற்கும் பொருள், குறிப்பிட்ட சீசனுக்கு மட்டும் விற்கும் பொருள்" என்று சீசனை வைத்துப் பொருட்களை இரண்டாகப் பிரிக்கலாம். நம்முடைய பொருள் விற்பனை ஆவதற்கான சீசன் இருக்கிறதா? என்பதைப் பார்க்க வேண்டும். "எல்லா சீசன்களிலும் பயன்படுத்தப்படும் பொருள்" என்றால் பிரச்சினை இல்லை. "குறிப்பிட்ட சீசனில் மட்டும் பயன்படுத்தப்படும் பொருள்" என்றால் அதன் கொள்முதல் விஷயத்திலும், விற்பனை உத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். இல்லை என்றால் நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

அதேபோல், விழாக்கள், பண்டிகைகள் உள்ளிட்ட நேரங்களில் நம்முடைய தொழிலை வித்தியாசமாகத் திட்டமிட வேண்டும். அப்போதுதான் போட்டியாளர்களைவிட அதிகமாகத் தொழில் செய்ய முடியும். சர்வதேச அளவில் தொழில் செய்யும் போது, நாம் ஏற்றுமதி அல்லது இறக்குமதி நாடுகளின் பொருட்களுக்கான சீசன்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

(இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்னொருவரை வதைப்பதில் இன்பம்

இன்னொருவர் வதைபடுவதை ரசிப்பதற்கென்றே ஒரு பெரும் கூட்டம் இருக்கின்றது, இந்த ரசனை நேற்று ஆரம்பித்தது அல்ல, அடிமைகளை சிங்கங்களோடு போராடவிட்டு அவை கடித்துக் குதறியதை கைகொட்டி ஆர்ப்பரித்து ஒரு காலத்தில் பார்த்துரசித்தவர்கள் ரோமர்கள். இந்த நவீன கணினி யுகத்தில் கொஞ்சம் ரசனை மாறி இருக்கின்றது, அவ்வளவுதான்.

சேவலைச் சேவலோடு மோத விட்டு ரசிக்கிறார்கள். காளை மாட்டை மனிதனுடன் அடிபடவிட்டு குதூகலிக்கின்றார்கள். அமெரிக்க குத்துச் சண்டை வன்முறையின் உச்சக் கட்டம். கையில் அகப்பட்டதை எல்லாம் எடுத்து மிருகத்தனமாக அடிக்கிறார்கள். இதை அலைமோதும் ஜன நெரிசல் பார்த்துக் களிக்கின்றது

இந்த வரிசையில் இப்பொழுது ஆப்கானிஸ்தானில் நாய்களை நாய்களோடு மோதவிடுவதாக செய்திகள் வந்திருப்பதுதான் இன்றைய முதல் புதினம்.

"இஸ்லாமிய மதத்திற்கு விரோதமானது" என்று கூறி, தலிபான் அமைப்பு இதை ஒரு காலத்தில் தடை செய்திருந்ததது. இப்பொழுது உத்வேகத்தோடு இந்த விளையாட்டு மீண்டும் ஆரம்பித்துள்ளது. இங்கு வாரந்தோறும் விடுமுறை தினமான வெள்ளியன்று தலை நகரான காபூலில் இடம் பெறும் இந்த மோதல்களுக்கு நாய்ச் சொந்தக்காரர்கள் தமது நாய்களுடன் வந்துவிடுவார்கள். பொதுவாக இந்த ஆக்ரோஷமான மோதல்களில் ஒரு நாய் இன்னொரு நாயைக் கொல்ல விடுவதில்லை என்பது நமக்கு மன ஆறுதல் அளிக்கும் தகவல். ஒரு நாய் இன்னொன்றை மடக்கிப் பிடித்தால் அல்லது அடிபடுவதை விட்டு விட்டு ஓடிப்போனால் போட்டி முடிவுக்கு வரும். நாய்களின் காயங்கள் விரைவில் குணமாகும். குளிர் காலம் என்பதால், நவம்பர் தொடக்கம் மார்ச் வரையிலான காலப்பகுதியில் மட்டுமே நாய்களின் மோதல்கள் நடப்பதாகக் கூறுகின்றார்கள்.

இன்னொருவரை வதைப்பதில் இன்பம் காண்கிறார்கள் இவர்கள். நம்மைச் சுற்றி இப்படியானவர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

புதினப்பூங்கா
ராஜேஷ்மணாளன்

# மீண்டும் பெருகுமா மீன்வளம்?

மனித உணவுக்கு மீன் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். மாமிசம் புரதச்சத்து நிறைந்த ஒன்றுதான். அதிலும் மீன் ஆரோக்கியமான உணவு. நாம் ஒவ்வொருவரும் அதிகமாக உண்ணவேண்டியது மீன்தான்!

மீன் பிடித்தல் மூலம் கிடைக்கும் இலாபம் பல பில்லியன் டொலர் தொகைகளால் அதிகரிக்கலாம். அதற்கு இப்பொழுதுள்ள தொகை மீன்களை அப்படியே பிடிக்காது விட்டு விட வேண்டும் என்கிறது உலக வங்கி. இவர்கள் ஆய்வின்படி அளவுக்கு அதிகமாக இப்பொழுது மீன் பிடிக்கப்பட்டு வருவதால், வருடா வருடம் 80 பில்லியன் டொ[illegible] தொகையை நாம் இழக்கின்றோம் என்று கூறப்படுகின்றது. மீன்கள் கிடைப்பது அரி[illegible] தொடங்க நாம் இவற்றைத்தேட மேலதிகமாகச் செலவிடும் தொகைதான் இது என்[illegible] உலகவங்கி. மில்லியன் கணக்கானவர்கள் மீனையே தம் உணவுக்கு நம்பி இருக்கின்ற[illegible] உலக சனத் தொகைக்கு உணவளிக்க மீன் என்பது முக்கியமான ஒன்றாகின்றது. இந்த தொ[illegible] 2050 இல் 9.7 பில்லியனைத் தொடும் என்கிறது ஐ.நா.சபை.

மீன்பிடித்தலை ஒரு குறுகிய காலத்திற்கு நிறுத்திவிட்டு, அவர்களுக்கு மாற்றீடாக ஏ[illegible] ஒரு தொழிலைக் கொடுத்து உதவினால், அவர்களுக்கும் பொருளாதாரத் தாக்கம் இ[illegible] மீன் வளமும் இக் கால கட்டத்தில் பெருகும். மீண்டும் மீன்பிடித் தொழிலை ஆரம்பி[illegible] போது நல்ல இலாபம் ஈட்ட முடியும்.

நடைமுறைப்படுத்தப்படுமா இந்தத் திட்டம்?





## மிதமிஞ்சிய பணமும் மிதக்கும் உல்லாசமும்

தாராளமான உழைப்பு வரும் போது, ஜாலியாக தாராள மனசோடு செலவழிக்கத் தலைப்பட்டு விடுகிறார்கள். அவசியமோ இல்லையோ தம் விளையாட்டுப் பொம்மைகள் போல ஆடம்பர கார்களை வாங்குகிறார்கள். ஆடம்பர வீடுகளைக் கட்டுகிறார்கள். எதையும் கொஞ்சம் வித்தியாசமாகச் செய்ய ஆசைப்படுபவர்கள் இவர்கள். இந்த ரஷ்ய நாட்டுப் பணக்காரரின் விளையாட்டுப் பொம்மை ஓர் ஆடம்பரக் கப்பல். ரஷ்ய நாட்டு Andrey-Melnichenko என்ற கோடீஸ்வரரின் விளையாட்டுப் பொம்மைதான் இது!

இதன் பெறுமதி சுமாராக 442 மில்லியன் டொலர்.

நீளம் 468 அடி. பிக் பென் மணிக் கூட்டுக் கோபுரத்தைவிட உயரமான 300 அடி உயரமான மூன்று பாய் மரங்களைக் கொண்டது இந்த இராட்சத உல்லாசக் கப்பல் என்கிறார்கள்.

ஜெர்மன் கப்பல் கட்டுத்துறை ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த உல்லாசப் படகு பிரமிக்கத்தக்க வகையில் பல நவீன விடயங்களைக் கொண்டிருக்கும் என்று சொல்லப்படுகின்றது. எட்டு தளங்களைக் கொண்ட இந்தக் கப்பலின் மேல் தளத்தில் வானூர்தி ஒன்றை இறக்க முடியும். நீருக்கடியில் உள்ளதை அவதானிக்கவும் இரு பிரத்தியேக அறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

போயிங் 737 விமானம் ஒன்றிற்கும் சொந்தக்காரரான இவர் கவனம் இப்பொழுது உல்லாசப் படகுகள் பக்கம் திரும்பி இருக்கின்றது.

சந்தனம் மிதமிஞ்சி இருக்கின்றது. எங்கேயாவது பூசிக் கொள்வோமென்று நினைக்கிறார் போலும்.

## வேகமும் மோகமும்

"மெதுவாகவும் நிதானமாகவும் சென்றால் வெற்றி நிச்சயம்" என்கிறது ஆங்கிலப் பழமொழி. தமிழில் ஆமை, முயல் கதை காலங் காலமாகச் சொல்லப் பட்டு வருகின்றது. ஆனால் அசுர வேகத்தில் வளரும் விஞ்ஞானம் இதற்கு ஒப்புதல் அளிக்கத் தயாராக இல்லை. "எல்லாம் வேகம் எதிலும் வேகம்" என்பதுதான் இன்றைய தாரக மந்திரம். வேகம் பற்றி பேசுவதால் உலகின் வேகமான கார் எதுவென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? உலகறிந்த இத்தாலிய ஆடம்பரக் கார் உற்பத்தி நிறுவனமான லம்போகினியின் Hurac Performante என்ற கார்தான் இன்று உலகில் அதிவேகமாக ஓடக் கூடிய கார் என்கிறார்கள்.

முன்பு Porsche 918 Spyder என்ற கார்தான் உலகில் அதிவேகமாக ஓடக் கூடியது என்ற பெயரை 2013 இலிருந்து பெற்று இருந்தது. இதன்விலை இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் கசியும் தகவல்கள் இதன் விலை 350,000 டொலராக இருக்கலாம் என்கின்றன. சுவிஸ் நாட்டில் இந்த மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் மோட்டார் கண்காட்சியில் இது முதற் தடவையாக பொது மக்கள் பார்வைக்கு விடப்படும் என்கிறார்கள்.

தற்போதைக்கு இதுதான் உலகின் அதி வேகமான கார். ஆனால் ஜெட் வேகத்தில் வளரும் விஞ்ஞானம் மிக விரைவில் இதைவிட வேகமான ஒன்றை அறிமுகப்படுத்தப்போவது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யா / வைத்தீஸ்வராக் கல்லூரி


அதிபர் திருமதி வாசுகி தவபாலன்

## வரலாறு

தொகுப்பு :
**அ.றொக்ஷன்**

"சைவச்சிறார்கள் தத்தம் சூழலிலே கல்வி கற்பதற்குச் சைவாபிமானிகள் உதவ முன்வரவேண்டும்", என்ற நாவலர் பெருமானின் அறைகூவல், ஆசிரியர் தம்பு நாகமுத்துவின் அடிமனதில் ஆழப்பதிந்ததன் விளைவே யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூயின் தோற்றமாகும். ஆசிரியர் தம்பு நாகமுத்து தாம் வாழ்ந்த சூழலிலே "வசதி வாய்ப்புகளற்ற ஏழைச்சிறார்களுக்கு எழுத்தறிவூட்ட வேண்டும்" என்ற நோக்கிலே 1913ஆம் ஆண்டு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு வடக்கே, அவ்வாலயத்திற்குச் சொந்தமான காணியிலே கொட்டகை அமைத்து "வைத்தீஸ்வர வித்தியாலம்" என்ற பெயரில் 07 மாணவர்களுடனும், 04 ஆசிரியர்களுடனும் இப்பாடசாலையை ஆரம்பித்தார்.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் மகுட வாசகத்தைத் தாங்கியமைந்த இவ்வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை - 103 வருடங்கள் - சைவப்பாரம்பரியத்தைப் பேணி வருகின்ற பாடசாலையாக மிளிர்கின்றது. இக்கல்லூரியின் முத்லாவது அதிபராகத் தம்பு நாகமுத்து (1913 - 1918) பொறுப்பேற்றார். அவரைத்தொடர்ந்து சு.சுப்புராவ் (1918 - 1927), சுவாமி விபுலானந்தர் (1927 - 1931), சி.இரகுபதி (1931 - 1935), ச. அம்பிகைபாலன் (1935 - 1968), எஸ்.சிவபாதசுந்தரம் (1968 - 1972), ஏ.நடராஜா (1973 -1980), எஸ். பி. பாலசுப்பிரமணியம் (1980 - 1982), சி.குணபாலசிங்கம் (1982 -1984), சி.சிவசரவணபவன் (சிற்பி) (1984 - 1993), து.சந்தோசம் (1993 - 1998), நா.வன்னியசிங்கம் (1998 - 2010), மு.மகேந்திரன்(2010 - 2014), தி.சத்தியபாலன் (2014 -2016) ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளனர். தற்பொழுது 11. 01. 2017 தொடக்கம் திருமதி வாசுகி தவபாலன் அதிபராகப்பொறுப்பேற்று கடமையாற்றி வருகின்றார். அவரின் கீழ் 325 மாணவர்களுக்கு 44 ஆசிரியர்கள் கல்வி புகட்டும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

சைவப்பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் இந்தக் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானுக்கு, "காலைப் பூஜை நடைபெற்ற பின்னரே,'கல்லூரியின் அன்றாடச் செயற்பாடுகள் ஆரம்பிக்கின்றன" என்பது விஷேடமாகக் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இருப்பினும், "எம்மதமே சம்மதம்" என்ற பரந்த மனப்பாங்கிற்கிணங்க, இக்கல்லூரியில் இயங்கும் கிறிஸ்தவ மன்றத்தினால், வருடாவருடம் ஒளிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இங்கு கல்வி கற்கும் இஸ்லாமிய மாணவர்கள் தமது மத அனுஷ்டானத்துடன் காலைப் பிராத்தனையை நிகழ்த்தவும், வெள்ளிக்கிழமைகளில் ஜூம் - ஆத் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குச் செல்லவும், தமது கலாசார சீருடை அணியவும் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்கல்லூரியில் இயங்கும் தமிழ்ப் பேரவை வருடம்தோறும் நடைபெறும் தமிழ்த்தினப்போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பற்றச் செய்வதுடன் முத்தமிழ்விழாவை நடத்தி அன்றையதினம் "தமிழ்அலைகள்" என்னும் சஞ்சிகையை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சாதனைகள்

- 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில், கலைப்பிரிவைச் சேர்ந்த ஐ.நூறில்சியா 3ஏ பெறுபேற்றையும் வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த சி.சுஜீவன் 2ஏ,சி பெறுபேற்றையும் உயிரியல் பிரிவைச் சேர்ந்த ச.தனுஜா 2சி,எஸ் பெறுபேற்றையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த ந.ஜெயந்தன் ஏ,பி,சி பெறுபேற்றைப்பெற்றுப் பல்கலைக்ழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.
- 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவைச் சேர்ந்த ஈ.தனுசன் ஏ,2பி பெறுபேற்றைப்பெற்று மொறட்டுவப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப்பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் சித்தி ஜெஸீரா மௌசூக் 5ஏ,2பி,சி.எஸ் பெறுபேற்றையும் ஜெ.சாலினி 4ஏ, 3பி, சி பெறுபேற்றையும், ப.ஜெயப்பிரகாஷ் 3ஏ,பி,3சி,2எஸ் பெறுபேற்றையும் பெற்றுக்கொண்டனர்.
- 2014ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சு.லோஜிதன் 4ஏ, 3பி,சி,எஸ் பெறுபேற்றையும் கு.மதுரா 4ஏ, 2பி,2சி பெறுபேற்றையும், த.ஜெயந்தினி 3ஏ,2பி,2சி,எஸ் பெறுபேற்றையும் பெற்றுக்கொண்டனர்.
- இக்கல்லூரியில் விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் தரம் 12 கலைப்பிரிவில் கல்வி பயிலும் சுஜீவா ரவீந்திரன் 2013 - 2016 வரை தொடர்ச்சியாக 04 வருடங்கள் தட்டெறிதல், குண்டெறிதல் போட்டிகளில் பங்குபற்றித் தேசிய மட்டத்திற்குத் தெரிவானார். அத்துடன் 2016ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற தட்டெறிதல் போட்டியில் 6ஆம் இடத்தினைப்பெற்று வடமாகாணத்திற்கு இருபுள்ளிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். இவரை உடற்கல்வி ஆசிரியர்களான திருமதி ஜெ.நித்தியானந்தன், த.சிவபாலன் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
- 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய கனிஷ்ட தலைமைத்துவப் பயிற்சியில் இக்கல்லூரியிலிருந்து பங்குபற்றிய மாணவன் க.பிரணவன் முதலாமிடத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். இவரை ஆசிரியர் ந.நரேந்திரா பயிற்றுவித்திருந்தார்.
- British council இனால் 2015 - 2016 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட Internationl school Award நிகழ்வில் பங்குபற்றிய இக்கல்லூரி ISA full Award டைப் பெற்றுக்கொண்டது. ISA coordinator ஆக ஆங்கில பாட ஆசிரியர் திருமதி லலிதா தவநேசன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- 21.02.2013 இலிருந்து இக்கல்லூரியில் இயங்கிவரும் 'மதர் ஸ்ரீலங்கா' அமைப்பானது "சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருத்தலும் சுற்றாடலைப் பயன்படுத்தி சிக்கனமான வாழ்வை மேம்படுத்துதலும்" என்ற தொனிப் பொருளிலான செயற்பாட்டிற்காக 'மதர் ஸ்ரீலங்கா' தலைமை அமைச்சின் பாராட்டைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்







## சவால்கள்

நகரத்தின் மத்தியில் 1913 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரி நூறு ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையிலும் அதே கட்டடத் தொகுதிகளுடன் எவ்வித திருத்தமும் செய்யப்படாமல் காட்சி தருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்

ஏனைய 1AB பாடசாலைப்போன்று சகல விளையாட்டுக்களையும் விளையாடக் கூடிய மைதானம் இக்கல்லூரியில் காணப்படாமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில்ான நூலகக் கட்டடமோ, நூல்களோ இக்கல்லூரியில் இல்லையென்றே கூறவேண்டும்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துளசி

# கண்ணீர் வந்த கதை

கண்ணீர் மிக விசித்திரமான ஒரு விசயம்.
அழுதாலும் கண்ணீர் வரும்
சிரித்தாலும் கண்ணீர் வரும்
கண்ணீரைப் பார்த்தாலே கண்ணீர் வரும்
இதுதான் விசித்திரம்.

### 01. முதல் கண்ணீர் வந்த கதை

பேன், பேன் உடம்பு முழுக்க பேன். கால், கை, தலை எல்லா இடமும் ஊருவது போல இருந்தது. நான் நினைக்கிறேன் இது ராவிலிருந்து வந்திருக்க வேண்டும். அவளோடுதான் நான்கைந்து நாளாய் எல்லா இடமும் சேர்ந்து திரிந்தேன். ஏன் என்றால், எனக்கு நடக்க தெரியாது, இப்போது தான் கொப்பைப்பிடித்து தவழப் பழகுகின்றேன். இனித்தான் நடந்து, பாய்ந்து, வாழப்பழகப் போகின்றேன். அப்போ, வந்துரா யார்? என்று கேட்டால், வேறு யாருமில்லை என் அம்மா. இப்போது தலையில், முதுகில் என்று என்னில் கிடக்கும் பேன் எல்லாத் தையும் கட, கட என்று எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும் என் அம்மா.

கையில் ஒரு பெரிய பேன் தெறித்து விழ, வாயில் எடுத்து போட்டேன். ச்சீக் பேன் அவ்வளவு நல்லாயில்லையே. இதை எப்பிடி, தின்பது. திரும்பி பார்த்து சிரித்தேன். அப்பிடியே பாய்ந்து மார்பிலே முகத்தைப் பதித்து முதுகைக்கட்டிக் கொள்ள அம்மா அடுத்த கொப்புக்கு லாவகமாய் பாய்ந்து மற்ற கொப்புக்கு பாயும் போது இது வரை அப்படி நிகழ்ந்ததில்லை, கீழ் நோக்கி, கீழ் நோக்கி போய்க் கொண்டிருந்தேன். ஒருகையால் என்னை இறுக்கிப் பிடித்தபடி, நிலத்தில் முதலில் அம்மாவும் அடுத்ததாய் அம்மாவுக்கு மேல் நானும் விழுந்தேன். என்ன நடந்தது? என்று தெரியாது, நிறைய நேரமாகியும், அம்மா திரும்ப எழும்ப வேயில்லை. வேறு யாரோ வந்து என்னை தூக்கிக் கொண்டு போகும் போது, இரண்டு கண்ணகளின துும் கீழ் பகுதிகளிலிருந்தும் ஈரமாய் ஏதோ தண் ணீராய் கசிந்தது. என்ன இது?...

எங்கே, எந்தப்புள்ளியில், குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சியில் மனிதன் வந்ததாய் சொல்லப் படுகிறதோ? அந்தப் புள்ளியில் - ஈரமாய், அதன் கண்களில் என்னவென்று தெரியாமல் வந்த ஈரம் தான், முதல் கண்ணீர் வந்தகதை.

### 02. கொழ,கொழக் கண்ணீர் கதை

எல்லாப்பரிணாமும் அடைந்து கிறிஸ்துவிற்கு பிறகு, பிறந்த போது நடந்த கதை இது.

கதவை சாத்திவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வேலைக்கு போகின்ற அப்பாவை பார்த்து அம்மா, அம்மா என்று கொழ, கொழ கண்ணீரோடு விழுந்து குழறி அழுதிருக்கிறேன். அதே அப்பா நாலு வயசாவதிற்கிடையிலேயே, நேர்சரியில் கொண்டு போய்விட்ட போது "அங்கே போகமாட்டேன்" என்று கண்ணை மூடிக்கொண்டு கண்ணீரை ஊத்தியிருக் கிறேன். அண்ணரோட அடிக்கடி சண்டை பிடிச்சு, அ்ண்ணர் மெல்லமா தட்டினதுக்கே நிலத்தில விழுந்து கிடந்து அழுதிருக்கிறன்.

(அப்பதான் அதைப் பார்த்தாவது அண்ணருக்கு, அடி விழும் எண்டு தெரியும்)

அப்படி எல்லாம் அழுத நான் ஒரு முக்கியமான இடத்தில் எல்லாரும் அழுத போது அழாமலே விட்டு விட்டேன். பரிணாம வளர்ச்சி அடைந்த பின் நான் நினைக்கின்றேன் சில வேளை தானாகச் சுரக்க வேண்டிய இடங்களில் கண்ணீர் சுரப்பது நின்று விட்டது என்று.

### 03. கண்ணீரை அடக்கிய கதைகள்

நிறைய இடங்களில் கண்ணீரை கஷ்டப்பட்டு கண்ணுக்குள்ளயே தேக்கியிருக்கிறேன்.

முக்கியமாய் நிஜத்திலே நடக்காத கற்பனையி லேயே பின்னப்பட்ட கதைகளை வாசித்து விட்டும், படங்களை பார்த்து விட்டும். கதைகளில் கண்ணீர் வர வைத்தவர்கள் நிறையப்பேர்.

நரேந்திர பல்லவன் சிவகாமியை விட்டு விட்டு போகும் போதும், அருள் மொழி வர்மன் பூங்குழலியை விட்டுப் போகும் போதும், கண்ணோரங்களில் பனி படர்ந்தது போலிருந்தது. கோபத்தில் கல்கிக்கு நாக்கைப் புடுங்குகின்றது போல நாலு கேள்வி கேட்டு ஒரு கடிதம் போடலாமா என்று யோசித்தேன். அட்ரஸ் கிடைக்கவில்லை.

இதே போல போட்டுத்தாக்கிய இன்னுமொரு இடம்

ஜீனோ கடைசியாய் கவிதை சொல்லும் இடம்.

*"அழகைப்பார், அழுக்கைப்பார்*

*பழகிப்பார், படுத்துப்பார்...*

*வித்துப்பார், வாங்கிப்பார்*

*பத்துப்பேரைக் குத்திப்பார்*

*தேடிப்பார், தேடிப்பார்*

*திறமை இருந்தால்*

*செத்துப்பார்..."*

ஒரு நாய்,அதுவும் ரோபோட் நாய் அதுக்காக அழ வைத்து விட்ட சுஜாதாவையும் என்னால் வஞ்சம் தீர்க்க முடியவில்லை.

### 04. கடைசியாய் கண்ணீர் வந்த கதை

சில சம்பவங்கள், காட்சிகளை பார்க்கும் போது கண்றாவிக் கண்ணீர் கிளிசரீன் பூசினது போல கொட்டும். இதற்கெல்லாம் இவன் அழுகிறானே என்று நினைப்பார்கள். நினைத்து விட்டு போங்கள் நான் அழுது விட்டு போகிறேன். என்னால் அழவா வது முடிகிறதே, உன்னால் அது கூட முடியவில்லை.

"ஒரு சனியன் ரோட்டில் நின்ற நாயை கல்லால் எறிந்து நாய் நொண்டிய போது அழுகை வந்தது"

"மொட்டை வெயிலுக்குள் குழந்தையை தூக்கி கொண்டு சாம்பிராணி பெட்டி வித்தவளை பார்த்த போது அழுகை வந்தது"

கரையொதுங்கிய மூன்று வயது அய்லானைப் பார்த்த போது கண்ணைக்கசக்கி கொண்டேன்.

"என்னடா?" எதிரில் இருந்தவன் கேட்க

"கண்ணுக்குள்ள ஏதோ விழுந்துட்டுது

[illegible] கண்ணீர் வருது"

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ஆயிரம் ஆண்டுகளின் பின் வந்த...

இந்தத் தருணத்தில் தலைவர் பிரபாகரனுக்கும் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் நெருக்கமான உறவு மலர்ந்திருந்தது. பூகோள அரசியலில் புலிகளின் கொள்கைகளை அன்ரன் பாலசிங்கமே வரையறை செய்தார்.

புலிகளின் தமிழீழக் கொள்கைகளையும் தலைவர் பிரபாகரனின் எண்ணத்திலும், சர்வதேச விதிகளுக்கு உட்பட்டும் வரையறை செய்தவரும் அவரே. புலிகள் ஆயுத ரீதியாக வளர்ச்சியடையவும் தமிழக முதலமைச்சர் எம். ஜி.ஆரின் உதவிகளைப் பெறவும் வழிசமைத்தவர்களில் முக்கியமானவர் பாலசிங்கமே. கருணாநிதியின் சூழ்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிய வைத்தவரும் இவரே. தலைவர் பிரபாகரனின் அரசியல், தத்துவ ஆசானாக - அரசியல் வழிகாட்டியாகவும் இருந்த தருணத்தில்தான் தலைவர் பிரபாகரன் - மதிவதனி காதல் விவகாரம் எழுந்தது. இந்தக் காதலுக்கு மூத்த தலைவர்கள் பலரும் எதிர்ப்பைக் கிளப்பவே அவர்களை சமாதானப்படுத்தி தலைவர் பிரபாகரனின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தார்.

இந்தியாவின் அனுசரணையுடன் திம்புப் பேச்சு நடந்தபோது போராட்ட அமைப்புகளுக்கு அரசியல் ஆலோசனை வழங்கினார். யுத்தகளத்தில் அடிவாங்கி புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை அரசாங்கம் ஆரம்பித்த போதெல்லாம் புலிகளுக்கு மதியுரை வழங்கியவர் இவரே. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு அவஸ்தைப்பட்ட போதும் தமிழகத்திலும் ஈழத்திலும் ஆயுதம் தூக்காத மக்கள் போராளியாக வாழ்ந்தவர் அன்ரன் பாலசிங்கம். இக்கட்டான சூழலிலும் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தனது மனைவியான அடேலுடன் வாழ்ந்ததுடன் புலிகள் தவறுகள் விட்ட போதெல்லாம் அதை சுட்டிக்காட்டி திருத்தினார். போராளிகளுக்கும் மூத்த தளபதிகளுக்கும் அரசியல் குறித்த பாடங்களை கற்றுக் கொடுத்தார். ஆங்கில நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்தும் வழங்கினார். புலிகளின் அரசியல், தத்துவ ஆசிரியராகவும் விளங்கினார்.

2002 அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு ஆரம்பமானபோது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தை வலியுறுத்தி அதற்கான ஏற்பாடுகளையும் பாலசிங்கம் செய்தவர். தேச விடுதலை நோக்கிய போராட்டத்தில் சர்வதேச தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இராஜதந்திரி அன்ரன் பாலசிங்கமே. யுத்தத்தை விடவும் அபாயமான சமாதான காலத்தை புலிகள் வெற்றி கொள்ள காராணமாக அமைந்தவர் அன்ரன் பாலசிங்கமே. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது புலிகளின் எல்லைகளை வரையறை செய்வதில் அரசாங்கம் செய்த சூழ்ச்சிகளை இலகுவாக முறியடித்த சாணக்கியராக அன்ரன் பாலசிங்கம் விளங்கினார்.

புலிகளின் போர் முகமாக உலகினரால் அறியப்பட்டவர் தலைவர் பிரபாகரன் என்றால், புலிகளின் அரசியல் முகமாக அறியப்பட்டவர் அன்ரன் பாலசிங்கம். தனது கருத்தை வெளிப்படையாகவும் நையாண்டியாகவும் அதேநேரம் ஆணித்தரமாகவும் கம்பீரக் குரலில் அன்ரன் பாலசிங்கம் ஒலித்தவர். தமிழர் தாயகத்தை மீண்டும் யுத்த மேகம் சூழத்தொடங்கியபோது தீராத நோய் காரணமாக மரணமடைந்தார்.

தத்துவாசிரியனாக - அரசியல் மதியூகியாக - வழிகாட்டி யாக - ஆயுதம் தரிக்காத போராளியாக - தேசப்பற்றாளனாக - கொள்கை வகுப்பாளனாக - புலிகளின் அரசியல் முகமாக - தலைவர் பிரபாகரனின் குரலாக ஒலித்த நம் காலத்தின் அநிருத்தப் பிரம்மராயன் தான் அன்ரன் பாலசிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களை இதயத்தால் நெருங்கிய ட்ரேவர்



ப.தெய்வீகன்



ஈழத்தமிழர்களையும் அவர்களது போராட்டத்தையும் இதயபூர்வமாக நேசித்த ட்ரேவர் கிராண்ட் (Trevor Grant) காலமாகிவிட்டார். நுரையீரலின் உள்ளேயும் நெஞ்சுத் தசைகளின் மீதும் படர்ந்து படிப்படியாக உயிரைக்கொல்லும் மெஸ்தலியோமா (Mesothelioma) புற்றுநோயால் கடந்த இரண்டு வருடங்களாக பாதிக்கப்பட்டிந்த ட்ரெவர் கடந்த ஞாயிறன்று காலமானார்.

ட்ரேவர் கிராண்ட் போல தமிழர் ஆதரவு செயற்பாடுகளை ஓர்மத்துடன் முன்னெடுத்த அவுஸ்ரேலிய குடிமகன் ஒருவரை அவுஸ்ரேலியா இதுவரை கண்டதும் இல்லை. இனிமேல் காணப்போவதுமில்லை. 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஈழத்தமிழர் விவகாரத்தில் தனது ஆழமான கரிசனையை வெளிப்படுத்தி - ஒரு தீவிர செயற்பாட்டாளராக - களத்தில் இறங்கிய ட்ரெவர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் அவரது சக்திக்கும் அப்பாற்பட்டவை. அடிப்படையில் விளையாட்டு விமர்சன கட்டுரைகளை எழுதும் அவுஸ்ரேலியாவின் பிரபல ஊடகவியலாளர்தான் ட்ரேவர்.

மெயின்ஸ்ரிம் (Mainstream) ஊடகங்கள் எனப்படுகின்ற அவுஸ்ரேலிய முன்னணி செய்தியறைகளில் ஒரு பிரபலமான புள்ளி. ட்ரேவர் கிராண்ட் என்ற பெயருடன் வருகின்ற கட்டுரைகளுக்கு அவுஸ்ரேலியர்களின் மத்தியில் தனி மதிப்பும் அதேவேளை எதிர்கொள்வோருக்கு பயமும் இருந்தது. விமர்சன கட்டுரைகளை அவர் எழுதும் பாணி குறித்து இன்று வரைக்கும் புகழ்ந்து பேசுபவர்கள் உள்ளனர். அவுஸ்ரேலிய ஊடகத்துறை வரலாற்றில் மறக்கமுடியாத நபர் என்று கூறலாம்.

இப்படிப்பட்ட பெருமைகளை கொண்ட ஒருவர் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போர் முடிந்த கையோடு அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற ஈழத்தமிழர்களின் செயற்பாட்டு நிகழ்வுகளுக்கு வருகை தரத் தொடங்கினார். அவரை உள்ளீர்த்துக் கொண்டதில் ஹரன் மயில்வாகனத்தின் பங்கு அளப்பெரியது. அவுஸ்ரேலிய மக்களின் மனங்களை அறிந்து அவர்களுடன் அவர்களது மொழியிலேயே பேசக்கூடிய - எழுதக்கூடிய - ட்ரேவரின் வருகை ஈழத் தமிழர்களுக்கு அந்த காலப்பகுதியில் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

அவரது செயற்பாடுகள் பேச்சும் எழுத்தும் என்று தனித்திராது களத்தில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் - பேரணிகள் என்று குரல்கொடுக்கும் மெய்யான முன்னெடுப்புக்களாக அமைந்தன. போர் முடிந்த காலப்பகுதியில் தமது உறவுகளுக்கு ஏற்பட்ட பெருங் கொடுமையை வெளிக்கொண்டு வருவதற்கு கைகொடுப்பார் யார் என்று தவித்து கிடந்த தமிழர்களுக்கு ட்ரேவரின் வருகை பெரும் தெம்பாக அமைந்தது. ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவான அவரது நடவடிக்கைகள் பல்வேறு கிளைகளாக படர்ந்தன. இலங்கை பொருட்களுக்கான புறக்கணிப்பு போராட்டம் என்றாலும் அவர் முன்னுக்கு நின்றார்.

போர்க் குற்ற விசாரணைக்கு ஆதரவான போராட்டம் என்றாலும் அது குறித்த கட்டுரைகளை காரசாரமாக எழுதி ஏதாவது ஒரு ஊடகத்துக்கு




அனுப்பிவிட்டு பேரணியின் முன்பாக வந்து பதாகையோடு நிற்பார். இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிரான போராட்டம் என்றாலும் BOYCOTT SRILANKA CRICKET TEAM என்ற ரீ-சேர்ட்டுன் முன்னுக்கு வந்து நிற்பார்.

அவுஸ்ரேலியா முழுவதும் அறியப்பட்ட விளையாட்டு விமர்சகரான ட்ரேவர் இலங்கை கிரிக்கெட் அணியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் முன்னின்று பேசுவதா என்று அவுஸ்ரேலியாவிலுள்ள இலங்கை தூதரகம் அந்த காலப்பகுதியில் ஆத்திரமடைந்தார்கள். உடனே, தங்களுக்கே உரிய பாணியில் ஒரு பாணி போடும் நபரை வைத்து ட்ரேவரை தொலைபேசியில் அழைத்தனர்.

அவரைத் தாங்களே இலங்கைக்கு கூட்டிச் சென்று அங்குள்ள நிலமைகளை காண்பிப்பதாக கூறினார்கள். மகிந்த இராச்சியத்தில் தேனும் பாலும் பொழிவதை வந்து பார்க்கும்படி கேட்டார்கள். அழைப்பெடுத்த நபருக்கு பதிலளித்த ட்ரேவர் "நிச்சயம் வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் நடத்துகின்ற சித்திரவதை முகாம்களையும் எனக்கு காட்ட வேண்டும். நீங்கள் இன்னமும் மக்களை அடைத்து வைத்திருக்கும் முகாம்களையும் எனக்கு காட்டவேண்டும். போர்க் குற்றங்களை செய்துவிட்டு ஒளித்து வைத்திருக்கும் தடயங்களையும் எனக்கு காட்டவேண்டும். ஓம் என்றால் சொல்லுங்கள். நாளையே வருகிறேன்" என்றார்.

தொலைபேசி அழைப்பெடுத்த "பெருமகன்" "நீங்கள் ஒரு வெள்ளைப் புலி" (You are a white tiger) - என்றுவிட்டு அழைப்பைத் துண்டித்துவிட்டார். எதற்குமே ட்ரேவர் அஞ்சவில்லை. தான் வரிந்துகட்டிக் கொண்ட ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டினை யாருக்காகவும் சமரசம் செய்யவில்லை. "போர்க்குற்றம் புரிந்த இலங்கை அரசை அம்பலம் செய்வேன்" என்று கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற காலப்பகுதியிலேயே "தமிழ் ஏதிலிகள் பேரவை" என்ற அமைப்பை 2010 காலப்பகுத்தியில் ஆரம்பித்து அள்ளுகொள்ளையாக படகுகளில் அவுஸ்ரேலியாவுக்கு வந்த ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்தார்.

அந்தப் பிரச்சினை ஊடாக இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் இனஅழிப்புக் குறித்து எழுதத்தொடங்கினார். ஏதிலிகள் பேரவையிலிருந்து அவர் மேற்கொண்ட பணிகள் பரந்துபட்டவை. அச்சமயத்தில்தான் "Sri Lanka's Secrets – How the Rajapaksa regime gets away with Murder" என்ற புத்தகத்தையும் எழுதி, அந்த புத்தகத்துடன் வெளிநாடுகளுக்கும் சென்று பலரை சந்தித்து தமிழர்களுக்காக பேசினார்.

சுருக்கமாகச் சொன்னால், கடந்த ஏழு வருடங்களில் அவுஸ்ரேலியாலிலிருந்து ஈழத்தமிழர் உரிமைக்காக பாடுபட்ட உண்மையான ஒரு ஆத்மா ட்ரேவர்.

தமிழர்களின் போராட்டத்துக்கும் அவர்களின் விடிவுக்குமான வேட்கையில் இதயசுத்தியுடன் செயற்பட்டார். தமிழர்களுக்கு விசுவாசமாக பணியாற்றினார். எது செய்தாலும் இந்த சமூகத்துடன் இணைந்து செய்யவேண்டும். அவர்களுடன் இணைந்து பயணிப்பதுதான் சரியான பாதையாக இருக்க முடியும் என உறுதியாக நம்பினார். பாவம், அவரை இயக்கிய அமைப்புக்கள் அவருக்குள்ள பிரம்மாண்டமான முகவரியை சரியாக பயன்படுத்துவதற்கு பதிலாக, அவரை தீவிரமான கருத்துக்களுடன் அலைகின்ற ஒரு ஆவேசப் பேர்வழிபோல வெளிக்காட்டுவதிலேயே குறியாக இருந்தார்கள்.

தங்களைப்போலவே அவரும் We want Tamil Eelam என்று ரீ சேர்ட் அணிந்து வந்து தமிழீழ தேசிய கொடியுடன் வீதியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்களே தவிர, அவரை வேறோரு தளத்தில் ஆக்கபூர்வமான பணிகளுக்கான ஒரு நபராக முன்னிலைப்படுத்த விரும்பவில்லை.

ஒரு காலகட்டத்தில் ட்ரேவரின் பெயருக்காக அவரது ஆக்கங்களை அவ்வப்போது பிரசுரித்த அவுஸ்ரேலிய ஊடகங்கள்கூட அவரது தீவிர நிலைப்பாட்டை ஒருவித பிறழ்வுத்தன்மைபோலவே கண்டு கடந்துபோனார்கள். அந்த பாராமுகம் அவருக்கு மாத்திரமல்ல, அவருக்கு பின்னால் நின்றுகொண்டிருந்த தமிழர்களுக்குமாகத்தான் அமைந்தது.

காலத்துக்காலம் போராட்ட வடிவங்களை மாற்றியமைக்க வேண்டும் என்பதிலும் ட்ரேவரை போன்ற அங்கீகரிக்கபட்ட மனிதர்களை வேறு பயன்பாட்டுத்தளத்தில் செயற்படுபவர்களோடு இணைத்து பொதுவெற்றியை காணவேண்டும் என்பதிலும் யாருக்கும் பெருந்தன்மை இருக்கவில்லை. ட்ரேவர் யாருக்கு சொந்தம் எனக் கொண்டாடுவதில்தான் பலரும் சிரத்தையாக இருந்தனர். ஆனால், ட்ரேவர் தான் சார்ந்த அனைவருக்கும் நேர்மையாகப் பணி செய்தார். அரசியல் நிகழ்வுகளுக்கு அப்பால் தமிழர்களின் கலாசார நிகழ்வுகள், திருமண - மரண நிகழ்வுகள் ஆகியவற்றில்கூட கலந்துகொண்டு தனது உண்மையான அன்பை வெளிப்படுத்தினார்.

தமிழ் இசை நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து தனக்கு சற்றும் விளங்காத "அஸ்கு லஸ்கு ஏமோ ஏமோ" பாட்டுகளுக்குக்கூட முன்வரிசையிலிருந்து தலையாட்டி ரசித்து பாடியவர்களுக்கு கைகொடுத்து பாராட்டினார். தமிழ் சமூகத்திடமிருந்து எப்போதும் ஒரு அரவணைப்பை எதிர்பார்த்தார். தமிழ் சமூகத்துக்கு இன்னும் இன்னும் பெரும்பணி செய்ய வேண்டும் என்ற தீராத தாகத்துடன் தன் சொந்த செலவிலேயே எத்தனையோ காரியங்களை செய்தார். கடைசிவரை அதற்காக பேசினார். எழுதினார். இறுதியில் எல்லோரையும் போல சற்றும் விரும்பாத மரணத்திடம் அடைக்கலமானார்.

தமிழ் சமூகத்துக்கு தனது முழுமையான பணியை செய்யமுடியவில்லையே என்ற ஏக்கத்துடன்தான் அவரது உயிர் பிரிந்திருக்கும். அவரின் ஆன்மா சாந்தி பெற ஈழத்தமிழர்கள் அனைவரும் பிரார்த்திப்போமாக..!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏன் சுட்டவங்கள் எங்கட பிள்ளையளை..?



(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விடிய எழும்பினவுடன முத்தம் கூட்டினாப்பிறகுதான் அடுத்த வேலை பார்ப்பான். நான் கோயிலுக்கு போக வெளிக்கிட்டா, நான் நடந்து போகப் போறன் எண்டு சொல்லிப் போட்டு, மோட்டர் சைக்கிள்ல ஏத்திக் கொண்டு போய்விடுவான். அவங்கள் எங்க போறதெண்டாலும் சேர்ந்துதான் போவாங்கள். அதுதான் எமனும் ரெண்டு பேரையும் சேர்த்தே எடுத்திட்டான் போல"

## ஆரை நினைச்சு ஆறுதல்படுறது?

"இரவு 11.30 க்கு றோட்டால வந்த பிள்ளைகளை சுடலாமெண்டு பொலிசுக்கு சட்டம் சொல்லியிருக்கோ? இப்ப ஊரடங்குச் சட்டமும் இல்லை. அவசர காலச் சட்டமும் இல்லை. விடுதலைப் புலிகளும் இல்லை. பிறகென்னத்துக்குச் சுட்டாங்கள்? கொலைகாரன், கொள்ளைக்காரங்கள் எல்லாம் சுதந்திரமா றோட்டில திரிய, சும்மா அப்பாவிகளைத்தான் பொலிஸ் சுட்டுக் கொண்டிருக்குது. எங்கட பிள்ளையளைச் சுட என்ன உரிமை இருக்கு பொலிசுக்கு? இவங்களுக்கு யார் தீர்ப்புச்சொல்லப் போகினம்? மகிந்த அரசாங்கத்தில என்ர பிள்ளையைப் பறிகொடுக்கேலை. இந்த மைத்திரியின்ர நல்லாட்சிலதான் இப்படியெல்லாம் நடக்குது. இந்த அரசாங்கம் என்ர பிள்ளைமாதிரி ஒரு பிள்ளையத் தருமோ? கஜன்ர அம்மாவுக்கு கஜன்மாதிரி ஒரு பிள்ளைய குடுக்க முடியுமோ? கால்ல சுட்டிருக்கலாம், கையில சுட்டிருக்கலாம் இல்லாட்டி கட்டிவைச்சு அடிச்சிருக்கலாம். பொலிசுக்கு இப்படி சுடவேண்டிய அவசியம் என்ன இருக்கு?

சுலக்ஷன இந்தியாவுக்கு அனுப்பி மேல் படிப்பு படிக்க வைச்சு, அவனை பெரிய லெக்சரா ஆக்க வேணும் எண்டெல்லாம் கனவு கண்டன். 25 வயசுதான் ஆகுது என்ர பிள்ளைக்கு. சுலக்ஷன் இல்லாம கஜன் இருந்திருந்தாலும் ஒரு ஆறுதல். இல்லாட்டி கஜன் இல்லாம சுலக்ஷன் இருந்திருந்தாலும் ஒரு ஆறுதலா எங்களுக்கு இருந்திருக்கும். ரண்டு பேரும் ஒரேடியாப் போட்டாங்களே இப்ப நாங்கள் ஆரை நினைச்சு ஆறுறது?"

## நீதி கிடைக்க வேணும்

வழக்கு எப்படிப்போகிறது என்று பேச்சுக் கொடுத்தோம் "இந்த மாதம் 9 ஆம் திகதிதான் வழக்கின்ர விசாரணை வருகுது. ஒவ்வொரு வழக்குத் தவணையிலும் சுட்டவங்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்படுகுது. வழக்குக்கும் தவணை போடுகினம். இது இப்படியே நீண்டு கொண்டுதான் போகுது. எங்களுக்கு சரியான நீதி கிடைக்கும் எண்ட நம்பிக்கையில்லை. சுட்ட பொலிஸ்காரங்களும் ஜெயிலுக்க சிரிச்சுக் கொண்டு இருக்கிறாங்கள். அவங்கட மனதில எந்தப் பதட்டமும் இல்லை.

எங்களுக்கு நீதி கிடைக்க வேணும். ஏன் எங்கட பிள்ளைகளைச் சுட்டாங்கள் என்ற காரணம் எங்களுக்கு தெரிய வேணும். அவங்கள் என்ன பிழை செய்தாங்கள் எண்டும் தெரியவேணும்"

நீதி கேட்கும் அந்த தாயின் ஓலம் யாருக்கும் கேட்குமா?

# மகளிர் தினமும் நாமும்




மார்ச்-8, 1857 - அன்று முதல் உலகமெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக மகளிர் தினம் மார்ச் மாதம் 8 - ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

ஆனால், அது வந்த வரலாற்றை சற்று பின்னோக்கி பார்ப்போம். வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடந்த பெண்கள், தற்போது வானில் பறந்து கொண்டிருக்கின்றனர் என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றியே இந்த மகளிர் தினமாகும். இந்த உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்கு காரணமான போராட்டத்திற்கான வெற்றிகள் அவ்வளவு எளிதாக கிட்டவில்லை. ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள்தான் இது.

1910-ஆம் ஆண்டு பெண்கள் உரிமை மாநாடு நடைபெற்றது. இதில் உலகின் பல நாடுளைச் சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்துகொண்டு தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டினார். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜெர்மனி நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கிளாரா செர்கினே, ஒரு தீர்மானத்தை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார். அந்த தீர்மானத்தின் முக்கிய சாரம்சமாக மார்ச் மாதம் 8-ஆம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஆனால், அந்த தீர்மானம் நிறைவேறாமல் போனது. இதற்கிடையில், 1920-ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயிண்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் ரஷ்யாவை சேர்ந்த அலெக்ஸாண்டரா கேலன்ரா கலந்து கொண்டார். அவர்தான் உலக மகளிர் தினத்தை ஆண்டுதோறும் மார்ச் 8-ஆம் திகதி நடத்த வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

"நீ பெட்டைப் பிள்ளை. அடங்கியிருக்க வேணும் என்ன?" என்ற குரல்கள் சமுதாயத்தில் முற்றிலுமாக அடங்கும் [illegible] மகளிர் தினம்.

பார்வை நயம் - 13

# ஏன் சம்மதித்தாள்?



கணபதி சர்வானந்தா

தவமணி தடுமாறிக்கொண்டிருந்தாள். எத்தனை கங்கு மட்டை வைத்தாலும் அடுப்பு, "எரியமாட்டேன்" என்று அடம்பிடித்தது. தென்னந் தும்பை வைத்து ஊதி, ஊதி வாய் வலித்தது. பாடசாலைக்கப் போகும் சிறுவர்களைப்போல, வெளித் திண்ணையில் அடுப்படியை நோக்கி அமர்ந்திருந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அம்மா எவ்வளவு நேரமெண்டாலும் பொறுப்பா. பெரியம்மாவுக்குத்தான் பசியைத் தாங்கேலாது. அத்தை பசித்தாலும் கேட்கமாட்டா. பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு இருப்பா. மாமா கொடுத்தால் சாப்பிடுவார். இதுவரை வாய் திறந்து கேட்டது கிடையாது. மதிய உணவுக்காக அப்பப்ப வந்து போகும் அப்புக்குட்டி, சங்கரப்பிள்ளை, நாய், பூனை, காகம், கோழி இவர்களைச் சமாளிப்பதுதான் மிகவும் கஷ்டம்"

இதுதான் தவமணி குடும்பம். ஆண்பிள்ளை என்று சொல்லிக் கொள்ள மாமா ஒருவர்தான் இருக்கிறார். ஆனாலும் அவருக்கு எண்பத்தேழு வயதாகிறது. தவமணியுடன் இருப்பவர்கள் தத்தம் துணைகளை இழந்தவர்கள். மாமா மன்னார் கடையை நடத்துகிற சமயம் மாதா மாதம் வருகின்ற பணத்தில்தான் எல்லாக் காரியங்களும் நிறைவேறின. இப்போ அந்தக் கடை, வாடகைக்கு விடப்பட்டு வரும் மாத வாடகைப் பணத்திலிருந்துதான் எல்லார் வாழ்க்கையும் ஓடுகிறது. இருந்தாலும் தவமணி ஒரு நிமிடமேனும் இல்லாவிட்டால் அவர்கள் பாடும் திண்டாட்டமாகப் போய்விடும். மருந்து மாத்திரை தொட்டு, உடுக்க உடுப்பு எடுத்துக் கொடுத்து வெந்நீர் வைத்துக் கொடுத்து, உணவு பரிமாறுகிறவரைக்கும் தவமணியில்தான் எல்லோரும் தங்கியிருந்தனர்.

தவமணிக்கு இப்போ முப்பத்தொன்பது வயதாகிறது. அவளுக்கு இருபத்தைந்து நடந்தபோது தொடங்கிய சம்பந்தப் பேச்சு, இன்னும் முற்றுப்பெறாது தொடர் கதையாய்ப்போக, தவமணியைத் தவிர அனைவரும் துன்பப்பட்டனர்.

மாமாவின் சிநேகிதர் மூலமாய் அளவெட்டி, ஆவரங்கால், நெல்லியடி என்று எல்லா இடங்களிலிருந்து கடை முதலாளிகளும், உத்தியோகத்தரும் என நல்ல பொருத்தமாய்வந்த சம்பந்தங்களை எல்லாம், "விருப்பமில்லை" எனப் பல சாட்டுகளைச் சொல்லி தட்டிக் கழித்த தவமணி, இப்போ பாலசிங்கத்தை திருமணஞ்செய்யச் சம்மதித்திருக்கிறாள். மாமாவின் பார்வை விசித்திரமாயிருந்தது. அத்தைக்கு முகம் சரியில்லை. மாமி முகத்தைச் சுளித்துக் கொண்டாள். ஊரும் உறவும் தவமணிக்குப் "பைத்தியம்" என்றனர். அம்மா மட்டும் மௌனமாயிருந்தாள்.

பாலசிங்கம் தவமணிக்கு உறவு மாத்திரமல்ல, அரிவரி தொட்டு அம்பியர் பள்ளிக்கூடத்திலை ஒன்றாப் படித்தவர்கள். அதனால் தவமணி வீட்டுக்கு வந்து போகிற ஆட்களில் அவனும் ஒருத்தன். தவமணி குடும்பத்திற்கு அடுப்பெரிக்க உதவியாகத் தோட்டம் துரவுகளில் பொறுக்குகின்ற சுள்ளித் தடிகளைக் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போவான். நல்லா இனிக்க இனிக்க தவமணி கொடுக்கும் "பிளேன்ரீ" தான் பாலசிங்கத்திற்கு அன்பளிப்பு. தவமணி மறந்தாலும் கேட்டு வாங்கிக் குடிக்காமல் போகமாட்டான் அவன்.

பாலசிங்கம் குடும்பத்திற்கு அவன் ஒரு வாரிசு. நாற்பத்தைந்து வயதாகிற அவன், இன்னும் அம்மாவின் செல்லம். பள்ளிக்கூடம் போகிற வரைக்கும் தாய்ப் பால் குடித்தவன். பன்னிரண்டுவரை கைசூப்பித் திரிந்தவன். வெகுளி என்று ஊர் சொன்னாலும், தோட்ட வேலைகளில் விண்ணன். ஊரில் அவனுக்கு பெண் குடுக்க யாரும் முன்வராததால், அவன் அம்மா பிறத்தியில்தான் சம்பந்தம் பேசினாள். வந்தவர்கள் எல்லோரும் பாலசிங்கத்தைப் பார்த்துவிட்டு, "வேண்டாம்" என்று போய்விட்டனர். அதனால் களைத்துப் போனவள் அவனுக்குச் சம்பந்தம் பேசுவதையே நிறுத்திக் கொண்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. மாமா வாசிகசாலை வரை காலற நடக்கப் போய் விட்டார். அத்தையும், மாமியும் கோயிலுக்கு மாலைப் பூசை பார்க்கப் போய் விட்டனர். அம்மா பக்கத்து வீட்டில் நல்லம்மா ஆச்சியுடன் கதை. தவமணி வீட்டில் தனியாயிருந்தாள். பாலசிங்கம் விறகுக் கட்டோடு வந்தான். திண்ணையில் இருந்த பாலசிங்கத்திடம் தேநீரை நீட்டினாள். சூடான மூக்குப் பேணியைத் துவாயால் சுற்றி வேண்டிக் கொண்டான். பாலசிங்கம் ஒண்டு கேட்டால் கோவிப்பியே. ஏன் இன்னும் நீ கலியாணம் செய்யோமல் இருக்கிறாய்? தவமணி கேட்டாள்.

"அம்மா தனிச்சுப் போவா. அவா பாவம்" பாலசிங்கத்தின் கவனம் தேநீரிலிருந்தது.

"ஏன் வாறவா பார்ப்பா தானே?" இது தவமணி

"தற்செயலா, வாறவா தங்கடை வீட்டை இருப்பம் எண்டு கேட்டா, போகத்தானே வேணும். ஒரு பொம்பிளையைக் கட்டிக் கொண்டந்திட்டால் வடிவாப் பாக்கவேணும். அவையைக் கரைச்சல் படுத்தப்பிடாது. பிறகு எல்லாம் பிரச்சினை"

"அப்ப. நீ இருக்கிறாய்! ஏன் கட்டேல்லை?" பாலசிங்கம் இன்னும் தேநீரை ஊதிக்கொண்டிருந்தான்.

"நானும் உன்னைப்போல தான். இவையளை விட்டிட்டுப் போமாட்டன்" என்று சொன்ன தவமணியின் கைகள் அரிக்கன் லாம்பைத் துடைத்துக் கொண்டிருந்தன.

"சொன்னால் நீ கோவிக்கப்பிடாது. தவமணி ஓமெண்டால், நீ கட்டுவியோ தம்பி எண்டு ஏதோ கதையிலை அம்மா என்னைக் கேட்டவா" தலையைக் குனிந்தபடி பாலசிங்கம் சொல்லி நிமிர்ந்த போது அங்கே தவமணியைக் காணவில்லை. அவள் அம்மாதான் நின்றுகொண்டிருந்தாள்.

தவமணிக்கும் பாலசிங்கத்திற்கும் கலியாணம் நடந்தது. இப்போது தவமணி பொறுப்பில் இன்னும் இரண்டு ஜீவன்கள் சேர்ந்திருக்கின்றன. இரண்டு குடும்பத்திற்கானது தவமணியின் தியாகம் என்பது, தவமணியின் அம்மா மட்டும் அறிந்த விடயம்.

**சுய நலமற்ற தியாகம் அதி உன்னதமானது. அது ஆன்மிகத்தை நோக்கி நகர்வது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவின் டயரி



நான் பல்கலைக் கழகத்தில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்த போது பகிடிவதை என்கின்ற ஒரு விடயம் தான் முதன்முதலாக என்னை மிரட்டியது. நாங்கள் முதலாம் வருடத்தில் இருக்கும் போது மதியத்திற்குப் பின் சிரேஷ்ட மாணவர்கள் அமர்ந்திருக்கும் கல்லாசனத்தைக் கடந்து செல்வது என்பதே பெரும் சிரமமான ஒரு விடயமாக இருந்தது அங்கு அமர்ந்திருக்கும் ஆண்களின் வார்த்தைப் பிரயோகங்கள் கூனிக்குறுகச் செய்யும்.

தனியாகச் செல்லப் பயந்து நண்பர்களுடனேயே சுற்றியலைந்த காலமும் உண்டு. காலங்கள் கடந்து நாங்கள் சிரேஷ்ட மாணவர்களானோம். மாற்றம் என்று பெரிதாக எதுவும் இல்லை. அதே கல்லாசனத்தில் மூன்று வருடங்களுக்கு முன்பு அடிவாங்கிய மதிப்பிற்குரிய சகோதரர்கள், தூசண வார்த்தைகளால் முதலாம் வருட மாணவர்களைத் திட்டிக் கொண்டிருந்தனர். நம்முடைய அற்ப சந்தோசங்களுக்காகப் பிறர் மனதைப் புண்படுத்தி, நம்முடைய நிலையைத் தாழ்த்தித்தான் நமக்கான மரியாதையைப் பெற்றுக் கொள்ளவேண்டுமெனில் அப்படிப்பட்ட ஒரு மரியாதை அவசியந்தானா?

வாழ்க்கை ஒரு கனவாக இருந்திருந்தால், தினமும் புதிதாக விழித்திருப்பேன். ஆனால் அதுவோ நிஜங்களையும், நினைவுகளையும் வாரியிறைக்கும் சகதியாக அமைந்ததால், பல இடங்களில் முழித்துக்கொண்டு நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுவிடுகின்றது. உலகில், மிக்க கொடுமையான விடயங்களில், ஒன்று அதிகாரம். மனிதன், அனைத்தின் மீதும் அதிகாரம் செலுத்துவதே குற்றங்களுக்கான முதற் காரணமாக அமைகின்றது. இந்தப் பல்கலைக் கழக வாழ்க்கையில் தினம்தோறும் பார்த்துச் சலித்துப்போன அதிகாரங்கள் பல.

சனி, ஞாயிறு இரண்டு தினங்கள்தான் வீட்டிலே ஓய்வெடுத்துக் கொண்டு மனத்தைக் கொஞ்சம் தனிமையில் சுகிக்க வைக்க முடிகின்றது. ஆனால் அதையும் உடைத்தெறியும் சம்பவங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. நள்ளிரவு வேலையொன்றில் அடுத்தடுத்து என் தொலைபேசிக்கு சில பெண்களிடம் இருந்து குறுந்தகவல்கள் வந்திருந்தன. யாரென்று வினவிய போது அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பதிலை பயந்து கொண்டே கூறினார்கள்.

"தாங்கள் பல்கலைக்கழகத்தின் புதுமுக மாணவர்கள் எனவும், தங்களை இறுதிவருட மாணவர்கள் சிலர் அனைத்து சிரேஷ்ட மாணவர்களுக்கும் குறுந்தகவல், அழைப்பெடுக்கும் படி பணித்திருந்தனர் எனவும்" கூறினார்கள். எனக்கு தெரிந்து, இப்படி ஒரு நடைமுறை பல்கலைக்கழகத்தில் இல்லை.

அவர்கள் கதைத்த தொனியிலேயே புரிந்தது, அவர்களை யாரோ மிரட்டியுள்ளார்கள் என்று, அதிகாரத்தின் மூலமான வழிநடத்தல் எத்தனை ஆரோக்கியமானது? பகிடிவதை என்பது பகிடியாக அல்லாமல் அதிகாரத்தைத் திணிக்கும் செயன்முறையாக இடம்பெறுவது வருந்தத்தக்கதே.

நான் முதலாம் வருடத்தில் படிக்கின்ற போது, இறுதி வருடத்தில் ஒரு சகோதரி இருந்தார். அவரைக் கண்டு மொத்த மாணவர்களுமே பயந்தனர். நானும் அவரைக் காண்பதற்கு ஆவலாக இருந்தேன். ஒரு நாள் அவரைக் கண்டேன். மிகவும் துணிவாக நடையுடன் நேர்படக் கதைத்து, சமூகம்பற்றி சிந்திக்கின்ற அவரிடமிருந்து நான் அதிகாரத்தைத் தவிர்த்து, துணிவை எடுத்துக் கொண்டேன். பல்கலைக்கழகத்தில் அப்படியான பெண்களைக் காண்பது மிகவும் அரிது என்பதைப் பின்புதான் புரிந்துகொண்டேன். அவர் தன்னுடைய அதிகாரத்தை தன்னுடைய சுதந்திரத்தைப் பிரயோகித்துப் பெற்றிருந்தார். "என்னுடைய சுதந்திரம் என்பது அடுத்தவரின் மூக்கு நுனி வரை" என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டதால், அதிகாரம் என்கின்ற விடயத்தை கையிலெடுக்கவில்லை.

ஆண்களுக்குச் சமாந்தரமாகப் பெண்களும், மன ரீதியாக பகிடிவதை என்கின்ற விடயத்தைக் கையிலெடுத்துள்ளனர். பெண்கள் நாம், விவாதிப்பதற்கும், எதிர்த்துப் போரிடுவதற்கும் பல விடயங்கள் இருக்கின்றன. நாம் அதிகாரத்தை எதிர்த்துக் காலகாலமாகப் போரிட்டுக் கொண்டிருப்பவர்கள். அதே அதிகாரத்தை நம் சார்ந்த ஒருத்தி மீது திணிப்பது என்பது வரலாற்றின் முரண்பாடே ஆகும்.

வரலாற்றில், நாம் வெறும் ஊமைக் கனவாகிப் போய்விடக் கூடாது. அதிகாரம் என்பதை, வழிநடத்துவதற்காக எடுத்துக்கொள்ளலாமே அன்றி வாழ்க்கையாக எடுத்துக் கொண்டால் அதே அம்பு எம்மே நோக்கித் தாக்கும் என்பதே உண்மை.

நாம் கற்றதனால் ஆன பயன் என்பது நாம் வாழும் வாழ்க்கை முறையிலேயே உள்ளது.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# அரச நிழல்



புத்தர் இருந்த அறை பத்திரமாக...
விடோ மண்மேடாக..

அதேபோன்று, மக்களின் தொடர் போராட்டத்தையடுத்து விடுவிக்கப் பட்ட முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் வாழ்விடங்களும் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குரிய சொந்தக்காணிகள் கிடைத்தும், அகதிகள் போல இன்றும் தறப்பாள்கள் மூலமே கொட்டில்களை அமைத்துக் குடியிருக்கின்றனர்.

அப்படியென்றால் தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடித்து அவர்களை நிர்க்கதியாக்கி விட்டு, மீளவும் அவர்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பிச் செல்லும் போது, அவர்களின் வாழ்விடங்களை அழித்து, ஏற்கனவே நொந்து நூலாகிப்போன தமிழ் மக்கள் தொடர்ந்தும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதையே அரசும், இராணுவமும் விரும்பியுள்ளனவா? தமிழரைக் கொல்வது மட்டும் போர்க்குற்றம் இல்லை. மாறாக அவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதும் போர்க்குற்றமே.

ஏற்கனவே படையினர் புரிந்த போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்த அரசாங்கம் மறுத்துவரும் நிலையில், தமிழரின் பொருளாதார இருப்பையும், வாழிடங்களையும் அழித்த விடயம் தொடர்பிலும் அரசாங்கம் விசாரணையை நடத்துமா? என்பது கேள்விக்குறிதான். "ஒருபோதும் படையினரை காட்டிக் கொடுக்கும் எந்தவொரு விசாரணைக்கும் அனுமதியில்லை" என யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரி சபதம் செய்துவிட்டுப் போயிருக்கிறார்.

சலாவ ஆயுதக்கிடங்கு வெடித்தவுடன் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு உடனடி உதவி வழங்கபட்டிருந்தது. அவர்களுக்கு தற்காலிக வதிவிடங்களை அமைத்து, லட்சக் கணக்கில் நிவாரணம் வழங்கிய அரசு, அதற்கு மேலதிகமாக பல கோடி ரூபா செலவில் அந்த மக்களுக்கான நவீன வசதிகள் கொண்ட வீடுகளையும் துரிதகதியில் அமைத்து வருகிறது. ஆனால் 30 வருடங்களுக்கும் மேலாகப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதுவித உதவியும் இல்லை. நீதியும் மறுக்கப்படுகிறது. இதுதான் இலங்கையின் நல்லாட்சியின் அரசாட்சி. இதில் வார்த்தைக்கு வார்த்தை அரசின் நல்லிணக்க சொற்பதங்கள்வேறு.

இந்த நிலையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் மக்களுக்கு பல்வேறு வகையிலான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதற்கும் கூட அவர்கள் நினைத்த மாதிரி தமது வீடுகளை அமைக்கமுடியாது. குறிப்பாக எட்டு இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டம் வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் கைகளுக்கு முழுமையாக போய்ச்சேருவது 7,60000 ரூபா மட்டுமே! மிகுதி 40 ஆயிரம் ரூபா மக்களுக்கு துண்டுவிழும் தொகைதான். அதேவேளை வீட்டுத் திட்டத்துக்கென வழங்கப்படும் நிதிகூட அத்திபாரம் கட்டவும், இன்னும் சில பொருட்களை வாங்க மட்டுமே போதுமானதாக இருக்கிறது. மேலதிகமாக இன்னும் சில லட்சங்களை கடன் வாங்கித்தான் ஒருமாதிரி வீட்டுத்திட்டத்தை மக்கள் ஒப்பேற்ற முடிகின்றது.

போர்முடிவடைந்த நிலையிலும், தமிழ் மக்களுக்கு கிள்ளித் தெளிக்கும் கைகங்கரியத்தையே அரசும்,தொண்டு நிறுவனங்களும் செய்து வருகின்றன. எனவே தமிழ் மக்களும் இந்த நாட்டு பிரஜைகள் என்ற நிலை ஏற்படும் போதே அவர்களுக்குள் நல்லிணக்க எண்ணங்கள் உற்பத்தியாகும். ஆனால் நல்லாட்சி, நல்லிணக்கம் என்ற போர்வையில் இந்த அரசின் நிழலில் படைத்தரப்பே சுகம் காண்கின்றது. படைத்தரப்பை பாதுகாப்பதில் காட்டும் அக்கறையில் ஒரு துளியைத்தானும் அரசு, மக்களின் மீது காட்டுவதில்லை. அரச மரங்களின் நிழல் புத்தருக்கும், யுத்தத்துக்கும், யுத்த வீரர்களுக்கும் மட்டுமே இதமளிக்கிறது. பாவம் மக்கள், அவர்கள் எப்போதுமே துயரத்தின் வெம்மையில் வாட வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழிப்பனையும் சுவடிகளும்





எம் முன்னோர்களால் ஓலைச்சுவடி பயன்பாட்டில் நீண்ட காலம் காணப்பட்டது. அரிய வகை தகவல்களை சித்தர்கள், தவஞானிகள் எனப்பலரும் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்துள்ளார்கள்.

இன்றும் எம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத பல தகவல்களை தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்தில் எப்படி கண்டுபிடிக்க முடிந்தது என்று வியப்பாக உள்ளது. அவர்கள் அறிந்து வைத்திருந்ததை ஓலைச்சுவடி மூலம் எங்களுக்கு தந்துள்ளார்கள்.

ஓலைச்சுவடி எழுதப் பயன்படும், வாழ்நாளில் ஒரே முறை பூக்கும், 100 அடி உயரமுள்ள அரிய வகை கூந்த பனை மரம், ஓலைச்சுவடி எழுதப் பயன்படும். பண்டைய காலத்தில் எழுதுவதற்கு தேவையான ஓலைச் சுவடிகள் தாழிப் பனை மரங்களில் இருந்து பெறப்பட்டன.

இந்தத் தாழிப்பனை மரங்களில் ஒன்று செம்பரம்பாக்கம் அருகே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மரத்தில் இதுவரை இல்லாத வகையில் உலகத்திலேயே மிகப் பெரிய பூங்கொத்து பூத்துள்ளதும். அரிய வகையான தாழிப்பனை குறித்து, வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும் வகையில் அதை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வன ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பனை குடும்பத்தில் மொத்தம் 21 வகையான மரங்கள் உள்ளன. இவற்றில், மிகவும் அரிதான மரம் தாழிப் பனை (கோரிபா அம்ப்ராக்ரி பெரா). சாதாரண பனை மரத்தைப் போல் இல்லாமல் இந்த மரத்தின் மட்டை நீளமாக இருக்கும்.

சங்க காலத்தில் தென்னிந்தியாவில் தாழிப்பனை மரம் பரவலாகக் காணப்பட்டது.

குறிப்பாக, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இந்த மரத்தை காண முடிந்தது. சாதாரண பனை மரம் வருடத்திற்கு ஒரு முறை காய் காய்க்கும். ஆனால், அரிய வகையான தாழிப்பனை வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே காய்க்கும் என்பது குறிப்பிடத்தக்கது. பண்டைய காலத்தில் சுவடிகள் எழுத இந்த மரத்தில் இருந்து பெறப்படும் ஓலைகளைத்தான் பயன்படுத்தினர்.

இம்மரத்தின் ஓலைகளை பக்குவப் படுத்தி, சுவடிகள் எழுதப்பட்டன.

தாழிப்பனை மரம் நன்கு வளர்ந்து 65 முதல் 70 ஆண்டுகளில் பூ பூக்கும். ஒரு முறை பூத்தபின், அந்த மரம் காய்ந்து விடும்.

பண்டைய காலத்தில் இம்மரத்தில் பூக்கிறது என்பது தெரிந்தவுடன், பூவின் காம்பை வெட்டி அதிலிருந்து கள் இறக்குவர். காரணம், வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே பூப்பதால், அனைத்து சத்துகளும் கள்ளில் கிடைக்கிறது.

மருத்துவ குணம் கொண்ட இந்த கள்ளை குடித்தால் தீராத நோய்கள் தீரும். காலப்போக்கில் தாழிப்பனை இனம் மெல்ல மெல்ல அழியத் தொடங்கியது. தற்போது, தென்னிந்தியாவில் ஒரு சில இடங்களில் மட்டுமே இம் மரம் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் தாழிப்பனை இல்லை.

யாழ்ப்பாணத்திலும் பல ஓலைச்சுவடி பாவனையில் இருந்தது. அது சாதாரணமாக இன்றும் காணப்படும் பனை மரங்களில் இருந்து தயாரிக்கப்பட்டது.



# தூண்டாமணி விளக்கு

காணக்கிடைக்காத அரிய விளக்குகளில் தூண்டாமணி விளக்கும் ஒன்று. நெய் ஏந்தும் பகுதியானது மூன்று பிரிவுகளாக பிரித்து உருவாக்கப்பட்டுள்ளது.

கொள்ளளவு ஒரு லீற்றருக்கும் அதிகமாகும். தமிழர் பயன்படுத்திய தொன்மையான விளக்குகளில் இதுவும் ஒன்று. இதை விட பல்வேறு விளக்குகள் காலத்திற்கு காலம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவையாவன கைவிளக்கு, கஜலட்சுமி விளக்கு, சங்குவிளக்கு, மாக்கல்விளக்கு, கல் விளக்கு, சுடுமண் விளக்கு, நாகவிளக்கு போன்றன காணப்படுகின்றன.

# சம்பல்



தமிழர்களின் உப உணவுப் பாரம்பரியத்தில் சம்பல் முக்கியமானது. பொதுவாக தேங்காய்ப்பூ, மிளகாய், வெங்காயம், உப்பு, புளி என்பவை சேர்த்து அம்மியில் அரைத்து அல்லது உரலில் இடித்து சம்பல் தயாரிக்கப்படுகின்றது.

சம்பலுக்கு பச்சை, செத்தல் என இரு வகை மிளகாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேங்காய் தவிர மாசிக் கருவாடு, கத்தரிக்காய், வாழைக்காய், மாங்காய், வல்லாரை, கீரை, கறிவேப்பிலை, வெங்காயம் என்பனவற்றை பிரதானமாகக் கொண்டும் மிளகாய் சேர்க்கப்பட்டு சம்பல் அரைப்பது அல்லது இடிப்பது வழமை.

ரொட்டி, தோசை, புட்டு, சோறு, இடியப்பம் என்பவற்றுடன் சம்பலை சேர்த்து உண்பர். தோசை, இடியப்பத்துக்கு இடித்த சம்பலும் ரொட்டி, புட்டுக்கு அரைத்த சம்பலும் விசேடமாகப் பயன்படுத்தப்படும்.

நவீனத்தின் வளர்ச்சியால் இன்று கிரைண்டரிலேயே சம்பல் பெரிதும் அரைக்கப் படுகின்றது.

அரைத்த தேங்காய் சம்பலுடன் சிறிது அதிகமாக நீர் சேர்த்து வதக்கிய வெங்காயம், கடுகு, கறிவேப்பிலை, சீரகம் என்பவற்றை சேர்த்து அடுப்பில் சிறிது நேரம் வைத்துக் கிளறி சட்னி தயாரிக்கப்படும். இட்லிக்கான விசேட உப உணவாக இது கொள்ளப்படும்.

# மாட்டுத் தொழுவம்

மாட்டுத் தொழுவமானது கால்நடைகளை, விசேஷடமாக மாடுகளை மழை வெயில் போன்ற கால நிலைகளிருந்து பாதுகாப்பதற்காகவும், அவற்றிற்கான உணவுகளை வீணாக்காமல் பாவிப்பதற்குமாக எமது முன்னோர்களால் வடிவமைக்கப்பட்ட குடிலாகும். பனை ஓலையால் வேயப்பட்டு பனம் மட்டைகளால் அடித்தட்டு வடிவமைக்கப்பட்டும் உள்ளது. தற்போதைய சந்ததியினரில் பலருக்கு இது தெரியாமலும் உள்ளது. நவீன காலத்திற்கேற்ப சீற், தகரக் கொட்டகைகள் போடப்பட்டாலும், கால்நடைகளுக்கு சுவாத்தியமான இக்குடில்களே சிறந்ததாக உள்ளது.

ஏன் எமக்குக் கூட இவ்வாறான இயற்கைப் பொருள் பாவனையே சிறப்பான வாழ்விற்கு இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமதி




# அடுத்த துணைவேந்தர் யார்?

## இனியும் சீரழிவுகள் தொடரக்கூடாது...

**நோக்கன்**

போருக்குப் பின்னால் ஆரோக்கியமான சமுதாயத்தின் அவசியம் பல வழிகளிலும் உணரப்பட்டிருக்கிறது. போர் முற்றுப் பெற்றதென்று சொன்னபோது பேரினவாதிகள் பிறர் அறியாத பனிப்போர் ஒன்றை ஆரம்பித்திருருந்தனர். அத்து டன் தமிழ்ச் சமூகம் தன்னை பற்றிச் சிந்திக்கக் கூடாதென்பதிலும் அவர்கள் அக்கறையாயிருந்தனர். போரிலிருந்து மீண்ட சமூகமொன்றை அகமும், புறமும் சரியான பாதையில் வழிநடத்தத்தக்கதாக முறையான திட்டங்களோ, நடைமுறையோ அங்கிருக்கவில்லை. இருந்த தமிழ்த் தலைமைகளும், பொறுப்புள்ள அதிகாரிகளும் தமது இருக்கைகளின் ஆயுள் பற்றிக் கவலைப்பட்டனரேயொழிய, சமூகத்தின் இருப்பைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அவர்கள் சமூக இருப்பை உறுதியாக்க வேண்டிய பொறுப்பிலிருந்து தவறியவர்களாகவே இருந்தனர். இன்றும் அப்படியே கருதப்படுகின்றனர்.

இன்று இயல்பு வாழ்வு திரும்பி விட்டதாகச் சொல்லப்படுகின்ற போதும் வடக்கு மாகாணத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு கொலை, கொள்ளை, கடத்தல், வழிப்பறி என்று சமூக விரோதச் செயல்கள் அதிகரித்திருக்கின்றன. இதை ஒரு தனி மனிதனுடைய அல்லது குழு சார்ந்த நடவடிக்கையாகப் பார்ப்பதை விட, ஒரு சமூகத்தின் பலவீனமான பக்கங்களிலிருந்து எழுகின்ற பிரச்சினையாகவே பார்க்கப்பட வேண்டும். அத்தகைய பலவீனங்கள் சமூகத்தைப் பலவழிகளிலும் பாதிப்படையச் செய்திருக்கின்றது. சமூகம் ஆரோக்கியமாக இல்லை. ஈனர்கள் கை ஓங்கியிருப்பதால் மக்கள் இன்னல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆதலால், ஆரோக்கியமான சமூகத்தை நல்வழிப்படுத்தக் கூடிய நல்ல வழிகாட்டிகள் உருவாக்கப்படவேண்டிய அவசரமும், அவசியமும் தற்போது ஏற்பட்டிருக்கிறது. இதனை அரசியல் தலைமைகள் ஒரு போதும் செய்யப்போவதில்லை. அவர்களுக்கு இதில் அக்கறையும் இல்லை.

மக்கள் மந்தைகளாக இருக்கும் வரைக்கும் "அவர்கள் காட்டில் மழை அதிகமாகப் பெய்யும்" என்பது அவர்களுக்கும் நன்றாகத் தெரிந்த விடயம். எனவே, சமூக ஆரோக்கிய மேம்பாடென்பது அரசியல் பின்புலமற்ற பொதுமக்களாலும், பொது நிறுவனங்களாலுமே சாத்தியப்படலாம்.

சமுதாயத்திற்கான நற்பிரஜைகளை உருவாக்கக் கூடிய நாற்றுமேடைகளாக இருக்கின்ற பல்கலைக் கழகம் இத்தகைய பணிகளை முன்னெடுக்கலாம். ஆனால் எமது சமூகத்திற்காக ஒன்றேயொன்றென இருக்கின்ற கல்வி நிறுவனமான யாழ். பல்கலைக் கழகமும் சில தனிமனித அபிலாஷைகளுக்கு உட்பட்டதாகவும், அதனுள் கீழ்த்தரமான அரசியல் உட்புகுந்து கிடப்பதாலும் அதை ஒரு சமூகம் சார்ந்த பல்கலைக் கழகமாக இயங்கவிடாத நிலை நீடிக்கிறது. ஒரு குறுகிய வட்டச் செயற்பாட்டுக்குள்ளேயே அதன் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதை யாவரும் அறிவர்.

போர் முடிவடைந்த தருணத்தில் ராஜபக்ஷ அரசு சகல துறைகளிலும் பலத்த மாறுதல்களைக் கொண்டு வந்தது. அதில் குறிப்பாகத் தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைப்படுத்திய மாற்றங்களும், அபிவிருத்திகளும் அவர்களது நேரடிக் கண்காணிப்பிலேயே நடைபெற்றன. தொலை தூரநோக்கில் ஒரு இனத்தை நசுக்கக் கூடிய வகையில், ஒரு புலமைசார் கட்டமைப்பை உருவாக்கினர். அதற்குரிய கோடரிக் காம்புகளையும் எமது மத்தியிலேயே தேர்ந்தெடுத்தனர். தாம் எந்தவிதத்திலும் ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருந்தனர். தங்கள் விசுவாசிகளை வைத்தே சகல துறைகளிலும் காய்களை நகர்த்தினர். அதில் பல்கலைக் கழகத்தின் நடவடிக்கைகளும் அவர்கள் ஆட்சிக்குட்பட்டுக் கொண்டது. பல்கலைக் கழகக் கல்விக்குப் பொருத்தமானவர்களையும், அதனூடாகச் சமூகப் பொறுப்பைப் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களையும் நியமிப்பதற்குப் பதிலாக, தமக்குச் சார்பானவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அதன் படியே யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி வெற்றிடமும் அரசியல் பலம் கொண்டு நியமிக்கப்பட்டது.



அப்படித் தேர்ந்தெடுப்பது தவறில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால், அவர்கள் அந்தப் பதவிக்குப் பொருத்தமானவராக இருப்பதென்பது எவ்வளவு முக்கியம் என்று அவர்கள் உணராததேன்? பதவி ஆசை என்பது இயல்பான விடயம். மறுப்பதற்கில்லை. அதற்காகச் சமூக நலன்களைப் பகடைக்காய்களாக வைத்துச் சுயலாபத்தை அனுபவிப்பதுதான் கொடுமை. இவர்கள் பல்கலைக் கழகப் படிப்பை நம்பி வரும் மாணவர்களின் வாழ்க்கையோடு அல்லவா விளையாடுகிறார்கள்?

"தனிமனித விருப்பு வெறுப்புகளும், அவரது ஆளுமைகளும் எங்ஙனம் ஒரு கல்வி நிறுவனத்தை நேரடியாகவும், சமூகத்தை மறைமுகமாகவும் பாதிக்கின்றது" என்பதற்கு யாழ். பல்கலைக் கழகத்தை உதாரணமாகக் கொள்ளலாம்.

தொடர்ந்தும் இத்தகைய சீரழிவு நடவடிக்கைகள் நடைபெறாது யாழ். பல்கலைக் கழகத்தைக் காப்பாற்றவதற்குத் தற்போது வலுவான சந்தர்ப்பம் ஒன்று கிட்டவுள்ளது. அதாவது அண்மையில் துணைவேந்தர் பதவிக்கான நியமனங்கள் நடைபெற்று ஜனதிபதியின் சிபார்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நல்ல ஒரு கல்வி நிறுவனமாக யாழ். பல்கலைக் கழகத்தை மாற்றக் கூடிய முறையில் ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பமாக இதை நாம் பயன்படுத்த வேண்டும்.

"தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குதல்" என்ற அடிப்படையில் சுயலாபத்தை முன்னிறுத்தாத ஒரு துணைவேந்தர் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அவசியம். அவர் எந்த அரசியல் பின்னணியும் இல்லாதவராகவும், சகல பீடங்களுக்கும் உரிய விரிவுரையாளர்களையும், பேராசிரியர்களையும் திறமை அடிப்படையில் தெரிவு செய்வதில் அக்கறை உள்ளவராகவும், அதற்கு சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளாதவராகவும் இருப்பது அவசியம்.

இனி வருங்காலத்தில் பல்கலைக் கழகத்தை சமூக மயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றுபவராகவும், சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பை உறுதிப்படுத்துபவராகவும் இருத்தல் வேண்டும். அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கு, வளாகத்துக்கு வெளியே பொது வெளி ஒன்றைத் திறப்பதற்குரிய ஆர்வமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். மொத்தத்தில் அவர் மாணவர்களின் நலன்களை மட்டும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

எதிர்வரும் சித்திரை மாதத்தில் யாழ். பல்கலைக் கழகத்தில் ஏற்படப்போகும் துணைவேந்தருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக மூன்று பேர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு, அது தற்பொழுது பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினூடாக, ஜனாதிபதியின் தேர்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதிலும் தமக்குச் சார்பானவரைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதில் பலரும் பலவழிகளில் அரசுக்கு அழுத்தங் கொடுப்பதாகத் தெரிகிறது. இத்தகைய அழுத்தங்கள் கட்சி ரீதியாகவும், உறவு மற்றும் ஊர் என்றவகையிலும் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கசிகின்றன. அதைவிட தற்போதுள்ள துணைவேந்தரும் தனது காலத்தில் நடைபெற்ற விடயங்களைக் கண்டும் காணாதது போல கடந்து செல்லக்கூடிய ஒருவரையே நியமிக்க வேண்டும் என்ற முனைப்பில் காய்களை நகர்த்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இனி நியமிக்கப்படும் துணைவேந்தர் நியமனத்திலும் அரசியல் இருக்குமானால், அப்படி வருபவரும் தன்னை நியமிக்கப் பாடுபட்டவருக்கு விசுவாசமாகவும், கூழைக் கும்பிடு போடுபவராகவும் இருப்பார். பல்கலைக் கழக நிர்வாகத்தில் சுத்தம் இருக்காது. பழையபடி நியமனங்களில் தமக்குப் பிடித்தவர் இருப்பர். படித்தவர் இருக்கமாட்டார். பல ஆண்டுகளாகப் பழி வாங்கலும், படித்தவர்கள் விரட்டி அடிக்கப் பட்டதும் வரலாறு. யாழ். பல்கலைக் கழகத்தினால் பழிவாங்கப் பட்டவர்கள் பலர் வெளி நாடுகளிலுள்ள முதல் தரமான கல்வி நிறுவனங்களில் மிகவும் மரியாதையடன் பணியாற்றி வருகின்றனர்.

பல்கலைக் கழகத்தில் இருந்த உள்ளக அரசியலால் பல புலமைசார் ஆளுமைகளை இழந்திருக்கிறோம். நாம் அவர்களை மட்டும் இழக்கவில்லை. அவர்கள் மூலமாகக் கிடைக்கக் கூடிய, தரமான கல்வியையும் இழந்திருக்கிறோம். அவர்களால் உருவாக்கப் படவிருந்த நல்ல சமூகத் தலைமைகளையும் இழந்திருக்கிறோம். அரசியலால் சீரழிந்து கொண்டிருக்கின்ற தமிழினம், இனி கல்வி நிறுவனங்களாலும் சீரழிய வேண்டுமென்பதுதான் தமிழரின் தலைவிதியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து மடப்பண்பாடும் தெருமூடி மடமும் 04



யதார்த்தன்

கூரையமைப்பினைப் பொறுத்த வரையில் தூண்களின் கபோதத்திலிருந்து, இருபக்கங்களிலும் சமாந்தரமாக மேலெ ழுப்பப்பட்டுள்ள ஓர் அரைச்சுவரின் மீது அமைக்கப்பட்ட விட்டத்துடன் கூடிய ஒரு சட்டகக் கோப்பினால் தாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம் முறையினால் இத்தெருமூடி மடத்துள்ளான வாகனப் போக்குவரத்து நடை முறைகளுக்கு சாதகமான சூழல் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தூரப் பார்வைக்குப் பொலிவான அழகியலையும் தோற்றப் பொலிவையும் அவ்வமைப்பு வழங்குகின்றது.

இத்தெருமூடி மடத்தின் இருபக்க மண்டபங்களினதும் மேற்கூரையானது தட்டையானதாக அமைக்கப்பட்டுள்ளது. நீள் சதுரக்கூரையமைப்பின் தட்டையான பரப்பை உருவாக்குவதற்கும், நீளமான வெண்சுண்ணக் கற்பலகைகள் பயன்படுத் தப்பட்டுள்ளன. அக்கற்பலகைகளுக்கு மேல், சுண்ணச்சாந்து இடப்பட்டு, நீர் கசியாதவாறு வெகுகச்சிதமாக அக் கூரை யமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உயர்ந் துள்ள பிரதான நடுக்கூரையின் இரு பக்கங் களிலும் காணப்படும் இத் தட்டையான இரு கூரைத்தட்டுகளின் கூரை முகப்புக் கள், இருமுனைகளிலும் வெளியே தெரியாதவாறு பக்கவாட்டாக அவற்றின் முகப்பில் எழுப்பப்பட்ட கபோதத்தின் மீதான குறுக்கு அரைச்சுவர்களினால் மறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாகக் கட்டப்பட்ட காலத் தில் நின்று இதன் கட்டடக்கலை மரபினை ஆயும் போது, யாழ்ப்பாணத்துக்கே உரிய திருப்பணிக்கல் கட்டடக்கலை மரபும், கிறிஸ்தவ கட்டடக்கலை மரபும், தூண்க ளில் பல்லவக் கட்டிடக்கலை மரபும் ஒன்றிணைந்த வகையில் மீளுருவாக்கம் பெற்றதாகவே இத்தெருமூடி மடத்தினைக் கொள்ளமுடியும்.

### தெருமூடி மடத்தின் தற்போதைய நிலையும் அச்சுறுத்தல்களும்

ஒட்டுமொத்த இலங்கையிலும் இருக்கும் ஒரேயொரு நிரந்தரமான தெரு மூடிமடம் இதுமட்டுமே. தற்பொழுது இத் தெருமூடிமடம் தொல்லியல் திணைக்களத்தினால் தொல்லியல் சின்ன மாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதனை பொருத்தமாக பராமரிக்கும் வேலைகளை அரசு செய்யவில்லை. அத்துடன் சுற்றுலாத் தலமாக இதனை மாற்றி பாதுகாக்கும் வழிவகைகளை அரசு செய்ய வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் இத்தெருமூடி மடம் பாதுகப்பாக இருந்தமைக்கு அதனைச் சூழ இருக்கும் மக்களும் விளையாட்டுக் கழகங்களுமே காரணமாயிருந்தன. ஆனால் அரசு பொறுப்பெடுத்த பின்னர், அதன் மீது துப்பரவு செய்தல் தடை செய்யப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. அரசியல் பதாகைகள், விளம்பரங்கள் ஒட்டப்படும் போது அது தொடர்பில் அரச இயந்திரத்தின் அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது இருக்கின்றனர். வீதி அபிவிருத்தி பணிகளின் போது வீதி உயர்ந்து அதன் திண்ணை உயரத்தை குறைத்து விட்டது. அத்துடன், மேற்சுவர்களில் அரசமரம் ஒன்று வளர்ந்து நிற்பதுடன் எதிர்காலத்தில் அது சுவர்களைப்பாதிக்க கூடிய அபாயம் உள்ளது. அது தொடர்பில் அதிகாரிகளிடம் கேட்ட போது "தாங்கள் அதனை பராமரிக்கவுள்ள தாகவும், அதில் கைவைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் கூறியுள்ளனர். எனினும் இன்று வரை அது நடந்ததாகத் தெரியவில்லை.

மேலும் தெருமூடி மடத்திற்கு அண்மையில் உள்ள துலாக்கிணறு, ஆவுரஞ்சிக்கல், தொட்டி என்பனவும் சரியான பராமரிப்பின்றியிருக்கின்றன. தொடர்சியாக ஊர் மக்களே அவற்றைப் பராமரிக்க வேண்டியுள்ளது. மேலும் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கும் பொறிமுறையினை தேசிய அரச இயந்திர மும், பிரதேச அரச இயந்திரங்களும் வினைத்திறனாகச் செய்யவேண்டும்.

ஒப்பீட்டளவில் சிங்கள, பௌத்த சின்னங்கள் பராமரிக்கப்படும் - பாதுகாக் கப்படும் பொறிமுறைகளில் ஒரு வீதம் கூட தமிழ்ச்சமூகத்தின் மரபுரிமைகள் மீது காட்டப்படுவதில்லை. வெறுமனே அரச இயந்திரம் மட்டுமல்ல, மக்களும், பல்கலைகழகங்கள் போன்ற அமைப்புக் களும் சுதேச மரபுரிமைகளை அறிந்து கொள்ளவும், பாதுகாக்கவும் தேவையான விழிப்புணர்வினையும் அறிவினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஊடகங்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் என்று சமூகத்துடன் நெருக்கமாக உரையாடக் கூடியவர்கள், இத்தகைய மரபுச்சின்னங் களைப்பற்றி எழுதவும், மக்களுடன் உரையாடவும் ஆவணப்படுத்தவும் வேண்டும். அத்துடன் எவ்வாறு நல்லூரும் நிலாவரையும் சுற்றுலாத் தலமாக பிரபலப்படுத்தப்படுகின்றனவோ அவ்வாறு தெருமூடி மடம் போன்ற ஏனைய மரபுரிமைச் சின்னங்களும் சுற்றுலாத் துறையினால் சுற்றுலாத் தலங்களாக சுற்றுலாப் பயணிகளை நோக்கி மேற்காவப்பட வேண்டும்.

இனவாதிகள் ஈழத்தமிழ் மக்களை தொடர்ச்சியாக வந்தேறு குடிகள், சொந்தமாகப் பண்பாட்டுக் கூறுகளையோ வரலாற்றையோ கொண்டிராதவர்கள், இந்தியப் பண்பாட்டினை பகிர்ந்து கொள்ளும், தமிழ்நாட்டின் தொடர்ச்சியி னைப் பேணும், ஒரு சமூகக் குழுமமெனப் பிரசாரங்களை தொடர்ச்சியாக முன் வைப்பதுடன், ஈழத்தமிழரின் நுண்மை யான தனித்துவம் மிக்க மரபுகளை அழித்தும் புறக்கணித்தும் வருகின்றனர். "மொழி, கலை, இலக்கியம், பண்பாடு" என்று யாவற்றிலும் தனித்துவமான வடிவங்களை உடையவர்கள் ஈழத் தமிழ்ச் சமூகத்தினர். உண்மையில் "இந்திய- தமிழ் நாட்டுப் பண்பாட்டினை பகிர்ந்து கொள்கின்றோம்" என்பது ஒரு மேலோட்டமான கருத்து நிலை மட்டுமே. நுண்மையான ஆய்வுகளும் சரி, வரலாற்று எழுத்தும் சரி, ஈழத்துக்கென இந்திய தமிழ்நாட்டு பண்பாட்டில் இருந்து விலகிய தன்மைகளை மிக நுண்ணியதாகவும் செறிவானதாகவும் ஆதாரத்துடன் முன்வைக்கின்றன.

கல்தோன்றி மண் தோன்ற முதல் தோன்றிய மொழி, வீர இனம், தூய இனம் போன்ற உயர்வு நவிற்சியும் உணர்ச்சிமயப்படுத்துவதையே நோக்காகக் கொண்ட வெற்றுக்கூச்சல் களும் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் இருப்பைப் பாதுகாக்கப் போவதில்லை. மரபுகளையும் பண்பாட்டு வரலாற்று இருப்பையும் இடைவெளிகளையும் அறியவும் அறிவார்ந்த தளத்தில் கட்டுதலும் ஆவணப்படுத்தலுமே வேண்டப்படும் ஒன்றாகும்.

ஈழம் பண்பாடு, அடையாளம், மரபுரிமை, கலை இலக்கியம் என யாவற்றிலும் தனித்துவமான தன்மை கொண்டது என்பதற்கு ஈழத்தின் மடக்கலையே ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. ஈழத்தின் மடக்கலை எப்படி இந்தியாவில் இருந்தும், தமிழ்நாட்டில் இருந்தும், ஐரோப்பாவில் இருந்தும் தாக்கங்களை பெற்றாலும் தனக்கென ஒரு பிரத்தியேக வடிவம், அர்த்தம் இரண்டையும் வரலாற்று பெரும் நீரோட்டத்தில் கண்டடைந்துள்ளது என்பதற்கு தெருமூடிமடமும் அதன் சூழவமைவும் கனமான ஆதாரங்களை முன்வைக்கின்றன.

நாம் வரலாற்று எழுத்தில் மரபுரிமைகளை உறுதிப்படுத்தாமை காரணமாகத் தொடர்ச்சியாக விளிம்புக்கு தள்ளப்பட்டுக்கொண்டேயிருக்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து வரும் சமூக வலைத்தள, ஊடக, சினிமா, மொழி உணர்வுநிலை போலியான கோசங்கள் மற்றும் அறிவு நிலைகாரணமாக தமிழ் நாட்டின் பண்பாட்டு நீரோட்டத்தாலும், இலங்கையின் இனவாத நீரோட்டத்தாலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுகின்றோம். இதனை எதிர்கொண்டு அறிவார்ந்த சிந்தனை மற்றும் செயற்பாட்டு உருவாக் கத்தளத்தில் வரலாற்று வாசிப்பு, மரபு பற்றிய அறிதலுடன், நம்முடைய சமூகத்தை இருப்பின் மையத்தை நோக்கி நகர்த்த வேண்டும்.

### உசாத்துணைகள்:

1. கிருஷ்ணராஜா, செ. தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மை யும். பிறைநிலாவெளியீட்டகம்.

2. குமுதா சோமசுந்தரக்குருக்கள். யாழ்ப்பாணத்துப்பண்பாட்டில் மடமும் மடக்கலையும், குமரன் புத்தக இல்லம்.

3. இந்திரபாலா கார்த்திகேசு. யாழ்ப்பா ணத்தில் தொல்பொருளாராய்ச்சி, இள வேனில் (2ஆம் ஆண்டு மலர் ) 1970.

4. கிருஷ்ணராஜா, செ. இலங்கை வரலாறு பாகம் 1, பாகம் 2

5. இந்திரபாலா.கா, இலங்கையில் தமிழர், ஒரு இனக்குழுமம் ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம்.

6. புஸ்பரட்ணம், ப. தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு.

7. மணிமாறன், வி. வடமராட்சியில் அடையாளம் காணப்படும் மரபுரிமைச் சின்னங்கள், திருவுடையாள் பிரதேச மலர் (4), பிரதேச செயலகம் வடமராட்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த கனவு

**2024**ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நாடுகளின் பட்டியலில் பிரான்ஸ் (பரிஸ்), அமெரிக்கா (லொஸ்ஏஞ்சல்ஸ்) , இத்தாலி (றோம்), ஹங்கேரி (புடபெஸ்ற்), ஜேர்மனி (ஹம்பேர்க்) ஆகியவற்றிடையே போட்டி நிலவினாலும் சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பட்டியலில் இருந்து ஜேர்மனியும் இத்தாலியும் உத்தியோகபூர்வமாக விலகுவதாக அறிவித்திருந்தன. அதேபோல தற்போது ஹங்கேரியும் விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஹங்கேரி இதுவரை ஒலிம்பிக் போட்டியை ஒருமுறை கூட நடத்தியதில்லை. 1916, 1920, 1936, 1944, 1960 ஆம் ஆண்டுகளில் போட்டியை நடத்துவதற்கான பட்டியலில் இருந்தாலும் இறுதிநேரத்தில் அதற்கான வாய்ப்புக்களை இழந்தே வந்திருக்கின்றது. ஆனாலும் 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான போட்டியில் ஏற்கனவே ஜேர்மனியும் இத்தாலியும் விலகிய நிலையில் ஹங்கேரிக்கான வாய்ப்பும் பிரகாசமாகவே இருந்தது.

ஆரம்பத்தில் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான பெருநகரமாக ஹங்கேரியின் புடபெஸ்ற் நகரம் இல்லை என்ற சர்ச்சை எழுந்தது. ஆனாலும் "பெருநகரங்களில் மாத்திரம் நம்பிக்கை வைக்காமல் மத்திய நகரமான புடபெஸ்ற் நகரம் மீதும் நம்பிக்கை வைத்து வாய்ப்புத் தாருங்கள் நடத்திக்காட்டுகின்றோம்" என்ற கோரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து ஹங்கேரியும் போட்டிக்களத்தில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் ஹங்கேரி அரசின் மீது ஒலிம்பிக்போட்டிகளை நடத்துவதில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதோடு போட்டிகளுக்குச் செலவழிக்கப்படும் பணத்தை கல்வி, சுகாதாரம் , போக்குவரத்து என்பவற்றுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வருட ஆரம்பத்தில் சிவில் அமைப்புகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்து ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டுமா? வேண்டாமா? என்பதை அறிவதற்காக புடபெஸ்ற் நகர மக்களிடையே வாக்கெடுப்பொன்றை நடத்தும் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தனர்.

கடந்த பெப்ரவரி 17ஆம் திகதிக்குள் 138, 527 கையெழுத்துக்களை சேகரித்தால் புடபெஸ்ற் மக்களிடையே வாக்கெடுப்பை நடத்த முடியும் என அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அன்றைய தினம் எதிர்பார்த்ததைவிட மொத்தம் 266, 151 கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. இதன்விளைவாக ஹங்கேரி அரசாங்கம் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து விலகும் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

எது எப்படியோ தற்போது 2024 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான இறுதிப்பட்டியலில் அமெரிக்கா , பிரான்ஸ் ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே களத்தில் உள்ளன. 2017 செப்ரெம்பர் மாதம் பெரு நாட்டில் நடைபெறவுள்ள 130ஆவது சர்வதேச ஒலிம்பிக் குழுக் கூட்டத்திலேயே இதன் இறுதி முடிவு தெரியவரும்.



கடந்த வாரம் WWE பிரபலங்களான மக்மஹன் , அவரது மகன் ஷேன் மக்மஹன் , மருமகன் றிபிள் எச் ஆகியோர் குடும்ப சகிதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பை சந்தித்தபோது..

# தற்காலிக ஓய்வு

பார்ஸிலோனா அணியின் முகாமையாளரான லூயிஸ் என்றிக் இந்தப்பருவகாலத்துடன் முகாமையாளர் பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார். 46வயதான என்றிக் ஸ்பெயின் அணியின் முன்னாள் மத்திய கள வீரராவார். இவரது மூன்று வருடகால ஒப்பந்தம் இந்தப்பருவகாலத்துடன் முடியவுள்ளநிலையில் அவராகவே பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார். இந்த மூன்று வருடங்களில் பார்ஸிலோனா அணி இரண்டு தடவைகள் லாலிகா தொடரில் சம்பியன் பட்டத்தையும் ஒரு சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தையும் வென்றுள்ளது. அத்தோடு தற்போது நடைபெற்று வரும் லாலிகா தொடரில் சில போட்டிகள் மீதமுள்ள நிலையில் புள்ளிப்பட்டியலில் இரண்டாமிடத்திலும் பார்ஸிலோனா அணி உள்ளது.

என்றிக்கின் சிறப்பு என்னவென்றால் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை பார்ஸிலோனா அணிக்காக விளையாடியவர். ஓய்வு பெற்றபின் 2008ஆம் ஆண்டு பார்ஸிலோனா அணியின் 'பீ' அணிக்கு முகாமையாளராகப் பொறுப்பேற்று பின்னர் 2015ஆம் ஆண்டு பார்ஸிலோனா அணிக்கு முகாமையாளரானமை தான்.

ஓய்வு குறித்து என்றிக் – "இது ஒரு கடினமான தருணம் என்றாலும் பல மறக்க முடியாத அனுபவங்களை இந்தக் காலப்பகுதி எனக்கு அளித்துள்ளது. மூன்று வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றியதனால் சற்று ஓய்வு தேவைப்படுகின்றது. எனது அடுத்த கட்ட நகர்வை மேம்படுத்துவதற்கு இந்த ஓய்வைப் பயன்படுத்த எண்ணியுள்ளேன்" என்கிறார். இது குறித்து பார்ஸிலோனா கழகத் தலைவரான யோசப் மரியா – "என்றிக்கின் முடிவை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். எமது கழகத்துக்கு சிறப்பான வெற்றிகளை அவர் பெற்றுத்தந்துள்ளார். சிறந்த முகாமையாளரான என்றிக் வீரர்களுக்கு எப்போதுமே உந்துசக்தியாக இருந்துள்ளார்"



என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் கடந்த வாரம் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் பிஎஸ்ஜி அணியிடம் 4 : 0 என்ற ரீதியில் பார்ஸிலோனா படுதோல்வி அடைந்ததனால் என்றிக் கடும் விமர்சனத்துக்கு ஆளாகி இருந்தார். இதுகூட அவரது பதவி விலகல் முடிவில் ஒரு தாக்கத்தைச் செலுத்தி இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

# பெரிய மனிதர்




கடந்தவாரம் கிரிக்கெட் உலகில் அதிகம் பேசப்பட்டது ஒரு பெரிய மனிதரைப் பற்றித் தான். அவர் தான் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் உள்ளூர் வீரரான ரகீம் கொர்ன்வல். அன்ரிகுவாவில் பிறந்த 24 வயதான ரகீம் 6 அடி 4 அங்குலம் உயரமும் 140 கிலோ எடையும் உடைய வீரர். பெரும்பாலான மேற்கிந்தியத்தீவு இளைஞர்களின் முதற்தெரிவாக கூடைப்பந்தாட்டமே இருப்பதுண்டு. ரகீமின் உயரத்துக்கு அதுசாத்தியமாக இருந்தாலும் அவர் ஆர்வம் காட்டியது என்னவோ கிரிக்கெட் மீது தான். வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் ஓவ் ஸ்பின் பந்து வீச்சாளருமான ரகீம் 18 வயதிலேயே உள்ளூர் போட்டிகளில் அறிமுகமாகி 25 முதற்தரப்போட்டிகளில் இதுவரை விளையாடி 125 விக்கெட்டுக்களை கைப்பற்றி உள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபையின் பதினொருவர் அணிக்கும் இடையில் நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் மே.கி.ச.பதினொருவர் அணி 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து திணறிய பொழுது ரகீம் 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியை ஒரு கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். அத்தோடு பந்துவீச்சிலும் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றி இருந்தார். இந்தப் போட்டியில் மே.கி.ச.பதினொருவர் அணி தோல்வி அடைந்தாலும் ரகீமின் பங்களிப்பு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. முன்னதாக 2015ஆம் ஆண்டு இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதும் பயிற்சி ஆட்டத்தில் ரகீம் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது துடுப்பாட்டத்தில் உத்தி ரீதியான சில குறைபாடுகள் இருந்தாலும் கிரன் பொலாட்டின் சாயல் குறிப்பாக சிக்ஸர் அடிக்கும் பொழுது இவரது ஆட்டத்தில் தெரிவதாக ரசிகர்கள் குறிப்பிடுகின்றனர். அத்தோடு இவரது உயரம் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஜோயல் கார்னரின் தோற்றத்தை நினைவு படுத்தினாலும் ரகீமை விட 4 அங்குலம் உயரம் கூடியவர் ஜோயல் கார்னர்.

அதுபோல கிரிக்கெட் உலகில் அதிக எடை கொண்ட வீரராக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் வார்விக் ஆம்ஸ்ரோங்கே (133 கிலோ) விளங்குகின்றார். காலக்கிரமத்தில் ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட ரகீம் சர்வதேச போட்டிகளுக்கு அறிமுகமாகும் சந்தர்ப்பத்தில் ஆம்ஸ்ரோங்கின் சாதனையை நிச்சயம் முறியடிப்பார் என்று நம்பலாம்.

**தொகுப்பு : சி.விமலன்**

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 11.03.2017 [illegible] யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org